
பதிவு இலக்கம் : 105267
வார இதழ்

# தீபம்


19.05.2019 தீபம் – 183
விலை ரூபா 30.00

சாம்பற் காற்று
குரல்கள் இல்லை
எச்சங்களைக் காலம் மூடுகிறது
இதயத்திற் புதைத்துள்ளோம்
எந்தத் திரைகளாலும்
மூட முடியாது அவற்றை
ஒரு அணையா விளக்கு
பூமிக்கும்
வானத்திற்கும் நடுவில்
மறக்கவில்லை எதையும் நாம்

– கவிஞர் பாவா



இது தமிழருக்கான தனித்துவமான பத்திரிகை





விருட்சமாக நின்ற இடத்தில்
நிழல் கூட இல்லாமல்
கைவிட்டவர்கள் போல்
நிற்கின்றோம்.

நினைவழியா
பெருவெளி கொண்ட பரப்பில்
நினைவுகள்
தேங்கிக்கிடக்கும் மனதில்
நடந்தவை
நிரம்பி வழிகின்றன.

அடையாளம் மூடிய புதைகுழிகள்
திறந்தே கிடக்கின்றன
அழுவதற்கோர் இடம் வேண்டும்.

பரந்தவெளி தாகம் வற்றிய
நாள்களில்
மீட்பர் எவரும் இல்லை.

தளிர் கூட தகனமடைந்த மண்ணில்
விதைப்பவர்கள்
விதைத்ததை மூடுகின்றனர்.





மூர்க்கத்தனமான தாக்குதல்களிலும்
முள்ளிவாய்க்கால் வரை
எல்லோரும் ஒன்றாகப் போனோமே.
இந்த ஒற்றுமை
இப்ப வருமா
இனி எப்ப வரும்?

நிறையக் கீறல்கள்
விழுந்தும்
சாயம் பூசாத கடற்கரை.
உயிர்களைப் பறிக்க பறிக்க
வீழ்ந்துவிடாமல்
நங்கூரமிட்டது.

காவியமான நிகழ்வுகள்
பொறுமைக்குள் மூழ்கி
மீளமுடியாமல்
அவதிப்படுகிறது.
நடைமுறை
நிகழ்வுகளின் நிழல்
மறக்க முடியவில்லை.





முள்ளிவாய்க்காலில் இருந்து
நாங்கள்
தப்பி வந்தோம் என்று
ஒருவரும் சொல்லவில்லை.
ஒவ்வொரு குடும்பத்திலும்
இத்தனை பேரை
இழந்து வந்தோம்
என்று சொல்கிறார்கள்.

வாழ்வின்
கடைசிச் சந்தர்ப்பத்திலும்
காப்பாற்றுங்கள்
என்று கேட்காமல்
மக்களோடு மக்களாக நின்று
வெளியேறிய
ஒவ்வொருவரின் மூச்சுக் காற்று.


# மே 18 2019





தமிழர்கள் நீதி கிடைக்கும்
என்று
கடைசிவரை நினைத்திருந்தார்கள்.
தமிழர்களுக்கு
அநீதியை விளைவித்ததாக
ஒரு நாடும்
நினைக்கவில்லை.

முள்ளிவாய்க்கால் வரை
புலிகளின் பின்னே
நம்பிக்கையுடன் தான்
மக்கள் சென்றார்கள்.
ஆனால்
புலிகளிடம் இருந்து
மக்களை மீட்டதாக
அரசு சொல்லுகிறது.



வானம் இறங்கி வந்து
நட்சத்திரங்களையும்
நிலவினையும்
பரிசாக
வழங்கிவிட்டுச் செல்லும்
காலம் வரும்
என்றிருந்தோம்.
ஆனால்
எமது வானத்து
நட்சத்திரங்களையும்
நிலவினையும்
இழந்து நிற்கின்றோம்.

கவிதை, படங்கள் :
துன்னாலை செல்வம்




1968 ஆம் ஆண்டில் சிரித்திரன் சுந்தர் அவர்கள் வரைந்த கருத்தோவியம் இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்

வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
19.05.2019 இதழ் -183
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# உறுதி எடுக்க இறுதி வாய்ப்பு

முடிவிலியாய்த்தொடரும் ஒரு நெடுந்துயர வரலாற்றை எழுதி விரைகிறது காலம். காற்றுடன் கண்ணீரும் சோறும் மௌனமும் மரணமும் மட்டுமே வாழ்வின் விதிக்கப்பட்ட சாப விதியாக தமிழ் மானுடம் முள்ளி வாய்க்காலில் நடக்கத் தொடங்கி ஒரு தசாப்த முடிவில் திசையறியா வழிகளினூடாக காலடியைத் தள்ளாடித் தள்ளாடி தொடர்கிறது.

மானுடம் வெல்வதாகவுமில்லை முழுமையாகத் தோற்பதாகவுமில்லை.

வெறுமனே எதிர்பார்ப்புகள் எதுவுமற்ற நம்பிக்கைகளுடன் வாழ்வைத் தொடர்வதென்பது எப்படித்தான் தமிழனுக்கு சாத்தியமாகிறன்றதோ?

அதிசயந்தான்! அடுத்த தேர்தல்களுக்கான புதிய புதிய யுத்திகளுடன் அதே பழைய அரசியல் சூனியக்காரர்களுள் தமிழ் மானுடத்தை வியூகமிட ஆரம்பித்துவிட்டார்.

மனம் சலிப்பற்று சோர்ந்து நிற்கும் தமிழ் மானுடத்தை புனைகதைகளைக் கூறி புல்லரிக்க வைத்து, கைதட்ட வைத்து அவர்களது கவனத்தை தம்பக்கம் திருப்பி விடும் லாவகம் அவர்களுக்குரிய பாரம்பரிய முதுசச் சொத்து.

தமிழ் மானுடர்க்கு கண்ணீர் பெருக்கி அழவும் கைதட்டி சிரிக்கவும் கற்றுத் தந்த காலம் கவனமாக சிந்திக்கக் கற்றுக் கொடுக்காததன் பின்னுள்ள 'சதி'யின் சூத்திரதாரி யார் என்பது இன்னமும் புரியவில்லை.

விம்மலும் முனகலும், நெடு மூச்சும், வெப்பியாரமும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிமிடங்களில் மட்டும் வருகிறதே - எப்படி?

அப்போது கூடவே வெஞ்சினமும் சீற்றமும், சிறுமை அப்போது பொங்கும் மனோ வலிமையும் கிளர்ந்தெழாது போவது ஏன்?

அட, மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக உணர்வெழுச்சி கொண்டு உரிமைக்கென சிலிர்த்து நின்ற உலகையே பிரமிக்க வைத்த அந்த மகா ஆளுமையை எங்கே குழி தோண்டி புதைத்து விட்டு ஏதிலியராக சலுகைகளுக்காகவும், நிவாரணத்திற்காகவும் கையேந்தியும் ஆள்வோர்க்கு அடிமைகளாக கால் பிடித்தும் நிற்க வழி வகுத்து தந்து உங்களின் முதுகில் ஏறி அரசியல் சவாரி செய்யும் அற்பர்களை எத்தனை காலத்துக்குத் தான் உங்களின் பாதுகாப்பு கவசங்களாக நம்பப்போகிறீர்கள்?


வட்டுவாகலையும், நந்திக்கடலையும், முள்ளிவாய்க்காலையும் இன்னும் எத்தனை தசாப்தத்திற்கான உங்களின் கண்ணீர் உப்பு கலக்கும் மண்ணாகவும் ஒப்பாரி ஒலி மட்டுமே வலம் வரும் காற்றுறை தேசமாகவும் அடையாளப்படுத்தி அவமானப்படுத்தப்போகிறீர்கள்?

காலமும் வரலாறும் உங்கள் முகங்களில் காறித்துப்பும் வரை விழித்துக் கொள்ளவே மாட்டீர்களாயின் -

வருங்கால உங்களின் தலைமுறை கம்பீரமான மானுட வரலாற்றை அடையாளப்படுத்தி நிற்கப்போவது கிடையாது.

அதுவே காலத்தின் தீர்ப்பாகவும் இருக்க நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?.

சிந்தியுங்கள்.



## இருட்டொலி

எல்லையற்று விரிகிறது காலம்
முடிவிலி எனத் தொடர்கிறது துயரம்
மானுடம் தோற்பதாகவும் இல்லை
வெல்வதாகவும் இல்லை....

வானம் பாடிகளதும்
மானம் பாடிகளதும்
இசைக்க மறந்த குரல் வளைக்குள்
இடறிக் கிடக்கிறது துயரம்

விம்மலொலி இசையாகாது
இனிய பாடல் சோகமானது – எனில்
சோகம் தான் இசையா?


காற்று மட்டும்
அனைத்தையும் உள்வாங்கியபடி
புயலுக்கு முந்தியதான
மௌனப் பேரமைதி காக்கிறது

குறித்துக் கொள்ளுங்கள்....
துப்பாக்கிக் குண்டிலிருந்து
அரசியல் அதிகாரம் பிறக்கிறது
வெடிகுண்டில் இருந்து
ஆன்மீக அரசியல் பிறக்கிறது
கறுப்பு நாட்களை
அச்சத்துடன் எதிர்கொண்டபடி
நாடும்...
மக்களும்...



தேமதுரத் தமிழோசை
உலகமெலாம்
பரவும் வகை செய்தல்
வேண்டும்.....
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம்
தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்.
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள்
சொல்லுவதிலோர்
மகிமை யில்லை
திறமான புலமையெனில்
வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல்
வேண்டும்.

- மகாகவி
சுப்பிரமணிய பாரதியார்.



# உலகமே ஏந்திய மே 18 நினைவு நிகழ்வுகள்

நன்றி ஓவியம்: ரவி பலட் தமிழ்நாடு









கடந்த 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலையின் 10வது ஆண்டு நினைவு கூரப்பட்டது. கடைசிவரை நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிப்பார்களோ என்ற அச்சத்தில் மக்கள் இருந்தாலும் அதைவிட உறவுகளுக்கான அஞ்சலிகளை செலுத்த வேண்டும் என்ற உணர்வு அனைவரிடமும் மேலோங்கி இருந்தது. எது வரினும் நிகழ்வுகளை நடத்தவேண்டும் என்ற தோரணையில் அதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

மே 18 அதிகாலையிலேயே மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கிப் படை எடுக்க ஆரம்பித்திருந்தனர். நாலா புறமும் இருந்து மக்கள் வந்து காலை 10 மணி அளவில் நிகழ்வுக்கான ஆரம்பம் தொடக்கி வைக்கப்பட்டது.

பிலதான ஈகைச் சுடரை ஏற்றி வைப்பதற்கான நிகழ்வில் போரின்போது தனது அன்னையின் மடியில் பால் குடிக் குழந்தையாக இருந்து செல்வீச்சினால் தனது அன்னையைப் பறி கொடுத்த பின் அந்தப் பேரவலத்தில், மரணத் தறுவாயில் இருந்து மீண்டு வந்த குழந்தை ராகினி கலந்து கொண்டு சுடரை ஏற்றி வைக்க நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வுச் சூழ்நிலை அனைவரையும் 2009 மே 18 நாட்களை நோக்கி நகர்த்திக் கொண்டது. கண்ணீர் மல்கக் கதறி அழுதவர்கள் பலர். மத குருமார்கள் பலர் பிரசன்னமாகியிருந்தனர். அரசியல்வாதிகள் பலரும் தம்மை அடையாளப்படுத்தாது எதுவித ஆர்ப்பாட்டமுமில்லாது நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலியைச் செலுத்திவிட்டுச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

போகும் வழி நெடுகிலும் இராணுவத்தினர் சோதனைகளில் ஈடுபட்டு இருந்தாலும் நிகழ்வுக்கு இடையூறாக அவர்கள் நடவடிக்கைகள் அமைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதற்கு எதுவித தடையாகத் தாம் இருக்கப் போவதில்லை என இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கா ஏற்கனவே ஒரு செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இலங்கையில் நடைபெற்று பல அனர்த்தத்தைத் தோற்று வித்த ஐ.எஸ் பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர் இலங்கை அரசியலில் பலத்த மாற்றங்கள் ஏற்பாடவிட்டாலும் சிங்கள மக்கள் மனதில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. பொதுவாக அரசியல்வாதிகள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கவனமானது மக்கள் நலனில் இல்லை என்றதும் ஆட்சிக் கதிரை களைத் தம்வசம் வைத்திருக்கக் கூடிய ஆர்வத்திலும் தான் அவர்கள் நிகழ்சிநிரல் அமைந்திருக்கிறதென்றதையும் மக்கள் இனங்காணக் கூடியதாக இருந்ததாக அரசிய வல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நாட்டில் அதுவும் சிங்கள நல்லிணக்க எண்ணங் கொண்டவர்களிடம் ஏற்கனவே தமிழர் போராட்டம் பற்றிக் காணப்பட்ட தெளிவு தற்போது பலரிடம் தென்படுவதைக் காணலாம். அத்தகைய விதமாக ஏற்பட்ட மனமாற்றங்களின் எதிரொலியாகவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அரசியல் மற்றும் இராணுவத் தலையீடு அற்றுக் காணப்பட்டதையும் சொல்லாம். இருந்தும் பௌத்த பேரினவாதிகள் சிலர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்கத் தமிழ் மக்களை அனுமதிக் கூடாது என்று வற்புறுத்தியதாகவும் செய்தி கிட்டியிருக்கிறது.

சர்வதேசத்தில் பல இடங்களில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப் பட்டது.குறிப்பாக பிரான்ஸ் நகரில் லா சப்பல் என்ற இடத்தில் பல ஆயிராக் கணக் கான மக்கள் கூடி நின்று கொல்லப்பட்ட உறவுகளுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்திக் கொண்டதாக இணையத்தில் செய்திகள் புகைப்படங்களுடன் வெளியாகியிருக்கின்றன. அதேபோலசு விஸிலார்ந்திலும் கொண்டாடப்பட்டது. லண்டன் மாநகரில் முள்ளிவாய்க்கால் நிஜனைவுத் தூபி அமைந்துள்ள உலகத் தமிழ் வரலாற்று மையவளாகத்தில் உணர்வுபூர்வமாக நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெற்றதா எம் உணர்வு?

காவியா

ஒரு சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பும் பெண்களின் ஆளுமையும் அனைத்து சக்திகளாலும் ஆழமாக உள்நோக்கப்படுகின்றது. மேலைத்தேய நாகரீகத்திலும் சரி கீழைத்தேய நாகரீகத்திலும் சரி பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. பெண் சமுதாயத்தில் ஏற்படும் வழுக்களும் தவறுகளும் அந்த சமுதாய இனவிருத்தியை முற்று முழுதாக அழித்து அந்த இனத்தையே பாழடையும் நிலைக்கு கொண்டுசெல்லும் சக்தி வாய்ந்த ஒன்றாக மாறிவிடும் என்பதை நாம் உற்றுநோக்க வேண்டும். ஒவ்வொரு புரட்சியிலும் ஒவ்வொரு எழுச்சியிலும் மறைமுகமாக ஒரு பெண் நிச்சயம் வீற்றிருப்பாள். அவளை நாம் ஆழமாக கவனிக்க தவறுகின்றோம்.அல்லது ஆணாதிக்க சமுதாயம் பெண்களின் எழுச்சியை மலர்ச்சியை இருட்டடிப்பு செய்து விடுகின்றது என்றும் கூறலாம்.

முள்ளிவாய்க்கால் முடிவுவரை எம் பெண்களை எவ்வாறு நாம் உற்று நோக்கினோம் அவர்களின் செயற்திட்டங்களை எவ்வாறு ஈழ சமுதாயம் கவனித்துக்கொண்டது என்ற ஒரு நோக்காக இந்த பதிவினை பதிகின்றேன்.

2009 ஆண்டு காலத்திற்கு முன்னர் பெண்களை நாம் பல கோணங்களில் நோக்கியிருந்தோம்.அந்த வழிமுறைகளை இப்போது நாம் கவனித்தால்

1) போராட்ட களத்தில் தீர்க்கமான போராடிய பெண்கள்
2) அரசியல் துறையில் நேர்த்தியாக பணிபுரிந்த ஆளுமையான பெண்கள்
3) நீதித்துறையில் நெருப்பாக நின்று தீர்ப்பெழுதிய பெண்கள்
4) பாதுகாப்பு பணியில் கடமையாற்றிய பாதுகாப்பு பெண்கள்
5) நிதித்துறையில் நியாயமாக நிதியை கையாள தெரிந்த நேரிய பெண்கள்
6) கல்வியில் முன்னணி பெற்று கல்வித்துறையில் சாதனை பெற்ற பெண்கள்
7) விளையாட்டு துறையில் வீரியம் பெற்ற விளையாட்டு துறை பெண்கள்
8) கலை, பண்பாட்டு, நடன துறையில் மிடுக்காக மிளிரும் ஒழுக்கம் நிறைந்த பெண்கள்
9) குடும்பத்தில் அழியாத காதல் கொண்டு குடும்ப படகை சரியாக வழிநடத்திய மாலுமி பெண்கள்

இந்த கட்டமைப்பை இன்று நாம் எவ்வாறு நோக்குகின்றோம் என்று கவனித்தால் முதல் ஐந்து தொழிற்பாட்டில் ஈடுபட்ட பெண்களை வாழ்விழந்தவர்கள் அல்லது வலுவிழந்தவர்களாக நோக்குகின்றோம் அவர்களை சமூக அமைப்புக்களுடன் இணைத்து வாழ முடியாதவர்களாக மாற்றி விடுதலை புலிகளின் கட்டமைப்புக்குள் வாழ்ந்த பெண்களை நாம் அணைத்துக்கொண்டால் அவர்களால் எமக்கு தொந்தரவு என்று எண்ணி அவர்ளை ஒதுக்கி சமூக சூழலில் இருந்து தனித்து விட்டிருக்கின்றோம்.விடுதலை போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி எம்மை பாதுகாத்த எம் நாட்டு தேவதைகளை சமூகத்தின் முன்னால் விபச்சாரிகள் என்றும், வறுமைப்பட்டு வாழ்வதால் தீண்ட தகாதவர்கள் என்றும் கூறிக்கொண்டு எம்மை நீதியாளர்களாக காட்டிக்கொண்டு வாழ்கின்றோம்.

விடுதலை போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்த பெண்களை விலைபேசி அவர்களின் ஆளுமையை, அவர்களின் எழுச்சியை முடமாக்கி அவர்களை ஏதுமற்றவர்கள் போல உணரவைத்து அவர்களின் நாளாந்த செயற்பாட்டினை முடக்கி வைத்திருக்கின்றோம். "விடுதலை போராட்டத்தில் நீங்கள் ஈடுபட்டது மாபெரும் குற்றம்" என்பது போல சித்தரித்து அல்லது அவ்வாறான ஒரு மனநிலையை உருவாக்குவதில் பணம் படைத்த கல்வியாளர்கள் என்று கூறும் பலரும் சமூக சேவை செய்கின்றோம் என்று கூறும் சிலரும் காரணமாக இருக்கின்றோம்.

உண்மையில் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டது தவறா?

இல்லை எமது உரிமையை பெற்றுக்கொள்வதற்காக அந்த நேரத்தில் இருந்த உறுதிமிக்க ஒரு அமைப்புடன் இருந்து எமது விடுதலையை வேண்டியது எவ்வாறு குற்றமாக முடியும்? எமது வரலாற்று கடமையை சரியாக செய்யாமல் ஓடி ஒளிந்து எமக்கான அடிப்படைவாழ்வினை பெற்றுக் கொள்ளவும் பணம் சம்பாதிக்கவேண்டும் என்றும், பாரிய பொய்களை சொல்லி எமது விடுதலை போராட்டத்தை தீவிர வாதமாக சித்தரித்து தமது நலவாழ்வினை பெற்றுக் கொள்வதற்காக விடுதலை புலிகளால் நாம் பாதிக்கப்பட்டோம் என்று வாய்கூசாமல் பொய் பேசியவர்கள் பலர் தமது வாழ்விரிமையை மேலை நாடுகளில் பெற்றுக்கொள்ள எம் இனத்தின் விடிவிற்காக போராடிய அனைவரையும் தூக்குமேடையில் ஏற்றினோம் என்ற குற்ற உணர்வற்று, தேசம்விட்டு வேறு தேசம் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இப்படி வாழும் பல ஆண்களும் பெண்களுமே வெட்கி தலைகுனிய வேண்டியவர்கள் என்று கூறலாம். இவர்களே இன்று ஈழத்தில் போராட்டத்தில் பங்குபற்றிய வீரமிக்க பெண்களை ஏதுமற்றவர்கள் போல சித்தரிப்பதில் முதன்மை பெற்று விளங்குகின்றார்கள். இவர்களாலேயே பலவிதமான இடர்பாடுகளை ஈழ பெண்கள் சந்திக்கின்றார்கள்.

2009 ஆண்டு காலத்தின் முன்னர் ஒரு குடும்ப பொறுப்பை சுமக்கும் பெண்களாக இருந்தாலும் போராட்ட களத்தில் மேம்பட்டு வாழ்ந்த பெண்களாக இருந்தாலும் சரி சமூக சூழல் சிந்தனை பெற்றவளாக பெருவலு பெற்ற



சிந்தையின் சக்தியாக விளங்கினார்கள் . தத்துவம் என்று தெரியாமலே தத்துவ ஒழுக்க கோட்பாட்டில் வாழ்ந்து வந்தார்கள் . போராட்டத்தை சுமத்த பெண்களை விடுதலை கட்டமைப்பு புடம்போட்டு ஒழுக்க சிந்தனை சக்திகளாக ஆளுமையின் தோற்றத்தின் எதிரொலியாக ஆத்ம சிந்தையின் உயிர்ப்பாக வளர்த்தெடுத்தது. பெண்களின் சக்தியை மிகவும் சிறப்பாக பேணியது .

குடும்பம் என்ற பாரத்தை சுமந்த ஒவ்வொரு பெண்களும் "குடும்பம்" என்ற பாரத்தை சுமப்பது தனது அத்தியாவாசிய தேவை என்பதை அவளை சார்ந்த சொந்தங்கள்,உறவுகள், அவளை சார்ந்த சமுதாய, சூழல் உருவாக்கி கொடுத்திருந்தது. குறித்த ஒரு குடும்பத்தில் பிணக்கு ஏற்படும்போது குடும்ப உறவுகள் தோளோடு தோள்நின்று பிணக்குகளை தீர்க்குவைக்கும் நிலை காணப்பட்டது. ஒவ்வொரு குடும்ப அங்கத்தவரும் சார்புநிலை கொண்டு வாழ்ந்தார்கள். சமூக கட்டமைப்பில் ஒற்றுமையும் பணத்தின் ஆதிக்கத்தின் அளவும் மிகவும் குறைவாக காணப்பட்டது .பணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பதற்கு பதிலாக உறவுகளுக்கும் சொந்தங்களுக்கும் குடும்ப அமைப்பின் உ்யரிய கோட்பாடுகளுக்கும் முக்கியம் அளிக்கப்பட்டது .

ஆனால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் உருவாகிய

சமுதாயம் மிகவும் மோசமான தவறான வழிகாட்டிகளால் உருவாக்கப்பட்டு உள்ளது. உதாரணமாக கல்வி துறையில் ஆளுமை படைக்கவேண்டிய பெண்களில் பலரும் காதல் என்ற போலி வலைக்குள் சிக்கி வாழ்கின்றனர். பாடசாலை காலத்தில் "காதல்" என்பது சாதாரணமாக ஏற்படும் ஒரு உணர்வு என்பதை தெளிவுபடுத்த முடியாத நிலையில் இன்றைய பாடசாலை ஆசிரிய சமூகமும் படித்தவர்களும் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு அறிவுரீதியாக சிந்திக்க தெரியாமல் காணப்படுவதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆழமாக அலசி ஆராய்ந்திட வேண்டும். இன்று பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அல்லது எந்த ஒரு துறையிலும் இருக்கும் நபர்களை நாம் உற்று நோக்குவோமாக இருந்தால் அவர்களின் சிறுபிராயத்தில் ஏற்பட்ட வடுக்களும், தவறுகளும் ஆரோக்கியமான ஒரு சூழலை அல்லது சமுதாயத்தை உருவாக்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்று கூறிட முடியும்.

"போர்" என்பது சாதாரண ஒரு மனிதனிடம் மட்டும் தாக்கம் செலுத்துவதில்லை. . குறித்த அந்த இனத்தையே தாக்கி அழித்திடும் வல்லமை கொண்டதாக இருக்கும். அது அந்த இனத்தின் மீது அந்த இன விருத்தியின் மீது அந்த வம்சத்தின் மீதே பாரிய தாக்கம் செலுத்தும் சக்தியாக இருக்கின்றது. இன்றைக்கு எந்த துறையில் பணிபுரியும் நபர்களாக இருந்தாலும் அவர்களின் இளமை காலத்தில் போரின் இறுக்கமான சூழலை சந்தித்து இருந்ததால் அவர்களின் அடிமனதில் சூது, வஞ்சம், ஒழுக்கப்பிறழ்வு, ஏமாற்றம் செய்தல், தவறான செயற்பாட்டில் ஈடுபடுவதில் அக்கறை போன்ற இயல்புகள் சாதாரணமாக அவர்களின் மனதில் புரையோடி இருக்கும் இயல்பாக இருக்கின்றது. அதனாலேயே தான் இன்று ஈழத்தில் உள்ள சகல துறைக்ளிலும் உள்ள பெண்களின் மீதான வன்முறைகள் பரவலாக காணப்படுகின்றது.

இன்று ஈழத்தில் காணப்படும் ஒழுக்க மீறல்கள், மது, போதை, சினிமா மீதான மோகம், வாள்வெட்டு கலாசாரம், அந்நிய ஆடம்பர மோகம், என்பவை தொழிநுட்ப தாக்கத்தால் சமூக வலைதள ஆதிக்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று மேலோட்டமாக கூறி வந்தாலும், போர் சூழலில் வாழ்ந்த இளைய சமுதாயத்தின் ஆணிவேரில் ஏற்பட்ட நச்சு கிருமிகளின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவின் பிரதிபலனே இன்றைய ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆணிசக்கரம் என்பதை அறிந்திட மறுக்கின்றோம்.

போர் சூழலில் வாழ்ந்த இளைய சமுதாயமே இன்று சமூக சக்திகளாக மாறி இருக்கின்றார்கள் . ஏற்கனவே அவர்களின் மனதில் ஆழமாக புரையோடியுள்ள சமூக கேடான சிந்தனைகளின் பிரதிகளாகவே இன்றைய இளைய சமுதாயம் வளர்த்தெடுக்கபடுகின்றது.

அதனாலேயே எமது இளைய சமுதாயம் திக்கற்றவர்களாக வாழ்கின்றனர் . ஊடக துறை தொடக்கம் சுற்றுலாத்துறை வரை போரின் பிடியில் வாழ்ந்த இளைய சமுதாயத்தின் கைகளிலேயே இருப்பதால் ஈழத்தின் சமுதாய நிலையில் அலங்கோலமான சித்தாந்தமே பரவியுள்ளது. ஆகவே இவர்களின் பிடியில் இருந்து எம்மின மக்களை பேணி பாதுகாத்திடவேண்டிய பாரிய கடமை படித்த சமூகத்தின் மீதான அக்கறையுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு எனலாம்.

ஈழத்தில் வாழும் பெண்களை நாம் அறிவுள்ள பெண்களாக போரின் வடுவில் பாதிக்கப்பட்ட இளைய சமுதாயத்தின் வழிநடத்தலில் இருந்து காக்கும் பாரிய பொறுப்பில் உள்ளவர்களாக இருக்கின்றோம். ஒரு சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சியையும், எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தினாலேயே அந்த சமூகத்தை அழிவில் இருந்து காப்பாற்றிட முடியும். இன்று நாகரீக மோகத்தில், பணத்தின் ஆதிக்கத்தில், சுயநல தன்குடும்ப நலனில் அக்கறை கொண்டுள்ள பெண்களை சமூக சார்பு சிந்தனை பெற்ற பெண்களாக மாற்றி அமைப்பதே எமக்கு முன்னுள்ள பாரிய சவால்களில் ஒன்றாக இருக்கிறது. அதுமட்டுமன்றி "ஒழுக்கம்" என்ற பதம் உயிரிலும் மேலான சக்தி கொண்டது என்பதையும், "அழகு" என்பது மனத்தின் அழகிலே தாக்கியுள்ளது என்பதையும் புரியவைக்கவேண்டிய தேவையில் ஊடகங்களும், கல்வியாளர்களும், சமூக சிந்தனையார்களும் வாழ்கின்றார்கள்.

இன்று ஈழத்தில் சிறந்த வழிகாட்டிகள் இன்மையும் சிறந்த முன்னோடிகள் அற்ற நிலையும் ஆளுமையான தலைவர்கள் அற்ற நிலையும் பல சமூக குடும்ப உளவியல் பிரச்சனைகளுக்கு காரணம் எனலாம். குறித்த தவறுகளை நாம் தீர்க்க தவறுமிடத்து எமது இனம் மண்ணோடு மண்ணாக அழிந்து போவதை யாரும் தடுத்திட முடியாது. இரத்தம் இன்றி, யுத்தம் இன்றி, கத்தி இன்றி ஒரு இனம் அடியோடு அழிந்து போகும் இனமாக ஈழத்தமிழினம் மாறிவிடக்கூடாது என்பதே எமது மேலான கவலைகளில் ஒன்றாக இருக்கின்றது. ■

# கொத்துக் கொத்தாய் வெடித்தெழும் கேள்விகள்

## -முடிவிலியாய் தொடரும் முள்ளிவாய்க்கால் அவலம் -

- பிறைவாணன் -

மு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் வெளிவந்தும் அதற்கான விசாரணைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை என்பது இராணுவத்தினரை பாதுகாக்கும் செயற்பாடு என்பது ஒருபுறம் இருக்க தடைசெய்யப்பட்ட இந்த குண்டுகளை வழங்கிய நாடுகளை பாதுகாப்பதற்காக விசாரணையை கிடப்பில் போட்டுள்ளார்கள்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தியமைக்கு வலுவான ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது குண்டுவிழுந்து வெடித்த இடங்கள் உட்பட அந்தக் குண்டில் காயப்பட்டவர்களின் உடலில் பரவியுள்ள நஞ்சு தொடக்கம் இந்தக் குண்டுதான் என்பதை ஆதார பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

போர் இடம்பெற்ற பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபடும் சர்தேச மனிதாபிமான தொண்டு நிறுவனங்



களை மேற்கொள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தக் குண்டு தொடர்பான செய்திகள் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கிறது.

இந்நிலையில், இறுதிப் போரின்போது கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதை நேரில் பார்த்த அந்தக் குண்டுகளின் பாதிப்பை உணர்ந்தவர்கள் முன்வந்து சாட்சியமளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியம். அவர்களுக்கான உயிர் அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கும் என்ற காரணத்தில் வெளியே வந்து சொல்ல பயப்படுகிறார்கள்.

இந்த கொத்துக் குண்டு விவகாரம் 2012 மற்றும் 2014 களில் பேசப்பட்டன. இன்று 7 வருடங்கள் கடந்த நிலையில் இந்த தடை செய்யப்பட்ட குண்டு தொடர்பில் முதற்கட்ட விசாரணையைக்கூட மேற்கொள்ளாத நிலையில் பேசு பொருளாக மட்டும் இருக்கிறது.

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடிகள் தொடர்பான தொழிநுட்ப ஆலோசகர் அலன் போஸ்டன் **(Allan Poston)** சிறிலங்காவின் கொத்துக் குண்டு பாவனை தொடர்பில் ஐ.நாவுக்கு தகவல் தந்திருந்தார். பின்னர் அமெரிக்க அதிகாரிகள் மற்றும் போர்க்குற்ற விடயங்கள், உலகளாவிய குற்றவியல் நீதி திணைக்களம் என்பவற்றிற்கான அதிகாரி ஸ்டெபன் ஜெ.ராப் **(Stephen J. Rapp)** ஆகியோரைச் சந்தித்த மன்னார் மற்றும் யாழ் ஆயர்கள் இவை தொடர்பில் பேசியிருந்தனர்.

சிறிலங்காப் படையினரின் கொத்துக் குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதப் பாவனை தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறிலங்கா தரப்பு கொத்துக் குண்டுகளை சிறிலங்காப் படையினர் கொள்வனவு செய்யவில்லை என்றும் தம்மிடம் இல்லாத ஒன்றை தாம் எப்படி பயன்படுத்தியிருக்க முடியும் என்றும் கூறுகிறது. அப்படி என்றால் இறுதியுத்தத்தில் வன்னிப் பிரதேசங்களில் விழுந்த குண்டுகள் யாருடையது.

இறுதிக் கட்ட போரின்போது வன்னியில் வாழ்ந்த அனைத்து மக்களுக்கும் சிறிலங்காப் படையினர் கொட்டிய இந்த கொத்துக் குண்டுகள் பரிச்சையமானவையே.



முதலில் கேட்கும் ஒற்றை வெடிப் பொலி, காவுகுண்டு வெடித்து உள்ளிருக்கும் நூற்றுக்கணக்கான சிறிய குண்டுகளை விதைப்பதைக் குறிக்கும். பின்னர் சில வினாடிகளில் சிதறிய குண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கும். இந்த சத்தம் உச்சத் தொனியில் "ரம்ஸ் " வாசிப்பதுபோல் இருக்கும். நூற்றுக்கணக்கான சிறுகுண்டுகளில் இருந்து ஆயிரக் கணக்கான சிதறு துண்டுகள் சிதறும். விளைவு மிகவும் மோசமானது.

இறுதிப் போரில் கொத்துக் குண்டுகளால் கொல்லப்பட்ட படுகாயமடைந்த மக்கள் ஏராளம். இன்றும் கொத்துக் குண்டுகளால் படுகாயமடைந்த பலர் இரத்த சாட்சியங்களாய் உள்ளார்கள்.

பாகிஸ்தானிய ஆயுத ஏற்றுமதி அமைப்பின் இயக்குனர் மேஜர் ஜெனரல் முஹமட் பாஷரூக் 2008 ஜ"லை பாகிஸ்தானின் டோன் **(The Dawn)** பத்திரிகைக்கு ஒரு செவ்வி வழங்கியிருந்தார். அதில் பாகிஸ்தானின் ஆயுத ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்துள்ளதாகவும் அது 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெடிபொருட்கள் றொக்கெட் லோஞ்சர்கள் தோளில் வைத்து ஏவும் வானெதிர்ப்பு ஏவுகணைகள் போன்ற வகையில் சிறிலங்கா தம்மிடமிருந்து கொத்துக் குண்டுகள் ஆழ ஊடுருவும் குண்டுகள் றொக்கெட்கள் மற்றும் ஆளில்லா கண்காணிப்பு விமானங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்தது என்றும் தெரிவித்தார். இந்த விடயம் சிறிலங்காப் படையினர் கொத்துக் குண்டுகளை கொண்டிருந்தனர் என்பதை உறுதிசெய்யும் வலுவான ஆதாரமாகும்.

அடுத்து சிறிலங்கா ரசியா உக்கிரேன் போன்ற நாடுகளில் இருந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருந்தது. சிறிலங்காப் படையினரால் வீசப்பட்ட கொத்துக் குண்டுகளில் ரசியத் தயாரிப்பு குண்டுகளும் **(Russian made OFAB-500 cluster bombs )** இருந்தமை ஆதாரபடுத்தப் பட்டுள்ளது.

ஐ.நாவின் கண்ணிவெடி தொடர்பான நிபுணர்கள் தமது நடவடிக்கைகளின் போது வன்னியில் சிறிலங்கா படையினரால் ஏவப்பட்ட கொத்துக் குண்டுகளின் பாகங்களை தாம் மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். சிறிலங்காப் படைகள் சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இத்தகைய கொத்துக் குண்டுகளை மாதிதிரமின்றி தடை செய்யப்பட்ட வேதியல் ஆயுதங்களையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளன.

வன்னியில் அப்போது பணியாற்றிய வைத்தியர்களின் குறிப்புகளும் 'சாட்சியங்கள் இல்லாத போர்'- **("War Without Witness")** அமைப்பினரால் மேற்கொள்ளப் பட்ட சுயாதீனமான விசாரணையின் முடிவுகளும் பிரதமரின் கூற்றை ஆணித்தரமாக மறுக்கின் றன. சிறிலங்காப் படையினரால் வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டமையும் அதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமையும் ஆய்வில் தெரியவந்துள்ளது.. இந்த ஆரம்பகட்ட முடிவுகள் இங்கிலாந்தின் அனுபவம் வாய்ந்த வைத்தியர் ஒருவரால் மறுசீராய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. மருத்துவ மற்றும் வேதியல் அறிக்கையின் படி காயங் களில் **Triethanolamine ( C6H15NO3 ), Phosgene ( CCl2O)** போன்ற வேதியல் பொருட்கள் காணப்பட்டுள்ளன.

சிறிலங்காவின் போர்க்குற்றம் தொடர்பில் பல்வேறு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த வேளையில் அதற்கு வலுச்சேர்க்கக் கூடிய கொத்துக் குண்டுப் பாவனை மற்றும் இரசாயன ஆயுதப் பாவனை என்பன தொடர்பில் வலுவான குரல்கள் சர்வதேச அரங்கில் எழுப்பப் படவேண்டும். காட்சிப்படுத்தல் நிகழ்வுகளில் இவை தொடர்பான ஆதாரங்கள் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும். இந்த இனவழிப்புக்கான நீதி தேடலானது தமிழரின் உணர்வு வெளிப்பாடு என்ற வரையறைக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுவிடாது அனைத்து வழிகளிலும் அதற்கான முனைப்பை முன்னெடுக்க வேண்டும்.

கொத்துக் குண்டுகள் நச்சு வாயுக்கள் என பல தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் தமிழர்களுக்கு எதிராக பயன் படுத்தப்பட்டன, வைத்தியசாலை, முகாம்கள், பாடசாலைகள், பாதுகாப்பு வலையம் என அறிவித்த பகுதிகள் அனைத்தையும் தேடி தேடி இக்குண்டுகள் பாவிக்கப்பட்டன, பேரினவாத ஆட்சியாளர்களின் நோக்கமே தமிழர்களை முற்றாக அழிக்க வேண்டும், பாரிய இனவழிப்பு !!

ஆனந்தபுரம், மற்றும் அனைத்து இடங்களிலும் தமிழ்ப் போராளிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத சிறிலங்காவும் சர்வதேசமும் இப்படியான தடை செய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தியே அழித்தது, அனைத்தும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், சர்வதேசத்தின் உதவிகள், என அனைத்து படைபலத்துடனே இம்மண்ணை ஆக்கிரமித்தது. சிறீலங்கா அரசும் உலக நாடுகளான வல்லரசு நாடுகளும் சேர்ந்து மக்கள் மீது தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் மூலம் கொன்று குவித்தது.. நேருக்கு நேர் நின்று மோத முடியாத போது பல நாடுகளின் உதவியோடு தமிழ் இனத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்றார்கள்.



# அவசரகால நிலை பிரகடனம் சுற்றிவளைப்பு – தேடுதல்கள்...

துன்னாலைச் செல்வம்

## கைதுகள் + விசாரணைகள் அச்சத்தில் தமிழ் மக்கள்..

இலங்கையில் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து வடக்கில் அசாதாரண சூழ் நிலை நிலவுகிறது. மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். முப்படையினரும் உசார் நிலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். சுற்றிவளைப் புத் தேடுதல்களும் சோதனை நடவடிக் கைகளும் இடம்பெற்று வருகின்றன. குண்டு வெடிக்கலாம் என்ற அச்சத்தில் வடக்கு உறைந்து போயிருக்கின்றது. மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளையே மேற்கொள்ள முடியாமல் சிரமப்படுகின்றனர்.

வடக்கு பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவடைந்துள்ளது. பிள்ளைகளை பாடசாலை அனுப்புவதில் பெற்றோர் தயங்குகின்றனர். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பெரும் இன்னல்களை எதிர்கொண்ட தமிழ் மக்கள் மீண்டும் அந்த சூழலுக்குள் செல்வதாக உணரப்படுவதால் பெரும் அச்சத்தில் மக்கள் உறைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படங் களை வைத்திருந்ததாக சந்தேகத்தின் பெயரில் பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கம் பலர் கைது செய்யப்படுகின்றனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அவசர காலச்சட்டம் கொண்டு வரப்பட்டதால் அது சம்பந்தப்படாத பலரும் வேறு காரணங்களுக்காக அதாவது விடுதலைப் புலிகளின் புகைப்படங்கள் இருந்ததாக கைது செய்யப்படுவதால் வடக்கில் மக்கள் பெரும் அச்சத்தில் உறைந்துள்ளனர்.


தமிழீழ விடுதலைப் புலிகளின புகைப்படங் களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத் தலைவர் எம்.திவாகரன் மற்றும் செயலாளர் எஸ்.கபில்ராஜ் ஆகியோரை கடந்த 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்தே பிணையில் விடுதலை செய்தனர்.

பல்கலைக்கழகத்தில் புலிகளின் புகைப் படங்கள் இன்று நேற்று அல்ல பல வருடங்களாக இருந்து வருவதாக தெரிவிக்கப்படும் நிலையில் இந்தக் கைது தொடர்பில் மாணவர்கள் மத்தி யில் பெரும் பீதியை கிளப்பியுள்ளன.

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதலின் போது வீடொன்றில் இருந்து இராணுவச் சீருடை,தொப்பி, ரீசேட், இராணுவச் சின்னம் மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கான அடையாள அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் அடிப்படையில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் முஸ்லிம் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சாவகச்சேரி கனகம்புளியடிச் சந்தியில் வோக்கி டோக்கியுடன் ஒருவரைக் கைது செய்ததுடன், அவர் பயணித்த காரினையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

வடக்கில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது பல இராணுவப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. எதற்காக இந்தப் பொருள் களை வைத்திருந்தனர் என்ற விடயம் தொடர்பில் தீவிர நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்ற னர்.

யாழ். சுண்டுக்குழி மகளீர் கல்லூரிக்கு இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு ஒன்றின் பெயரில் அச்சுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.



> “முப்பது ஆண்டு காலப்போரிருள் சூழ்ந்த காலத்தில் தமிழ் மக்களை பீடித்திருந்த அச்ச உணர்வு எத்தகையது என்பதை அனைவரும் அறிவர். இன்றைய அச்ச உணர்வோ முழு இலங்கையையும் ஒரு வாரகால குண்டுத்தாக்குதல் களின் பின்னர் எழுந்த நிலைமைகளால் சூழ்ந்துள்ளது என்பது உண்மையே”

தேசிய தௌஹீத் ஜமாத் – யாழ். மாவட்டம் என்ற பெயரிடப்பட்ட இந்த கடிதம் தபால் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியாக அனாமதேயக் கடிதங்களும் வந்து கொண்டிருக்கின்றன.

பாடசாலை மாணவர்களின் பாது காப்பை கருத்தில் கொண்டு காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்.மாநகரசபை எல்லைக்குள் கனரக வாகனங்கள் உள்நுழைய தடைவிதிக்கப்படுவதாக யாழ்.மாநகரசபை மேயர் இமானுவேல் ஆர்னோல்ட் அறிவித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இப்படியாக பாதுகாப்பைத் தேடி எல்லோரும் செயற்பட்டு வருகின்றனர். பாதுகாப்பு செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியுமா எத்தனை காலத்துக்கு இருக்கப் போகிறதோ என்ற கேள்வி மக்களிடம் இருக்கிறது.

இந்த ஆண்டுக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவோம் என்று ஜனாதிபதி தெரிவிக்கின்ற போது இந்த ஆண்டு முழுவதும் நாட்டில் நிலைமை இப்படித்தான் இருக்கப் போகின்றதா என்ற அச்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.



**மிக மோசமான கொரூரமான பயங்கரவாதத் தாக்குதல் என்பதை உலக நாடுகளே கூறி இத் தாக்குதல்களுக்கும் புலிகளின் தாக்குதலுக்குமான வேறுபாட்டையும் சுட்டிக்காட்டிள் ளன. முற்று முழுவதுமாகக் கூறவிரும்பாவிட்டாலும் புலிகள் மக்களை இவ்வாறு குறிவைக்க மாட்டார்கள் எண்டதை ஒத்துக்கொள்ள இத் தாக்குதல் வழி சமைத்துக் கொடுத்துள்ளது.**

# அவலத்திலும் அரசியல் ஆதாயம் தேட முனையும் கட்சிகள்

மாசிலான்

இலங்கைத் தீவில் அடுத்தடுத்துத் தேர்தல்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தல் மாகாண சபைத் தேர்தல்கள் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு நாளான இருபத்தோராம் திகதி கிறிஸ்த்துவத் தேவாலயங்களிலும் ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகளிலும் உலக இஸ்லாமியப் பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ் ஐ.எஸ் அமைப்பால் தற்கொலைத் தாக்குதல்கள் கொடூரமாக நிகழ்த்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களில் முதலில் 359 அப்பாவிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுப் பின்னர் அத்தொகை நூறால் குறைந்து இருநூற்று ஐம்பத்துமூன்று என்று கூறப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு வழிபாட்டுக்குச் சென்ற பலர் தமிழர்கள் என்றும் கூறப்படுகின்றது. விடுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் பலரும் இறந்துள்ளனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களைப் பற்றிய தகவல்கள் முன்னதாகவே இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்டும் போதிய முன் ஆயத்த நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் செய்தமையே இவ்வளவு கொடூரமான உயிரிழப்புகளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. தகவல்களைப் பெற்ற பாதுகாப்புத் தரப்பினரின் அலட்சியமா அல்லது அவர்களால் உரியவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டும் அவர்கள் அக்கறையின்றி இருந்தார்களா என்ற பல வினாக்களும் ஐயங்களும் எழுப்பப்படுகின்றன.

இது தேர்தல் காலம் என்பதால் ஜனாதிபதியிடமி ருந்து ஒருவித கருத்தும் பிரதமரிடமிருந்து பிறிதொரு கருத்தும் வந்துகொண்டிருக்கின்றன. அதே நேரம் எதிர்க்கட்சியான மகிந்த தரப்பிடமிருந்து இன்னொரு வகையான கருத்தும் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழர்களின் நாடாளுமன்றத் தரப்பாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது கோணத்திலி ருந்து ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இவர்களின் கருத்துகள் அனைத்தும் தேர்தலை மையமாக வைத்தே சொல்லப்படுகின்றன என்பது தான் வேதனையான ஒன்றாக உள்ளது இங்கு கவனிக்கப்பட வேண்டிய தாகும். ஏனெனில் உயிரிழப்பு என்பது மனித மனங்களில் துன்பத்தையும் வேதனையையும் நிரப்பிய நிலையில் தேர்தலையே மையமாக வைத்து அரசியல் கட்சிகள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டிருக்கின்றன.

நடைபெற்றது மிக மோசமான கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் என்பதை உலக நாடுகளே கூறி இத் தாக்குதல்களுக்கும் புலிகளின் தாக்குதலுக்குமான வேறுபாட்டையும் சுட்டிக்காட்டியுள்ளன. முற்று முழுவதுமாகக் கூறவிரும்பாவிட்டாலும் புலிகள் மக்களை இவ்வாறு குறிவைக்கமாட்டார்கள் என்பதை ஒத்துக்கொள்ள




**தமிழர்களின் நாடாளுமன்றத் தரப்பாகிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தமது கோணத்திலிருந்து ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இவர்களின் கருத்துகள் அனைத்தும் தேர்தலை மையமாக வைத்தே சொல்லப் படுகின்றன என்பது தான் வேதனையான ஒன்றாக உள்ளது இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் உயிரிழப்பு என்பது மனித மனங்களில் துன்பத்தையும் வேதனையையும் நிரப்பிய நிலையில் தேர்தலையே மையமாக வைத்து அரசியல் கட்சிகள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றன.**

இத்தாக்குதல் வழி சமைத்துக் கொடுத்துள்ளது. இக்கூற்றை இலங்கையிலுள்ள அனைத்துத் தரப் பினரும் ஏற்றுக்கொண்டாலும் இந்த தாக்குதலுக்கு பொறுப்பு எங்கு அல்லது யார் என்பதில் தான் மாறுபட்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். ஏனெனில்

இப்பயங்கரவாதத்தை வளர்த்தவர்கள் யார் ? எதற்காக வளர்த்தார்கள் என்பது இங்கு எழுப்பப்படும் மிகப் பெரிய வினாவாக நிற்கிறது. தமிழ் மக்களின் உரிமைப் போரை பயங்கரவாதமாகக் காட்டிய சிறிலங்கா அரசு தமிழினத்தை கூறுபோட்டு தனது நோக்கத்தை நிறை வேற்ற எடுத்த முயற்சிகளின் விளைவே இன்றைய நிலைக் குக் காரணம் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இந்த நோக்கத்தில் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு இடையே வேறுபாடுகள் இருக்கவே இல்லை. அது மகிந் தவாக இருந்தாலும் மைத்திரியாக இருந்தாலும் ரணி லாக இருந்தாலும் ஒரே நேர்கோட்டிலேயே பயணித்தனர் என்பது மறக்க முடியாத வரலாறாகும். இன்று ஏற்பட்டுள்ள நிலைமையைத் தமது அரசியல் ஆதாயத்துக்காக எப்படிப் பயன்படுத்தலாம் என்பதில் தான் இப்பொழுது முனைப்புகள் காட்டப்படுகின்றனவே அன்றி வேறு அக்கறை குறைவு என்பதுதான் யதார்த்தமாகும். இதே நேரம் தமிழரசுக் கட்சியும் இபொழுது இதனைத் தேர்தலுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்த விளைகிறது என்பது சுமந்திர னின் ஊடகவியலாளர்களின் சந்திப்பின் மூலம் தெளிவாகிறது.

தென்னிலங்கை கட்சிகள் நடைபெற்ற தாக்குதல் களைப் பற்றிக் கூறும் பொழுது புலிகள் இவ்வாறு மக்களை மையப்படுத்துவதில்லை என்று சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சுமந்திரன் புலிகளின் மீள் எழுச்சி என்ற பொய்யான தகவல்களை அரசுப்புலானாய்வுத் தரப்பு முன் வைப் பததாகவும், வவுணதீவில் இரு காவற்றுறையினர் இஸ்லாமிய தீவிரவாதிகளால் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதையும் புலிகள் மீது அக்கொலைகளுக்கான வீண் பழியைப் போட்டார்கள் எனும் வினா எழுப்பி புலி களின் மீள் எழுச்சி என்பது புலனாய்வாளர்களின் பொய் எனவும் கூறியுள்ளார். அவர் இங்கே இன்னொன்றையும் அழுத்தமாகக் கூறியுள்ளார். அது என்னவென்றால் சிறிலங்காப் புலனாய்வாளர்கள் தங்கள் தேவைகளுக் காக அப்பாவிகள் மீது முன்னாள் புலி இயக்கத்தினர் என்ற காரணத்தை ஸ்வத்துக்கொண்டு கொலைப்பழியையும் சுமத்தப் பின்னிற்க மாட்டார்கள் என்றும் கூறியுள்ளார். இதே நேரம் சுமந்திரனைக் கொலை செய்ய முன்னாள் போராளிகள் முயன்றதாகக் கூறிச் சில இளைஞரகள் கைதா கிப் பயங்கரவாதச் சட்டத்தின் பிடிக்குள் விசாரணையும் இல்லாமல் சிறையில் இருப்பதை மக்கள் மறந்திருப் பார்கள் என்று நினைத்துத் தான் சுமந்திரன் வவுணதீவு கொலையை சுட்டிக்காட்டினாரோ தெரியவில்லை. ◘



# சர்வதேசப் பயங்கரவாதத்துக்குள் சமாதியாப்போகிறதா? தமிழருக்கான தீர்வு!

- எட்வின்

அந்த எண்ணங்கள் மனதை ஆட்கொள்ளுகின்ற சமயங்களி லெல்லாம் கண்களை இறுக மூடிக் கொள் ளுகிறேன். என்னால் மேற்கொண்டு சிந் திக்கவோ அல்லது இந்த உலகத்தைப் பார்க்கவோ முடிவதில்லை. சதா இதயம் வலித்துக் கொண்டே இருக்கிறது.ஏனெனில் நான் கண்ட காட்சிகள் அப்படியானவை. குண்டடிபட்டு மரணத்தைத் தழுவிய உடல் கள் குவியலாகக் கிடக்க, அழுதபடி மக்கள் ஒரு வித அழுத்தத்தோடு அந்த இடத்தைக் கடந்து செல்கையில்... எனக்கு எமது சமூகப் பண்பாடும் நாம் கொண்ட பழக்க வழக்கமுமே ஞாபகத்தில் வந்தன. எமது வீடுகளில் வளர்ப்பு மிருகங்கள் மரணித்தால் கூட அவற்றின் வெற்று உடல்களை நாம் இப்படி அனாதரவாக எறிந்துவிடுவதில்லை.

அப்போது நான் சிறுவன். எனக்கு நன் றாக ஞாபகம் இருக்கிறது. பல காலமாக வீட்டில் நாம் வளர்த்து வந்து நாய் திடீ ரென சுகவீனமுற்று இறந்துபோனது. மனிதருக்கு இறுதிக் கிரியைகள் செய்வது போல அதற்கும் மாலை மரியாதை செய்து வெள்ளைத் துணி ஒன்றினால் போர்த்து அதனை அடக்கம் செய்தோம். வீட்டிலுள்ள அனைவரும் கவலை கொண்ட தருணம் அது.ஆனால் யாரும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தம்பிமட்டும் சாப்பாடு வேண்டாமென்று இரண்டு நாட்களாக அடம்பிடித்தான். வீட்டு வேலைகளைக் கூட அவன் சரியாகச் செய்யவில்லை. அத்தனை துயரத்தோடு அவன் காணப்பட்டான். ஏதோ உறவுக்குள் ஏற்பட்ட மரணத்தைப் போல பலர் வந்து துக்கம் தெரிவித்தனர். மல்லாகத்திலிருந்து மாமா கூட அந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்டுக் கொண்டு வந்துவிட்டார்.


இதுதான் எமது சமூகம் கொண்ட நுணுக்கமான பண்பாட்டின் வரலாறு. இத்தனை இளகிய மனம் படைத்த ஒரு சமூகம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக, ரவைகள் நிரப்பிய துப்பாக்கிகளை ஏந்தியபடி காடு மேடு பள்ளம் என்றும் பாராமல் அலைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்குப் பின்னால் ஏதோ ஒரு ஏமாற்றப்பட்ட வரலாறொன்று இருக்கிறதாகத்தானே அர்த்தம்? 1958 இல் தொடங்கிய அடக்குமுறை. தொடர்கதையாகிப் பின் பலவிதமான பாதகச் சூழ்நிலைகளைத் தமிழர்கள் எதிர்கொண்டனர். உணவு மற்றும் உறைவிடத்தில் எதிரி கைவைத்து வஞ்சகம் செய்தான். தன்னிச்சையாகச் செயற்பட்டான். பலவிதமான சிங்களக் குடியேற்றங்களைத் தமிழ் பகுதிகளிலே தொடக்கி வைத்தான். தமிழர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். போராடியதாக இல்லை. பிரதமராகச் சிறிமாவோ பண்டாரநாயக்கா இருந்த 1970 ஆண்டுகாலப் பகுதிகளில் தரப்படுத்தல் என்ற ஒரு முறைமையைக் கொண்டு வந்து மாணவர் கல்வியில் கைவைத்தபோதே "அறிவில் கைவைப்பதா? அறிவைத் தரப்படுத்துவதா?" என்று மக்கள் வெகுண்டெழுந்தனர். போராட்டம் சிறுகச் சிறுக ஆரம்பமாகியது. மாணவர் பேரவையாகிப் பின் அது இளைஞர் பேரவையாகிப் பின் இயக்கங்களாக வடிவெடுத்து பல ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தில் தோல்வியைத் தழுவிக் கொண்ட இலங்கை அரசு உலக நாடுகளோடு தனது கற்பை விலைபேசியது. நாட்டை அடைவு வைத்தது.தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைக் கொன்றால், இயக்கத்தை இல்லாதொழித்தால் தன்னைத் தருவதாக இலங்கை மேற்கொண்ட பேரத்தில் உலக நாடுகள் ஒன்றிணைந்தன. கூட்டாகச் சேர்ந்து கொத்துக் குண்டுகளாலும், தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களாலும் தமிழர் போராட்டமானது மௌனிக்கப்பட்டது. போராட்டத்தின் பின்னர் தன்னை தருவதாகக் கூறிய பேரத்திலிருந்து பின்வாங்கியது இலங்கை அசு. குழந்தைகளுக்கு "லொலி பப்" கொடுத்து ஏமாற்றவதைப்போல அமெரிக்காவையும் இந்தியாவையும் மற்றும் போரிலே பங்காளிகளாக இணைந்து செயற்பட்ட பல பிற நாடுகளையும் ஏமாற்ற முனைந்த வேளைகளில் இலங்கைக்கு எதிராகப் "போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் சர்வதேசம் கையிலெடுக்கத் தொடங்கியதே ஜெனீவாப் படையெடுப்பாக நாம் கண்டு கொண்டு வருகிறோம். கால அவகாசம் என்ற போர்வையில் போர்க்குற்ற விசாரணையையும், தமிழருகளுக்கான தீர்வையும் இழுத்தடிப்புச் செய்துவருகிற இலங்கையை சர்வதேச அரசியல் என்ற ஒன்று காப்பாற்றிவிடுகிறது. உலக அரங்கிலுள்ள வல்லரசுகள் என்று பார்க்கப்படுகிற எல்லோருக்கும் இலங்கை தேவைப்படுகிறாள். அந்தத் தேவைகளுக்குள் தமிழர் தலைவிதிகள் சமாதியடைவதாகவே எண்ணத்தோன்றுகிறது.

தமிழர் போரட்டத்தைப் பொறுத்தவரை, கண்மூடித்தனமான கோட்பாடுகளோடு அவர்கள் போராட்டத்தில் இணைந்ததாக இல்லை. மூளைச் சலவைக்குள்ளும் அவர்கள் அகப்பட்டுக் கொண்டதாகவும் இல்லை. தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபோதே அவர்கள் கோபமடைந்தனர். தாம் அரசியல் பழிவாங்கலுக்குள் சிக்கிக் கொண்டதாக அவர்கள் உணர்ந்தபோது தமக்கொரு நீதியான தீர்வைப் பெற்றுக்கொள்ளப் பல வழிகளைத் தேடினாலும், எதிரியின் தொடர்ச்சியான பழிவாங்களாலும், திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளாலும் தாம் சுயத்தை இழப்பதாக அவர்கள் உணர்ந்தனர். தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாகத் திட்டவட்டமாக அறிந்தபோதே அவர்கள் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

வாழ்வாதாரத்துக்காகப் அரச பணிகளை ஏற்று அங்கு சென்றவர்களை "நீ தமிழன்." என்று சொல்லி அடித்துக் கடித்துக் குதறி அவர்கள் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கிய பின்பே அவர்கள் துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் தோளில் சுமக்கலானார்கள்.

தங்கள் சொந்த நிலத்தில் தொடர்ந்தும் தாங்கள் தாங்களாகவே அவர்களை வாழவிடாது, தங்களுக்கான சுய உரிமைகளுடன் வாழ விரும்புகிற அவர்களை அடக்கி ஆள எண்ணியதால்தானே அவர்கள் போராடப் புறப்பட்டனர்.

தமிழர்கள் போராட்டத்தை நியாயமற்றதாகக் காட்டவே தமிழ் போராளிகளுக்குப் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டினர். ஆனால் தற்போது உண்மையாகவே அரசுக்கெதிராகப் பயங்கரவாதிகள் வந்துவிட்டனர். பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன. போராளிகளுக்கும் பயங்கரவாதிகளுக்குமான வேறுபாட்டை இலங்கைச் சமூகம் தெளிவாக விளங்கிக் கொண்டுவிட்டது. இருந்தும் அரசு இன்னும் போராட்டத்தையும் பயங்கரவாதத்தையும் ஒன்றாகவே பார்க்க முற்படுகிறது. அதனால் பயங்கரவாத்துக்குள் போராட்டம் சமாதியாகப் போய்விடுமோ......? ●



# வரலாற்றிலிருந்து அழிந்து போகும் நிலையில், ஒரு சைவக் கிராமம்...!!



"ஆலயத்துக்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆல மரங்களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர்கள் சிலவற்றிற்குப் பாதுகாப்பு அரண்களாக உள்ளன. .....பலரும் அறியாத நம்ப முடியாத ஆலயத்தின் கதை...!!"

சிரேஸ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
தலைவர். தொல்லியல் - வரலாற்றுத் துறை. யாழ்.பல்கலைக்கழகம்.

அண்மையில் மட்டக்களப்பின் சமூக ஆர்வலரும், வரலாற்றுப் பட்டதாரியுமான திரு.வை.சத்தியமாறன் இணையதளம் ஒன்றில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றின் புகைப்படங்களைப் பிரசுரித்து அவ்வாலயம் தமிழர்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். அப்புகைப்படங்களில் இருந்து அது ஒரு புராதன ஆலயமாக இருக்கலாம் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். சிவகணேசனிடம் எடுத்துக் கூறிய போது அவ்விடத்தில் ஆய்வு செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். அவரின் முயற்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர், கலைப்பீடாதி ஆகியோர் வழங்கிய ஆதரவும், உதவிகளும் ஆய்வுக் குழுவினரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது.

இந்த ஆய்வுக்குழுவில் வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன், மற்றும் விரிவுரையாளர் செல்வி கிறிஸ்ரினா நிரோசினி, வரலாற்றுப் பட்டதாரி திரு.வை.சத்தியமாறன் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லைநாதன் அவர்களும் இணைந்து கொண்டமை ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தின் சமூக நிலமைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியது. இவ்வாலயம் அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி, குடுவில் ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ளது.இவ்வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்து வரும் பல இடப்பெயர்கள் பண்டு தொட்டு இங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததன் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைத் தானும் காண முடியவில்லை.இந்நிலையில், ஆலயச் சுற்றாடலில் பரந்த அளவில் வாழ்ந்து வரும் ஏனைய இன மக்கள் தமிழர்கள் இங்கு வாழவில்லை எனவும், அவர்கள் கரும்புத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக இங்கு வந்த போது அவர்களின் வழிபாட்டிற்காகவே முன்பொரு காலத்தில் கட்டப்பட்ட ஆலயமே தற்போது அழிவடைந்த நிலையில், காணப்படுகிறது என அவர்கள் எம்மிடம் கூறிய புதுக்கதை எமக்கு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது. ஏனெனில், இற்றைக்கு ஐந்து சகாப்தங்களுக்கு முன்னரே குடுவில் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டுக்களில் ஒன்றை ஆதாரமாகக் காட்டி இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் வாழ்ந்த 'திஸ' என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமையில் தமிழ் வணிகர்கள் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தி இருந்தார். பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் 2,300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழத் தொடங்கியதற்கு, இக்கல்வெட்டையும் முக்கிய ஆதாரமாகக் காட்டுகின்றார். அண்மையில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இச்சாசனங்கள் தமிழ் மொழியில், தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் நாகன், ணாகன், தம்பன், வண்ணக்கன் முதலான பெயர்கள் பொறித்த சாசனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இச்சாசனங்கள் பற்றி பேராசிரியர் பத்மநாதன் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.இவ்வகையான மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்தை அடுத்து கிழக்கிலங்கையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு புது வெளிச்சமூட்டுவதாக உள்ளது. தொல்லியல் அறிஞர்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு என்ற புதிய நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர். இப்பண்பாட்டு மக்கள் கிழக்கிலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் நாகன், ணாகன் முதலான பெயர்கள் இடம்பெற்றிருப்பது கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீக தமிழர்கள் நாக இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. இவ்வரலாற்றுப் பின்னணியிலேயே அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றத்திற்கான காரணங்களை நோக்குவது பொருத்தமாகும்.நீண்ட காலத்திற்கு முன்னரே ஆலங்கேணியில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாலயத்தைக் கைவிட்டதன் காரணமாக தற்போது இவ்வாலயம் பெருமளவுக்கு அழிவடைந்து ஆலமரங்களுக்கு மத்தியில் வழிபட முடியாத ஆபத்தைத் தரும் வெறும் கட்டடமாகக் காணப்படுகின்றது.



ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆலமரங்களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர்கள் சிலவற்றிற்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளன.இவ்வாலயம் சிறிய விமானத்துடன் கூடிய கர்ப்பக்கிரகம் அந்தராளம் முன்மண்டபம் பலிபீடம் கொடிக்கம்பம் என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டதை ஆய்வுக் குழுவினரால் அடையாளப்படுத்த முடிந்தது.நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் இவ்வாலயம் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஆலயத்தின் கட்டட வடிவங்களும் விமானத்தின் கலை வடிவங்களும் உறுதி செய்கின்றன. ஆயினும் இவ்வாலயம் மிகத் தொன்மையானதென்பதை ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் புதையுண்டு காணப்படும் பெருமளவு செங்கற்கள் உறுதிசெய்கின்றன. அதிலும் கற்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் உட்பாகங்கள் முழுக்க செங்கற்களால் கட்டப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளத்தின் முன்பக்கச் சுவர் சீமேந்து கொண்டு பூசப்பட்ட நிலையில் செங்கற் சுவர் தெளிவாகக் காணப்படுகிறது.இந்த வேறுபாடுகளைக் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்ட கர்பக்கிரகம், அந்தராளம் ஆலயத்தின் தொடக்ககால நிலையில், அதன் வெளிப்புறம் மட்டும் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாகம் செய்யப்பட்டதாகவும், முன் மண்டபம், பலிபீடம் முதலான கட்டடங்கள் ஆலயம் தோன்றிய கால அத்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாக அல்லது ஆலயத்தை விரிவுபடுத்த பிற்காலத்தில் சீமேந்து கொண்டு கட்டப்பட்ட ஆலய பாகங்களாக இருக்கலாம் எனக் கூறமுடியும்.இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை உறுதியாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ, விக்கிரகங்களோ இதுவரை கிடைக்கவில்லை.ஆலயத்தின் கர்பக்கிரகம் அந்தராளம் என்பவற்றிற்கு உள் நுளைய முடியாதவாறு பெரிய ஆலமர வேர்கள் காணப்படுகின்றன. அதற்குள் கொடிய விசப்பாம்புகள் குடியிருப்பதற்குரிய தடயங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இதனால், அச்சமின்றி அக்கட்டிடப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை.

இருப்பினும் வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு கர்பக்கிரகத்தில் தெய்வ விக்கிரகங்களை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பீடம் முழுமையாக சிதைவடைந்துள்ளமை தெரிகின்றது. அவ்விடம் ஆழமாகத் தோண்டப்பட்டு பீடம் இருந்த இடம் பெரும் குழியாகக் காணப்படுகின்றது.

பீடத்தின் பின்பக்கச் சுவரில் இருக்கும் திருவாசி புகைபடர்ந்த நிலையில் அதன் கலைவடிவங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. இருப்பினும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இவ்வாலயம் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

அவற்றுள் கர்பக்கிரகத்தின் மேற்பக்கச் சுவரில் குறுக்காகவைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு விமானம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும் அவற்றின் நீள அகலங்கள் கர்பக்கிரம், அந்தராளம், என்பவற்றின் வடிவமைப்பு அவற்றின் நீள அகலங்கள் வாசற்பகுதிகளில் அமைக்கப்பட்ட அகலமான கற்தூண்கள் என்பன 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங்களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சோழர் கால ஆலயங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

எதிர்காலத்தில் தொல்லியல் திணைக்கள அனுமதியுடன் இவ்வாலயப் பகுதியில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால், இவ்வாலயத்தின் தோற்றகாலம், அதன் கலைமரபுகள், வழிபடப்பட்ட தெய்வங்கள், காலரீதியான ஆலய வளர்ச்சி, மாற்றம், ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த அசையும், அசையாத சொத்துக்கள், ஆலயத்தைப் பராமரித்த மக்கள் வழிபாட்டு மரபுகள், தொடர்பான பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை.

# இறுதிப்போரில் தமிழின அழிப்பின் சாட்சிய ஆவண நூல் கனடாவில் வெளியிடப்பட்டது




கனடா முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் சாட்சியமாக நூல் கள் வெளியீடு.


திருமதி காஸ் கயூறி

வாகரையில் இருந்து முள்ளிவாய்க்கால்வரை நடந்த இனவழிப்பின் சாட்சியமாகக் கனடாவில் திருமதி **KASS GHAYOURI** அவர்களால் எழுதப்பட்ட ஆனையிறவுப்பிரதேசத்திலிருந்து ஒரு குறிப்பு A NOTE FROM the NO FIRE ZONE என்ற ஆங்கில நூல் இனவழிப்பின் சாட்சியமாக முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் 10வது ஆண்டினைக் கடக்கும் இந்த நேரத்தில் வெளி யிடப்பட்டுள்ளது. இப் புத்தகம் தாயகத்தில் நடத்தி முடிக்கப்பட்ட சிங்களத் தின் இனவழிப்புப் போரின் இறுதி நாள்வரை மக்க ளுக்கான மருத்துவப் பணி யில் ஈடுபட்டுப் பல்லாயிரம் மக்களின் உயிர்காத்த மருத்துவரான, மருத்துவ கலாநிதி வரதராஜன் அவர்களின் சாட்சியமாக உருவாகி இருக்கின்றது.

இப்புத்தக வெளியீடு இன்று வெளியிடப்பட்ட இந்த இனவழிப்புச் சாட்சிய நூல் வெளியீட்டில் கனடா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி ஆனந்த சங்கரி மற்றும் ஒன்ராறியோ சட்ட மன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி ஆகியோர் கலந்து கொண்டு உரை களை நிகழ்த்திச் சிறப்பித்திருந்தனர்.


வைத்தியகலாநிதி வரதராஜன்

நூலினை மருத்துவ கலா நிதி வரதராஜன் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியை தாயகத்தின் மருத்துவத் துறையில் மிக நீண்ட காலமாகத் தாதிய சேவை யில் பணியாற்றிய மூத்த தாதி திருமதி. கந்தசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து பிரதிகளை திரு.இளமாறன் மற்றும் இறுதிப் போரில் காயமடையும்வரை ஈழநாத ஊடகவியலா ளராகப் பணியாற்றிய ஊடகவிய லாளர் ஒருவர் மற்றும் மருத்துவ கலாநிதி கல்யாணி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.நிகழ்வின் ஆரம்பத்தில் கனேடிய தேசிய கீதத்தைத் தொடர்ந்து தமிழ் வாழ்த்துப் பாடப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது சிறப்பாகும். தொடர்ந்து புத்தகம் சபைக்கு வழங்கப்பட்டு நன்றியுரையோடு நிகழ்வு இனிதே நிறைவேறியது.

இப்புத்தகம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருப்பதால் எமது அடுத்த தலைமுறைக்கும் அத்துடன் பல்லினச் சமூகத்துக்கும் இலங்கையில் எம்மீது நடத்தப்பட்ட இனவழிப்பின் கொடூரங்களை நிச்சயம் கொண்டுபோய் சேர்க்கும் என்பது நியம்.

2009 ஆண்டு சிங்கள வல்லாதிக்க அரசும் சர்வதேச வல்லரசுகளும் இணைந்து பூலோக அரசியல் இலாபங்களுக்காக ஒரு இனத்தையே அழித்தெறிந்த வரலாற்றைத் தாங்கிய மண் முள்ளிவாய்க்கால்.

அந்த வலிகளைச் சுமந்து, அம்மண்ணில் வாழ்ந்து இன்று வெறும் சடங்களாக வாழும் சாட்சியங்களின் தொகுப்பாக முள்ளிவாய்க்காலின் 10 ஆண்டு என்ற புத்தகம் வெளிவர இருக்கிறது. இப்புத்தகத்தைக் கடற் சூரியன் வெளியிடுகிறது. **SUN SEA** என்ற கப்பலில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த இளையவர்கள் சிலர் சேர்ந்து இக்கப்பலின் நினைவோடு தாம் முள்ளிவாய்க்காலில் பட்டு வந்த துன்பங்களை இடுத்த தலைமுறைக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற பெரும் முயற்சியாக உருவாக்கி உள்ளார்கள்.



# ஊடுருவி உலகநாதன்

சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம். ஆகாயம் பூக்கள் தூவும் காலம். நாளை என் கீதமே. எங்கும் உலாவுமே. நாளை என் கீதமே எங்கும் உலாவுமே. என்றும் விழாவே என் வாழ்விலே"

வெளியே சொல்ல முடியாத சந்தோசத்தில பாடிக் கொண்டு பாடலுக்கேற்ப மோட்டார் சைக்கிளை அங்குமிங்கு மாக செலுத்திக் கொண்டு ஏதோ தன்னுடைய இசைக்கச்சேரி போல போய்க் கொண்டிருந்தான் ஆறுமுகம்.

ஆறுமுகத்துக்கு முன்னால் இசைக்கச்சேரியை பார்ப்ப தற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெருமாள் "இவன் அடிபட்டு விழுவது மட்டுமல்ல மற்றவர்களையும் காயத்துக்கு உள்ளாக்கப் போகிறான் போல என்று மோட்டார் சைக்கிள் வேகத்தைக் குறைத்து அவன் அருகில் சென்று ஒழுங்கா ஓடடா என்று சொன்னார்.

ஆறுமுகமோ அண்ணை நான் பாட்டு பாடிக் கொண்டு வாறன் எப்படி என்ர குரல் பாலசுப்பிரமணியம் பாடுவது போல இருக்கா என்று கேட்டான்.

நீ பாடுவதை நேரில் கேட்காவிட்டாலும் நீ பாடுகிறாய் என்று கேள்விப்பட்டாலே பாலசுப்பிரமணியம் தற்கொலை செய்திடுவார் கவனம் என்று பெருமாள் உனக்கு பாட்டுப் பாடுவது சரிவராது என்று நாசுக்காகச் சொன்னார்.

ஆறுமுகமும் விட்டபாடில்லை இங்கே சங்கீதம் படித்தவர்கள் என்னைப் போலத் தானே பாடினம் என்று தனக்கு தானே அங்கீகாரம் வழங்கினான்.

உன்னுடன் கதைச்சுப் பலன் இல்லை இங்கே பாடுகிற திறமையுள்ளவர்கள் இருந்தால் நீ பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டு இருப்பாய் இல்லாத படியால்தான் இந்த நிலைமை என்று சொன்ன பெருமாள் தொடர்ந்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் யாழ். பல்க லைக்கழகத்தில் இசைத்துறையில் முதன்மை இடத்தில் இருந்த மாணவி ஒருவருக்கு சுதி நயத்துடன் பாடத் தெரியலை கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த ஒரு மாணவி சுதி நயத்துடன் பாடியுள்ளார் என்று கம்பன் கழகத்தைச் சேர்ந்த ஜெயராஜ் ஒரு நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

அதாவது சங்கீதத்தில் திறமையுள்ளவர்களை இனங்கண்டு வெளிக்கொண்டு வரவேண்டும். அதற் காகத் தான் சங்கீத வித்துவாங்கள் இருக்கிறார்கள். இங்க இருக்கினம் என்று சொல்ல முடியாமல் இருக்குது.

தமக்குத் தெரிந்தவர்களை தமக்கு இணங்கிய வர்களை முதன்மைப்படுத்தி பட்டம் வழங்கியதால் வந்த வினை பாருங்கோ. எங்கையோ போய்விட்டுது விளைவு இனிமேல் கட்டி இழுப்பதற்கு முடியுமோ தெரியவில்லை.

இதனால் இன்று தமிழ்நாட்டில் இருந்து கோயில் திரு விழாக்க ளுக்கு பாடகர்களை அழைக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

ரசிகர்கள் நல்ல கலைக்கு வரவேற்பு வழங்கு வார்கள். ரசிகர்களுக்கேற்ப கலைஞர்கள் வளர வேண்டும். ரசிகர்களுக்கு ஏற்ப கலைஞர்கள் வளர்ந்ததால் தான் தமிழ்நாட்டில் இருந்து கலைத் துறையைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து இசைக் கச்சேரிகளை நடத்திவிட்டுச் செல்கின்றனர்.

இனிவரும் காலங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள் கொடியேறப் போகின்றன. வசதிபடைத்த வர்கள் தென்னிந்திய சினிமா பாடகர்களை இங்கு அழைத்துவரப் போகின்றனர்.

இந்த மண்ணில் ஒரு இசைக்கச்சேரியை நடத்துவ தற்கு திறமையுள்ளவர்கள் இங்கில்லையா? திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. வாய்ப்பு கிடைப்பதற்கு அதாவது அவர்களுக்கு அங்கீ காரம் வழங்குவதற்கு கல்லூரிகள் வழிவிட வேண்டும்.

வழிவிடாத படியால் தான் தமிழ்நாட்டு இசைக்கச்சேரி போல வருமா? என்று கேட்கிறார்கள். இனியும் கேட்பார்கள்.

சங்கீதம் படித்து வெளியேறு பவர்களுக்கு இங்கு மேடையில்லை என்றால் இவர்களுக்கு சங்கீதம் படிப்பித்தவர்களை குரு என்று சொல்ல முடியுமா?

தமிழ் பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்றால் கலைகள் வளரவேண்டும் கலைகள் வளர்ந்தால் கலாசாரம் மேலோங்கும் அதனால் தான் தமிழ் விழாக்களை நடத்து கிறார்கள். வாய்பாட்டு நடனம் இசை போன்றன முத்தமிழுக்கு சுவையைக் கொடுப்பன.

தமிழ்நாட்டில் சங்கீதத்தை வளர்ப்பதற்காக கோடிக் கணக்கில் செலவு செய்யப்படுகிறது. அதனால் தான் அங்கே சங்கீதம் கொடி கட்டிப்பறக்கிறது.

இங்கே கலை கலாசார மண்டபங்கள் 12 தொடக்கம் 8 மில்லியன் ரூபாய் செலவு செய்து கட்டிவிட்டு அதனை பூட்டி வைத்திருக்கிறார்கள்.

பிறகு எதற்கு இந்த மண்டபங்களைக் கட்டினார்கள் என்றால் சம்பந்தப்பட்ட தரப்பிடம் பதில் சொல்லத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் காமராஜர் அரங்கம் ஒன்று கட்டிய நாளில் இருந்து இன்றுவரை இசைக்கச்சேரி இடம் பெறாத நாள் இல்லை. இங்கு யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி பருத்தித்துறை கோப்பாய் தெல்லிப்பழை சங்கானை காரைநகர் வேலணை போன்ற இடங்களில் கட்டப்பட்ட கலை கலாசார மண்டபங்கள் பூட்டிக் கிடக்கின்றன.

இந்த மண்டபங்களில் வாரம்தோறும் இசைக்கச்சேரி நடத்துவதை ஊக்கிவிக்க வேண்டும். அதனை விட்டுவிட்டு மண்டபம் கட்டியதுடன் தமது வேலை முடிந்துவிட்டது என்று இருக்கக் கூடாது.

இந்த மண்டபங்களில் இசைக்கச்சேரியை நடத்து வதற்கு இலவசமாக வழங்க வேண்டும். இலவசமாக வழங்கிக் கூட இசைக்கச்சேரியை நடத்துவதற்கு எவரும் முன்வருகினம் இல்லை என்று சொல்வதில் சம்பந் தப்பட்ட தரப்பினரைத் தான் குறைகூறுவார்கள்.

சங்கீதத்துக்கு நிலைமை இப்படி இருக்கும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மண்டபத்திற்கு நிதி அறவிட்டதாக கூறப்படுகிறது. பின்னர் இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கலை கலாசார மண்டபத்தை கட்டிவிட்டு எவருமே வருகிறார்கள் இல்லை என்று கைவிட்டு விட்டு ஒரு மண்டபத்துக்கு ஆட்கள் வரும் போது பணம் வசூலிக் கிறார்கள் என்றால் சத்தியமாய் இந்த ஊரில் சங்கீதம் வளரப் போவதில்லை என்பது உண்மை தான்.

நடக்கின்ற செயற்பாடுகளைப் பார்க்கும் போது எமது ஊரில் சங்கீதத்தை வளர்ப்பதற்காக இந்த மண்டபங் களைக் கட்டவில்லை போலத் தெரிகிறது.

இந்த மண்டபங்களை கட்டி முடித்ததிற்கு சம்பந் தப்பட்ட தரப்பினருக்கு இசைக்கச்சேரிகள் நடந்ததோ இல்லையோ அவர்களுக்கு வருமானம் கிடைத்திருக் கிறது. வருமானம் கிடைக்க வேண்டும் என்பதற்கா கத்தான் இந்த மண்டபங்கள் கட்டுகிற வேலைகளில் இறங்கியிருக்கினம். சங்கீதத்தை வளர்க்க வேண்டும் என்ற சிந்தனை இவர்களிடம் இல்லை. மேலும் இந்த மண்டபங்களைக் கட்டியவர்களின் வருமானம் என்பது மண்ணில் இருந்து ஆரம்பிக்கிறது.

பாலியாற்று மண்ணா வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மண்ணா என்று பார்த்தால் மூலப்பொருளிலேயே கைவைத்துள்ளனர் என்றால் மிகுதிப் பொருள்களில் கைவைக்காமல் விடுவார்களா அந்தளவுக்கென்ன அவர்கள் தூயவாதிகளா? இதில் இருந்து மண்டபங்களை ஏன் கட்டினார்கள் என்ற உண்மை புலப்படுகிறது என்று பெருமாள் சம்பந்தப்பட்டவர்களின் விசாரணைப் பிரிவின் தேடலுக்கு விட்டுச் செல்கிறார். ■

■ சிறுகதை



# நிலா



ஐ.சாந்தன்

பெரிய வெளியாயிருக்கிறது. எங்கே தொடக்கம் எங்கே முடிவென்று தெரியாமல் நிலந்தான் பூவுலகம். வைக்கோல் பட்டடைகள் போல் பஞ்சு பஞ்சாகக் குவிந்திருக்கின் றது. நிலா எரிக்கிறது. நல்ல நிலா, நல்ல வெளிச்சம். அந்த வெளிச்சம் வர்ணிக்க முடியாதது. நிலா வெளிச்சத்தை வர்ணிக்க எந்த மொழியாலும் முடியாது என்று படுகிறது. அப்படியான நிலவொளியைத்தான் குவித்து வைத்திருக்கிறதா என்று சொல்ல முடியாமலிருக்கிறது. சில வேளை அது ஸ்நோவாகவும் இருக்கலாம்.

ஸ்நோவை இதுவரை கண்டதில்லை. படித்தது, கேள்விப்பட்டது, படத்தில் பார்த்தது, கற்பனை செய்தது என்று கொஞ்ச கொஞ்சமாய்ச் சேர்ந்த ஆதாரங்களில் அது இப்படித்தான் இருக்குமென்று உணர முடிந்திருக்கிறது.

இந்தக் குவியல்கள் மேகங்களாயிருத்தலும் கூடும். எப்படியோ - அது ஸ்நோவோ, பஞ்சோ, நிலவொளியோ, மேகமோ இந்த வெளியெங்கும் ஏராளமாய்க் குவிந்து குவிந்து கிடக்கிறது. அந்த மாய ஒளியில் சுவறிக் கொண்டு ஒவ்வொரு குவியலாக அவன் ஏறி மிதிக்கிறான். ஏறுவது களைப்பாயிருக்கவில்லை. ஏறுவதும், மிதிப்பதும் பிறகு இறங்கி இன்னொன்றில் ஆரோகணிப்பதும் இயல்பாக நடக்கின்றன. எந்த முயற்சியுமில்லாமல், இந்த விளையாட்டில் அவன் தனியென்றில்லை. ஆங்காங்கே சிறகு முளைத்த குழந்தைத் தேவதைகளும், அவையும் நிலவின் நிறமாய் உள்ளன. அவை தேவதைகள்தாமா என்பது சரியாக நினைவில்லை. அழகான குழந்தைகளாகவும் இருக்கலாம்.

இந்தக் கனவு வலு சின்ன வயதில் வந்தது. நிலாக் கனவு களின் வரிசையில் இதுவே முதலாவதாக நினைவுக்கு வந்தது. இதேபோல் இன்னுமொன்றுண்டு. அதிலும் ஸ்நோ வருகிறது. ஒரு மைதானம். நிலவொளியில் குளிக்கிற ஒரு வெளி ஸ்நோ தூவல்கள் அமைதியாகப் படிகின்றன. கூரைகளில் வெண்பனியைச் சுமந்துகொண்டு ஆங்காங்கே வீடுகள், ஊர் அமைதியாக இருக்கிறது. தூரதூர நாய்களின் ஊளைகள் மட்டும் ஒன்று மாறி ஒன்றாகச் சுருதி கூட்டுகின்றன. அவன் தனியே நடந்தபடி இருக்கிறான்.

இந்த அந்நிய சூழல் தன் கனாக்களில் இடம் பிடித்தமை எவ்வாறென்பது இன்னமும் வியப்பாகவே உள்ளது. சின்ன வயதில் இவ்விரு கனாக்களும் கண்ட புதிதில் அப்போது செல்லுபடியாக கூடியநியாயமொன்றை மனம் கற்பித்திருந்தது. முற்பிறவி ஞாபகமாயிருக்கலாம்.அப்போது ஆறோ ஏழோ படித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆறுமுக மாஸ்டர் படிப்பித்த ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் நல்ல நல்ல தேவதைக் கதைகள் நிறைய இருந்தன.இவ்விரண்டும்தான் அந்நிய களத்தில் ஜனித்த கனாக்கள், பிறகெல்லாம் அப்படி வரவில்லை. ஏழாம் வகுப்பில் பாடசாலை நூல் நிலையத்தில் சேர முடிந்தது. மொத்த மொத்தப் புத்தகங்களாய் ஐந்து பாகங்களில் அப்போது "பொன்னியின் செல்வன்" படிக்கக் கிடைத்தது. ஒவ்வொரு பாகமும் ஒழுங்காகக் கிடைத்தது. அதே தியானமாய்ப் படித்து முடித்தான். முடித்த பிறகு வெறுமை தெரிந்தது. இப்போது பிறந்து என்ன பிரயோசனம்? ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு - சரியாக, தொளாயிரத்துச் சொச்சம் என்று அப்போது கணக்குப் பார்த்த ஞாபகம் - பிறந்திருக்க வேண்டும். அந்த மனிதர்கள் - ஆழ்வார்க்கடியான், தஞ்சை, அனுராதபுரம் எதை நினைத்து ஏங்குவது? இப்போது இந்த இருபதாம் நூற்றாண்டில் வந்து பிறந்ததற்காக தன்னைத் தானே வெறுத்துக் கொண்டான். இந்த - இப்போது நான் நிற்கிற இடத்தில் வல்லவனாயன் இலங்கை வந்திருந்தபோது மிதித்திருக்கக் கூடும் - எல்லாம் பகல் கனாக்கள்.

ஆனால் அப்போது இரவுக் கனாக்களும் வந்தனதான். முக்கியமாக சொந்தச் சூழலில் கனாக்கள் இடம்பெறத் தொடங்கியதாக நினைவு வருகிற காலம் அதுதான். அதில் வந்த முதற் கனவு இப்படி இருந்தது. காட்டுப்பாதை கொழும் புக்கு ரயிலில் போகிறபோது அநுராதபுரம் பக்கத்தில் வருகிற மாதிரி ஒடுங்கிய நேரான பாதை. எந்த முடக்குமில்லாமல் ஒரே நேர். நல்ல நிலவு. அடர்ந்த மரங்களைத் துளைத்து வருகிற வெளிச்சம். பாதையெல்லாம் பூப்பூவாய்ப் பரவிக் கிடக்கிறது. அவன் குதிரையில் போகிறான். அது நல்ல வேகமாக ஒரே கதியில் போகிறது. செடி கொடிகள் முகத்தில் மோதி விலகு கின்றன. நிலா எட்டி எட்டிப் பார்க்கிறது. எங்கே போனோம் என்று தெரியவில்லை. கனதூரம் போனான். கனநேரம் போனான். பிறகு திரும்பி அதே பாதையில் அதே மாதிரி வருகிறான். குளம்பொலி மட்டும் கேட்கிறது. இந்த நிலாப் பைத்தியம் எப்போது தொடங்கியதென்று சொல்ல முடியாதிருக்கிறது. சின்ன வயதில் :

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டுவா

என்று பாடிக்காட்டி அம்மா சோறு தீற்றிய போதா அல்லது அதற்கும் முன்பேயா? அதன் பிறகு அம்மாவிடம் கேட்ட ஆயிரம் நிலாக் கதைகள் வேறு உருவேற்றியிருக்கலாம். சின்ன வயதில் அப்பு வளவு முற்றத்தில் கழித்த இராப்பொழுதுகள்கூட இந்த

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமிக்க படைப்பாளியாக அடையாளம் காணப்பட்டவர் சாந்தன். தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமையும் படைப்பாற்றலும் கொண்டவர். இவரது பல படைப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கின்றன. அவரது படைப்புகள் என்றும் புதிய அநுபவத்தைத் தரவல்லன. இவர் எழுதிய WHIRL WIND என்னும் ஈழத்து ஆங்கில நாவல் மிகவும் தலை சிறந்ததென உலக இலக்கிய ஆளுமைகள் குறிப்பிட்டிருக்கின்றனர். இலங்கையின் வட பகுதிச் சமூகத்தில் அவர்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து அவர்களின் ஆணிவேராகக் காணப்படுகின்ற கலாசார பொரு ளாதார விழுமியங்களின் நுணுக்கங்களை யோராட்டதளத்திலிருந்து பதிவு செய்வதில் அவர் வெற்றி கண்டவர் என்றும் குறிப்பிடலாம்.

சாந்தனின் எழுத்துலகம் என்ற புத்தகத்தைப் புரட்டிக் கொண்டபோது "நிலா" என் கண்ணில் பட்டது. நிலவையும், நிலவை மையமாகக் கொண்ட பல வாழ்க்கை நிகழ்வுகளையும் அதில் கண்டுகொண்டேன். எங்கும் நிலா ஒன்றே. பார்வையும், இரசனையும்தான் வேறுபடுகிறதாக நான் எண்ணிக்கொள்ளுகிறேன். அந்தச் சிறுகதையில் நிலவுக் கனவுகளும், நிலா வாழ்க்கையும், நிலவு வரும் இரவுகளை முன்னிறுத்திய பதிவுகளும் விரவிக் காணப்படுகின்றன. நிலா வரும் இரவுகளில் பனை ஓலைச் சார்வுகளில் படுத்திருந்து நிலவைப் பார்ப்பதிலும் அதனை அநுபவிப்பதிலும் காணும் சுகத்தை பதிவாக்கி எமது குரல்வளையை வரட்சி காணச்செய்வதிலிருந்து. ஒரு முழுமைபெற்ற எழுத்தாளனாக ஜெயித்துவிடுகிறார் சாந்தன். சாந்தனின் எழுத்துலகம் என்ற புத்தகத்துக்கு முன்னுரை எழுதியிருப்பவர் தமிழக எழுத்தாளர் எஸ்.ஷங்கரநாராயணன். "நானே திறந்த புத்கம். என்னை வாசியுங்கள்" என்றார் மஹாத்மா காந்தி அடிகளார். இதோ சாந்தனின் புத்தகம். நீங்கள் திறக்கக் காத்திருக்கிறது என்று தனது முன்னுரையின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறார் எழுத்தாளர் எஸ்.ஷங்கரநாராயணன். சாந்தனின் நூல்களைத் தேடி எடுத்துப் படியுங்கள். அற்புதமான ரசா அநுபவத்தை பெறுவீர்கள் என்பது நிச்சயம்.

லயிப்பை வளர்ப்பதில் உதவியிருக்க வேண்டும். அது பெரிய முற்றம். ஐம்பதிற்கு சதுரமாவது வரும். இடையில் ஒரு சொட்டு நிழலில்லை. பகலில் புழுங்கல், ஒடியல், புழுக்கொடியல், மருந்துச் சரக்கு, ஓலைச்சார்வு என்று எதையாவது காய வைக்கிற இடம். கிழக்கே இரட்டை கேட் இருந்தது. தெற்கிலும், வடக்கிலும் வாழை பூஞ்செடிகள் தோட்டம். மேற்கில் வடக்கன் மாட்டு வண்டியும் காரும் விடுகிற பெரிய கொட்டில், முற்றத்தின் நாலு பக்கமும் தடி நட்டு குடைத்துணி துண்டு துண்டாகத் தொங்கவிட்டிருந்தது. காகங்கள் அண்டாமல் பார்த்துக் கொள்ள, இந்த முற்றத்தில் பகலெல்லாம் வெயில் கண்ணை மின்னும், பொழுதுபட காயப்போட்டதெல்லாம் எடுத்துவிட்டு தண்ணீர் தெளித்துக் கூட்டிவிட்டால் அது முழுதாக வேறு இடமாகிவிடும். பெரிய கதிர்ப்பாய் விரித்து பின் நேரம் வெட்டிய பனையோலைகளைப் போட்டு ஆட்கள் கிழிப்பார்கள். சிறகடித்து, சட்டம் வார்ந்து, தும்பாக்கி. தும்பாக்கிய ஓலைக் குவியலின் குளிர்ச்சியில் மல்லாந்து படுத்துப் பார்த்தால் ஆயிரங்கோடி - லட்சக்கோடி வெள்ளிப் பூக்கள். பார்க்கப் பார்க்க புதிது புதிதாய்த் தெரியும். நடுவில் ரோசாப் பூப்போல, இராசாத்தி போல் நிலவு வரும். தென்னை வட்டு, பனம்வட்டு, கொட்டில் கூரை, வேப்பங்குழை எங்கும் பட்டு வழிகிற நிலவு, ஓலைக் குவியலில் கண்ணயர்ந்து அடுத்த நாள் காலையில் படுக்கையில் விழிக்கிறபோது அதிசயமாய் இருக்கும்.

எட்டாம் வகுப்புக்கு வந்தபோது தமிழ்ப்பாடப்புத்தகத்தில் பாரதி பாடல்கள் சில இருந்தன. அவற்றில் இரண்டு படித்த உடனேயே மனதில் பதிந்தன."எந்தையும் தாயும் குலவி மகிழ்ந்திருந்தது இந்நாடே அதில் "நிலவினில் ஆடி" என்ற அடிகள் முக்கியமாக மற்றது "காணி நிலம் வேண்டும்.""முத்துச் சுடர் போலே நிலவொளி முன்பு வர வேண்டும்." என்ற வரிகள், பிறகு "பாரதி பாடல்கள் தொகுதியை கிருஷ்ணசாமி கடையில் தேடி வாங்குகிற அளவுக்கு ஆக்கின. விஞ்ஞானம் ஆறாம் வகுப்பிலிருந்தே கட்டாயப் பாடமாயிருந்தது. மனுவேலோ சாமுவேலோ என்பவர் எழுதிய புத்தகப் பாடநூல். கிரகணங்கள் பற்றியெல்லாம் அதில் இருந்தது. பூமிக்கும் சூரியனுக்குமிடையே சந்திரன் வரும் போது சூரிய கிரகணம் வருகிறது. சந்திரனுக்கும் சூரியனுக்கு மிடையே பூமி வரும்போது சந்திர கிரகணம் வருகிறது. பிறகு மேல் வகுப்பு களில் 'அம்ப்ரா', 'பெனம்ப்ரா' எல்லாம் பற்றியும் படித்தாலும் கிரகணம் என்று நினைக்கிற போதில் ராகுவும் கேதுவும் தான் முதலில் மனதில் தலை காட்டுகின்றன. பாம்பு கௌவியதும் கக்கியதுமான ஒரு முழு நாடகத்தை வடிவாகப் பார்க்கிற வாய்ப்பு ஐந்தாறு வயதில் சித்தித்தது. அதன்பிறகு அப்படி வசதியான முன்னிரவு முழு நிலா வேளையில் கிரகணம் வந்த ஞாபகமில்லை. அப்போது இருந்த தெல்லாம் ஒரு பயம் ஒரு பரிதவிப்புதான். பாம்புகள் சந்திரனை விழுங்குகிறபோது அங்கே மாட்டில் பால் கறந்து கொண்டிருக்கிற ஒளவையார் ஆச்சிக்கு என்ன நடக்கும்? அவ சந்திரனுக்குள்ளே போய்விடுவா என்றும், பாம்புகள் பத்திரமாய்ப் பிறகு அவளையும் சேர்த்துக் கக்கி விடுமென்னும் அம்மா சொன்னதில் ஆறுதல் வந்தது. ஏழாம் எட்டாம் வகுப்பு காலங்களில் என்றுதான் ஞாபகம். ரஷ்யாக்காரர் 'ஸ்புட்னிக்'கை அனுப்பியது. மாதத்தில் முக்கால் பங்கு

இரவுகளில் நிலவைப் பார்க்க முடியாத ஆதங்கம், அப்போது பத்திரிக்கைகளெல்லாம் "செயற்கைச் சந்திரன்' 'செயற்கைச் சந்திரன்' என்றெழுதிய போது மறைந்தது. இனி எல்லா இரவுகளிலும் நிலா வீசும் என்ற எதிர்பார்ப்பு பிறந்தது. அந்தச் செயற்கைச் சந்திரன் வானில் சுற்றுகிற போது எழுந்த "பீப் பீப்" ஒலியை எல்லோருமே ரேடியோ அருகிலிருந்து வலு கவனமாக செவிமடுத்தார்கள். ஆனால் பிறகு பூமியைச் சுற்று கிற ஒரு பண்பில் மட்டுமே அது சந்திரனாகுமென்பது வெளித்த போது பெரிய ஏமாற்றமே. இதேபோல, நிலவும் விஞ்ஞானமும் சந்தித்த சம்பவமொன்று பிறகொரு தடவை நன்றாக மனதில் பதிய நேர்ந்தது அறுபத்தொன்பதிலாயிருக்க வேண்டும். கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் படித்துகொண்டிருந்த காலம். ஓரிரவு மொரட்டுவை நகரையே ஜனங்கள் வெடிகளால் அதிர வைத்தார்கள். அமெரிக்காக் காரன் சந்திரனில் இறங்கியதை ரேடியோக்கள் அப்போது அஞ்சல் செய்து கொண்டிருந்தன.ஊரை விட்டுக் கட்டுப்பெத்தைக்குப் புறப்பட முதலில் தவித்த தவிப்பு சொல்ல முடியாது. வீட்டை விட்டு – ஊரை விட்டு பிரியப் போவது அதுதான் முதல் தடவை. இந்த இயல்பாக சுவறி விட்ட– வாழ்வு தன்னிலிருந்து பிய்த்தெடுக்கப்படுவது தாங்க முடியாததாயிருந்தது. பெற்றோர், சகோதரர்கள் வீடு, என்பதோடு நண்பர்கள், அவர்களைச் சந்திக்கிற அம்மன் கோவிலடி எல்லாம் பிரிய முடியாதவையாக இருந்தன. அம்மன் கோவில் தேர் முட்டி அப்போதைய வாழ்வின் மையமாக இருந்தது. நண்பர்களின் சந்திப் பிடம். கனவுகளை வாழ்க்கையை எல்லாம் அவர்கள் பகிர்ந்து கொண்ட இடம். உலக ஞானத்தை வளர்த்த வித்யாசாலை. தேர் முட்டிக்கு அப்போது கூரை இல்லாதிருந்தது. படிப்படியாக ஏறி பன்னிரெண்டு பதிமூன்றடி உயரத்திற்கு, வயல் சூழ்ந்த வெளியில் வானத்தை நோக்கியபடி அந்த இடத்தை ஆளும் அரசு கட்டிலாய் அது திகழ்ந்தது.

மாலைப்பூசை முடிந்த கையுடன் உச்சிக்கு ஏறினால், வெயில் தாழ்ந்து, செவ்வானம் பூத்து, பிறகு அதுவும் அந்திக் கருக்கலில் கரைந்து விடுகிற மட்டும்– அர்த்தசாமப் பூசை மணி கேட்கும்வரை பொழுது போவதே தெரியாமலிருக்கும். முன் நிலவு இரவுகளை ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அமாவாசை கழிந்தால் "நாயலச்சல் தரக்கூடிய நாளாம் பிறையைக் காண்பதிலிருந்து பிறகு பருவத்திற்கு அடுத்த நாள்வரையும் தினசரி இந்த நிலாத் தோயல் வாய்க்கும். தேர்முட்டிக்கு நேர் முன்னால் மகிழமரம் நிற்கிறது. சோழகம் தொடங்கிற போது மகழ் பூக்கும். பௌர்ணமியன்றைக்கு மகிழின் உச்சிக்கும் அப்பால் வயல் வெளிகளைத் தாண்டி தூரத்தில் நிரைகட்டி நிற்கிற பனைகளுக்கு மேலே தொடுவானத்தில் அந்த முழு

⇨

வெண்ணெய்ப் பந்து காலித்து எழுகிற நேரம் உன்னத மானது. கட்டுப்பத்தை வாழ்வுடன் இந்த விடலைத்தனத்திற்கு விடைதர நேர்ந்தது. தொழில்நுட்பக் கல்லூரிப் படிப்பு, பிறகு அது முடிந்த கையுடனே உத்தியோகமென்று கொழும்பு வாழ்வே நியதியாகிப் போனது. பொதுவாக சினிமாவும் அவற்றில் வருகிற பாடல்களும் தொண்ணூறு சதவிகிதம் ஆத்திரமூட்டவே செய்கின்றன. எனினும் சின்ன வயதி லிருந்து மனதோடு பதிந்துவிட்ட சிலதும் இருக்கின்றன தான்.

"வாராயோ வெண்ணி லாவே..."

"ஆகா இன்ப நிலாவினிலே.

ஒகோ, வெண்ணிலாவே.

அமுதைப் பொழியும் நிலவே.

மிஸ்ஸியம்மா, மாயா பஜார், பிரேம பாசம், இந்த படங்களெல்லாம் எப்போதோ வந்தவை. இவை எல்லா வற்றையும் அப்போது பார்க்க முடிந்திருக்கிறது. மூன்றும் ஜெமினி, சாவித்திரி நடித்தவை. ஒன்றுவிட்ட அண்ணா ஒருவர் – அந்தக் காலத்தில் ஜெமினி விசிறியாயிருந்தவர் அவர் – புண்ணியத்தில் இவற்றைப் பார்க்கக் கிடைத்தது. மற்ற. நாலாவது பாடல். வருகிற படம் சிவாஜி, யமுனா நடித்ததாயிருக்க வேண்டும். பெயர் ஞாபகமில்லை. எப்போது யாருடன் பார்த்தோம் என்பதும் நினைவில்லை. இவற்றில் அந்த பிரேம பாசம் பாடல் காட்சி அப்போது மனதிலுவுட்டிய கிளர்ச்சி இன்னமும்தான் மறக்க முடிய வில்லை மிஸ்ஸியம்மாவில் இருவரும் தோட்டத்தில் நின்று நிலவைப் பார்த்து பாடுவது. மாயாபஜாரில் அபிமன்யுவும் அவன் காதலியும் தோணியில் துடுப்பு வலித்தபடி அந்த த்ரில் எல்லாம் அந்தக் காலத்துடன் மறைந்து விட்டாலும், இந்தப் பாட்டுகள் இன்னமுந்தான் எங்கு கேட்டாலும் மனதை வருடச் செய்கின்றன. இதற்கெல்லாம் இந்த நிலவுதான் காரணம் என்று படுகிறது.

அம்மன் கோவில் தேர்முட்டியுடன் திருப்திப் பட்டுவிடாது, நிலா இரவுகளில் வேறு இடங்கள் தேடிப்போன நாட் களுமிருந்தன. தோட்டவெளி ஊருக்கு மற்றப் பக்கத்தி லிருந்தது. புன்செய் நிலம்: புகையிலைதான் முக்கி யப் பயிர். கார்த்திகையில் நட்டு மாசியில் வெட்டியபின் அநேகமாக வெறும் நிலமாக கிடக்கிற வெளி. ஒன்றிரண்டு பேர் மிளகாய், வெங்காயம் நடலாம். மற்ற நிலங்களில் ஆடு, மாடுகள் மேயும். ஆனி ஆடியில் சோழகம் கிளப்புகிற செம்புழுதியுடன் நெரிஞ்சிமுள் குத்தக் குத்தப் பொடியன்கள் கொடியேற்றுவார்கள். எட்டுமூலை, கொக்கன், பிராந்தன் பாம்பன் எல்லாம் இரவிரவாக விண் கூவும்.

புகையிலை வளர்ந்து சனைத்திருக்கிற வேளைகளில் இடமே மாறிவிடும். அலையடிக்கிற கடல் மாதிரியிருக்கும் நடு ரோட்டில் போகிறபோது கடல் நடுவில் நடக்க முடிகிற மாதிரி.

தோட்ட வெளியில் மாசி பங்குனி ஏற்ற மாதங்களாய் இருந்தன. முக்கியமாக மாசி. பாதை இருமருங்கும் சய னைத் திருக்கும் பயிர்களிடை நிலாப் பொழியும் பணி யில் நீர்த்த நிலா. இந்த பனி மூட்டங்கள் நிலவுக்குப் புதுப் பரிமாணங்கள் தருவதாய் படுகிறது. புகையிலையின் பச்சை நெடியும் பனிக் குளிரும் இந்த ஒளியும் ஓர் அற்புத சேர்க்கை. அதை மாசியின் முன்னிலவு இரவுகள் மட்டுமே தர முடியும்.

இந்த இடம் பற்றியும் ஒரு கனவு வந்தது. அதில் தோட்ட வெளி பெரிய சமுத்திரமாக மாறியிருந்தது. அலை தளும்பு கிற பெரிய சமுத்திரம், நடுவில் தெருமட்டும் போகிறது. கடலிலிருந்து ராட்சத டைனோஸர்கள் எழுந்து வருகின்றன. புது விதமான மரங்கள் தூரத் தூரத் தெரிகின்றன. நிலவு புதுமையான ஒளியொன்றை வீசுகிறது. கஷரினா கடற் கரைக்குப் பிக்னிக் போய் வந்தபின் தான் அந்த கனவு வந் திருக்க வேண்டும். கல்லூரி எழுபத்தைந்தாவது ஆண்டு விழாச் சமயத்தில் ஏ.எல்.மாணவர்கள் நாடகம் போட்ட ார்கள். 'வாழ்வெனும் தோணியிலே என்று பெயர். இவன் வில்லன். குகன், விஜயதாசன் இப்படி இன்னும் பல பேர் நடித்தார்கள். பரா, கதை வசனம். கார்த்திகேயன், ஹிரோயின். கனகநாயக மாஸ்டர் டைரக்ட் செய்தார். நன்றாகத்தான் நடந்தது. நல்ல பெயர். இரண்டு நாள் மேடையேற்றினார்கள்.

மூன்றாம்நாள் கனகநாயகத்தார் நாடகக் குழுவை தன் சொந்தச் செலவில் கஷாரினா பீச்சுக்குக் கூட்டிப் போன ார். வாடகைக்கு பிடித்த தனி பஸ் ஐந்து மணிக்கு வந்தது. கடற்கரைக்கு போய்சேர்ந்த போது மைம்மலாகி விட்டது. அந்தத் தனிமையில், ஒரு புறத்தில் அரணாய் நிற்கிற சவுக்கந்தோப்பின் காற்றும், மறு புறத்தில் கடலுமாய் இரைந்து கொண்டிருந்தன. நீரில் இறங்கிய போது நிலவு காலித்தது. இங்கு வந்தது இதுதான் முதல் தடவை நிலவில் கடலில் நீந்துவதும் இதுதான் முதல் தடவை. நிலவு கடலின் பிரமாண்டத்தை உணர்த்தவே வந்திருந்தது. அது தனியாகப் பதிந்த நிலா.

எருமைகள் போல நீரில் ஊறித் திளைத்தவர்களை கரையேற்றியது கனகரின் கத்தல் மட்டுமல்ல் இன்னொன்று மிருந்தது– சொறி சலியாக் கடலில் மிதக்கிற ஜன்மம். கூட்டமாய் வருமாம். பயங்கர் பிராணி என்றார்கள். மேலில் பட்டால் எரிவும், சுணையும் தாங்கமுடியாதிருக்குமாம். அது காக்கை – ச ர றி. இரத்தச் சொறி பட்டால் இரத்தம் இரத்தமாய்ச் சத்தியெடுக்குமென்றார்கள். எல்லாம் அங்கே தெல்லுத்தெல்லாக காண நேர்ந்த மீனவர் சொன்னவை. பிராணியியல் ஆசிரியரான கனகர் இன்னும் கனக்கச் சொன்னார். ஃபைலம், கிளாஸ் அது இது என்று அவர் சொன்னவற்றில் இப்போது மனதில் மீதி இருப்பது சொறியின் இங்கிலீஷ் பெயர் மட்டுந்தான். 'போச்சு கீஸ்மான் ஒஃவ் வார்.

கட்டுப்பெத்தை வாழ்வில் இந்த நிலவு புதிய அறி முகம் கொண்டது. தென்னஞ் சோலைகளின் சலசலக்கிற கீற்றுக்களில் மின்னித் தெரிகிற நிலவு. தென்னங்கீற்றும் நிலவொளியும் எவ்வளவு அற்புதமாய் இசைவு கொள்கின் றன! பச்சைப்புல் தரைகளில் – வெள்ளை மணல் பரப்பு களில் இந்த நிலவு சுவறுகிறது.

ஒரு நள்ளிரவு. அடர்ந்த சிறிய தென்னந் தோப்பொன்றின் நடுவே அழகிய சிறு குடிசை ஓலைகளும் குரும்பைக் குலைகளும் கைக்கெட்டும் தூரத்தில், ஒலைகளுக்குள்ளால் நிலவு தாச்சி மறிக்கிறது. குடிசையில் ஒரு குடுமிக்கார மனிதனும் அவன் மனைவியும், நடுத்தர வயதினர். இவன் அவர்கள் வீட்டில் விருந்தாளியாக வந்திருக்கிற மாதிரி இருக்கிறது. குடுமிக்கார மனிதன் தென்னிலங்கைக் கிராம வாசி போலவும், தென்பாண்டி மறவர் போலவும் இருக்கிறது. தெளிவாயில்லை. அந்த மனிதனும், மனைவியும் இளநீர் வெட்டித் தந்து அன்பும் மரியாதையுமாய் உபசரிக்கிறார்கள்.

கல்லூரிக்குப் போகிற தெருவில் பாதித்தூரம் தாண் டியதும் இரண்டு பக்கமும் வயல்கள் வந்தன. உண்மை யில் கட்டுப்பெத்தையைப் பரிச்சயங் கொண்டதுசுட்ட இந்த இடத் தில்தான். அதுவும் ஒரு நிலவில்தான். அட்மிஷன் கிடைத்து கல்லூரி திறப்பதற்கு முதல்நாள் இடத்தைப் பார்த்து வைக் கலாமென்று பாலாவையும் கூட்டிக்கொண்டு வெள்ளவத் தையிலிருந்து போனான். சந்தியிலிறங்கிய போது இருட்டிவிட்டது. இந்த முக்கால்மைல் தூரமும் பஸ்ஸைப் பாராமல் விரித்துக்கொண்டு நடந்தே போனார்கள். பஞ்சுவையும், சோமுவையும் முதலில் சந்தித்ததுகூட அப்போதுதான். அரவமற்ற தெருவில் வயற்கரை மத கொன்றில் நிலவிலும் நிசப்தத்திலும் லயித்தபடி சிகரெட் குடித்துக்கொண்டிருந்த அந்த இருவருமே கல்லூரிக்கு வழிகாட்டினார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு பஞ்சு இவனைக் கன்ரீனில் அடையாளம் கண்டு விசாரித்தான்.

பிறகு, இந்த வயல்வெளிகள் மனதுக்கு வலு நெருக்கமானவையாக ஆகிவிட்டன. பஞ்சுவையும் சோமுவையும் போலல்லாமல் சைக்கிளில்தான் இவன் அந்த இடத்திற்குப் போக முடிந்தாலும்கூட என்ன வென்று தெரியாத ஒரு பூண்டின் வாசனை, அமைதிக்குக் கனம் சேர்க்கிற தவளைகளின் இரைச்சல், இருந்திருந்துவிட்டு ஒளி மங்கி மறைகிற வாகனங்கள் உருக் கிய வெள்ளியாக மதகின் கீழே பளபளக்கிற வெள்ளம். இந்த வெள்ளம் ஊரை நினைவூட்டும். புகையிலை இறைப்புக்கு நேரம் நெருக்கடியாகிறபோது இரவிரவாக நிலவொளியில் இறைப்பார்கள். பெரிய மாமாவின் தோட்ட த்திற்கு இதற்காக அடிக்கடி போயிருக்கிறான். வேகமாக வாய்க்காலில் நீர் பாய்ந்தோடும். மெஷின் ரீங்காரம் சுருதி கூட்டும்.இரவெல்லாம் இறைக்க மாட்டார்களா என்றிருக்கும்.

பௌர்ணமியன்றைக்கு விடுமுறை விடுவது நல்ல விஷயந்தான். இலங்கைதான் பௌர்ணமியை விடுமுறை யாக்கிய ஒரே நாடோ? அது இந்துக்களுக்குப் புனித தினம். பௌத்தர்களுக்கும் என்பது முக்கிய விஷயம். வெள்ளை உடை தரித்து மக்கள் புத்தவிகாரைகளுக்குச் சென்று வருவது பார்க்க ரம்மியமாய்த்தா னிருக்கிறது. ஏழெட்டு வருஷங்களுக்கு முன் கொழும்பிலிருந்து நண்பர்கள் யாழ்ப்பாணம் பார்க்க வந்தார்கள். நயினாதீவுக்குப் போனசமயம் இவர்களது நட்பைப் போல அன்று அதுவும் ஒரு பௌர்ணமியாயிருந்தது. கொழும்பிலிருந்து புறப்பட்டதிலிருந்து திரும்பப் போய்ச் சேர்ந்து இந்தப் பயணம் நிறைவேற்றுகிற வரைக்கும் இந்தக் குழுவின் தலைவனாக அவன்தானிருந்தான். மேற்சட்டையின்றி கோயிலுக்குள் வந்து திருநீறும் சந்தனமுமாய்ப் பூசிக் கொண்டு – யார்தான் அவர்களை அப்போது வேற்று மனிதர் என்று சொல்லியிருக்க முடியும்? – கும்பிட்டு வந்ததும், மடத்தில் அன்றிரவு புதினப் பத்திரிகையையே பாயாய் விரித்து எல்லோருமாய் அவனைச் சூழ்ந்து கொண்டு தூங்கிப் போனதும் விகாரங்களின் வெண்கா வியும், தென்னைகளும், நிலவும் கடலும் நினைவில்.

பார்க்கிற பெண்களை மனதால் அவன் நிர்வாண மாக்கி ரசிப்பதாக யாரோ ஒரு தடவை குற்றம் சொன்ன துண்டு. அது உண்மையல்ல, ஆனால் அது போன்ற ஒரு விஷயம் உண்மையாயிருக்கிறது. பகலில், புதிதாய், வடி வாய்க் காண நேர்கிற ஒவ்வோரிடத்தையும் அது நில வில் எப்படி இருக்குமென்று கற்பனை செய்கிற வழக்கம். துர்க்கையம்மன் கோயில், சந்நிதி கோயில் கல்லுண் டாய். இந்த நிலாப்பித்து நினைவறிந்த நாளிலிருந்தே உள்ளதுதான். பிறகு தனக்கென வீடொன்று கட்ட வாய்த்தபோது அது சிறியதாகத்தான் அமைந்தாலும், நடுவில் நிலா முற்றம் வரத்தக்கதாக கஷ்டப்பட்டு வடிவ மைத்தான். கட்டிட வடிவமைப்பாளனாயிருந்தது வசதியாய்ப் போயிற்று. புதுமாதிரி வீடென்று பார்த்தவர்கள் பாராட்டி னார்கள். ஆனால் அது மறக்கப்பட்டு விட்ட – யாழ்ப் பாணத்தின் பாரம்பரிய – நாற்சார் வீட்டுப்பாணியே என விளக்கினான். நிலவிலும் நீரிலும் ஒன்றாகத் தோய்வது கோடை இரவுகளில்தான்சாத்தியமாகிறது. தென்னையும், கமுகும் அரண் சூழ்ந்த கிணற்றிலிருந்து அள்ளியள்ளி ஊற்றுவது சொர்க்க அனுபவம்.

கஷரினா பீச்சுக்குப் பிறகு முன்னிலாவைக் கடலுடன் சம்பந்தப்படுத்திக் கழிக்கிற வாய்ப்பு திருகோணமலைக்குப் போனபோது மட்டும் ஒரு தரம் கிட்டியிருக்கிறது – மற்றபடி மேற்குக் கரையான கொழும்பில் எப்படி அது வாய்க்கும்? ஆனால், ஊருக்குப் போவதற்காகக் காலை ரயிலில் புறப்படுகிற நாட்களில் இந்த மேலைக்கரை வித்தியாசமான ஒரு தரிசனம் தந்திருக்கிறது. கோட்டையிலிருந்து ஐந்தே முக்காலுக்குப் புறப்படுகிற ரயிலைப் பிடிக்க நாலரை ஐந்துக்கோ, சில சமயங்களில் அதற்கும் முன்போ, கரையோர ரயிலில் வந்துவிட வேண்டியிருக்கிறது. பம்பலப்பிட்டியில் வெள்ளவத்தையில், அங்குலான விலிருந்தெல்லாம் அந்த விடியலில் ரயிலேறுகிறபோதில் காலிமுகம் வரையிலும் கடலும் கூட வரும். அநேக போதுகளில் தேய்பிறையின் இனந்தெரியாத சோகத்துடன் பின்னிலா கடலை மினுக்குவதைக் காண நேர்கிறது. உப்புக் காற்று முகத்தில் மோதும்.

எப்போதோ அப்புவுடன் காரில் மறவன்புலவுக்குப் போனது இன்னும் நினைவிருக்கிறது. அரைக்கோளமாய் வானம் கவிழ்ந்து மூடிய அந்த வெளியில் குன்று குன்றெனக் குவிந்திருந்த சூடுகளிடையில் வெள்ளைமணல் மேடிட்டிருந்தது. அந்த மண்ணும் அதன் நிறமும் அப்போதைய வயதில் அந்நியமானவை. வானத்திலிருந்து வழிந்த நிலவே வெளியெல்லாம் மணலாய்ப் பரந்தது மாதிரி இருந்தது. பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்க, நேரம் போனதே தெரியாமல் மண்ணில் விளையாடியதும், பிறகு புரண்டு அப்படியே தூங்கிப்போனதும்.

கல்லூரி மைதானத்தின் கரையில் நிற்கிற பன்னீர் மரத்தின் கீழே சொரிந்து கிடக்கிற பூக்களும் பச்சைப் புற்களும் சேர்ந்து சமைத்த பாயில் சகாக்கள் புடைசூழ கொலுவேற்பதும் தேவனை ஆஸ்தான வித்துவானாக்கி அவன் குரலும் நிலவும் தரும் போதையில் கிறங்கிப் போவதும்.

ரஷ்ய இலக்கியங்களுடன் பழக்கமேற்பட்டபோது லெனின் கிராத்தையும் அதன் வெண்ணிரவு களையும் அறிய நேரிட்டது. நிலவிரவுகள் மாதிரி இவையும் சொர்க்கத்தை பூமிக்குக் கொண்டு வருமா எனத் தெரி யாதிருந்தது. மாசி யில் மட்டுந்தான் என்றில்லை – வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் நிலவு ஒவ்வொரு பரிமாணம் கொள்ளத்தான் செய்கிறது. பங்குனியில் வளர்கிறது. சித்திரையில் உச்சம் கொள்கிறது. வைகாசி அதற்குத் துணை சேர்க்கிறது. புரட்டாசி ஐப்பசியில் காண நேர்கையில் இரட்டிப்பு மகிழ்வு. கார்த்திகையிலும் அப்படி– யே எனினும் விளக்கீடு வந்துவிடுகிறது. சித்திரை நிலவில் பத்திரகாளி கோயில் திருவிழா நடக் கும். வைகாசி விசாகத்– தில் அம்மன் கோயில் தேர். பிறகு ஆணிப் பௌர்ணமியில் நயினாதீவில் தேர். ஆவணியில் நல்லூர் உற்சவம் வருகிறது. அநேகமாக நல்லூரில் மஞ்சத் திருவிழா பார்த்துவிட்டு நிலவில் திரும்புகையில் எல்லா வீடுகளிலும் ரேடியோக்கள் கண்டிப் பெரஹராவை அஞ்சல் செய்துகொண்டிருக்கும்.

சோழகமும் நிலவும் சாஸ்வதமாய் இருந்தால் உலகில் எந்தத் துன்பமும் அணுக முடியாது என்று படுகிறது. சித்திரையில் இவை சந்திக்கின்றன. சித்திரா பருவத்தில் இரவு மட்டுமில்லை, பகலும் சந்தோஷமானதுதான். ஊரெல்லாம் ஒவ்வொரு கோயிலிலும் சித்திரைக் கஞ்சி காய்ச்சுவர்கள். சித்திர புத்திர நாயனார் கதை படிப்பார்கள்.

இந்த வருஷம் சித்திரைக் கஞ்சி யாரும் காய்ச்சவில்லை. கதை படிப்புமில்லை. கோவில்களருகில் ஜனம் சேர்வது ஆபத்தானதாயிருந்தது. தவிர, கொண்டாட்ட மனநிலைகூட யாருக்கும் இருக்கவில்லை. பௌர்ணமி வந்தது ஞாயிறன்று. அதற்கு முந்திய ரில் பட்டணத்தில் நடந்த

சம்மாரத்தில் இந்த ஊரிலிருந்தே இரண்டுபேர் செத்தார்கள். அன்றிலிருந்து அங்கு ஊரடங்கு, செவ்வாய் அன்று தூரத் தூரக் கேட்ட வெடிச் சத்தங்களும் தாழப் பறந்த விமானங்களுமாய் ஊரே கிலி கொண்டிருந்தது என்னாகுமென்று தெரியாதிருந்தது. புதனன்று ஏதோ அவசர அலுவலாய்ப் போன ஜெயந்தன் பிறகு திரும்பி வரவில்லை என்று சொன்னார்கள். இவை எல்லாவ– ற்றிற்கும் ஒத்திசைவுபோல மூன்று நான்கு நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் துக்கம் காத்தது. ஞாயிறிரவு ஏழெட்டுமணிபோல் வெளியே வந்தபோது வானம் வெளுத்து நிலவு தெரிந்தது. "அற்றைத் திங்களவ் வெண்ணி லவில்." வரிகள் ஞாபகம் வந்தன. ■

# தண்ணீர் பஞ்சத்தால் தவிக்கும் தமிழகம்?





## இத்தகைய தவிப்புகள் நாளை எமதாகலாம். முன்னெச்சரிக்கையாக இருப்போமா?



நீர் விடயத்தில் நீங்களும் விழிப்படைய வேண்டும் என்பதற்காகவே இந்தக் கட்டுரை இங்கே பிரசுரிக்கப்படுகிறது. நீர்த் தட்டுப்பாடு வருவதற்கு முன்னர் அதற்கான முன்னெச் சரிக்கையுடன் நீரை நிலத்தடியில் சேர்த்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற் கொள்ளாது போனால் இன்னும் சில நாட்களில் நாமும் கீழ் குறிப்பிடும் சென்னை வாசிகளாகத்தானிருப்போம். இது கட்டுரையல்ல. ஒரு எச்சரிக்கை. அறிவுறுத்தல்

தண்ணீர் ஒரு போதும் கண்ணீர்க் கதையாகக் கூடாது.நீர் இன்றி அமையாது உலகம்.தண்ணீருக்காகத் தமது உறக்கத்தைத் தொலைத்துவிட்டு தண்ணீர் குழாயடியில் காத்துக் கிடக்கின்ற பரிதாபம் நடைபெறுவது வேறு எங்கிலும் அல்ல. நமக்கு அண்டையிலுள்ள தமிழகத்தில்தான்.

பின்னிரவுப் பொழுதுகளில் சரியாகத் தூங்க முடியவில்லை என்று அங்கலாய்க்கின்றார் சென்னை வாசி ஒருவர். அடி பம்புகளின் ஓசை எம்மை வாட்டி வதைக்கிறது.

முன்னெப்பொழுதும் சந்தித்திராத வகையில் மிகப் பெரும் நீர்த் தட்டுப்பாட்டை சந்தித்திருக்கிறது சென்னை. தமிழகத்தில் சென்னை மட்டுமல்ல பல சிறு நகரங்களும் தண்ணீர் தட்டுப்பாட்டால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் கிராமங்களும் விதிவிலக்கல்ல.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து விட்ட தால்தான் இந்தத் தட்டுப்பாடு வந்திருக்கிறது என்கிறார் ஒருவர். சென்னைக்குக் குடிநீரை வழங்கும் அண்டைய ஏரிகள் நான்கும் தண்ணீர் இன்றி வரண்டுபோய்க் கிடக்கின்றன. சென்னையின் அண்டைய மாவட்டங்களில் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டியும் கல்குவாரிகளில் தேங்கிய நீரைச் சுத்திகரித்தும் நீரைச் சென்னை மக்களுக்கு விநியோகிப்பதற்கு சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் தன்னாலான முயற்சியை மேற்கொண்டுவருகிறது.

ஆனால் இவை அனைத்துமே காலங்கடந்த முயற்சிகள். ஏனெனில் கடந்த காலங்களில் இரு பெரும் வெள்ளத்தை சென்னை சந்தித்திருக்கிறது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அழிவுகள் நடைபெற்றிருக்கி ன்றன. பல பேர் பாதிப்புக்குள்ளானார்கள். பலரது வங்கிக் கணக்கில் பெருமளவு பணமிருந்தும் அவர்களால் ஒரு போத்தல் நீரைக் கூட வாங்க முடியாதபடி கட்டடங்களின் மேல் மாடிகளில் தஞ்சம் புகுந்து கொள்ள வைத்து விட்டது அந்த மழை வெள்ளம். மழையால் பாரிய நெருக்கடியைச் சந்தித்த பின்பும் சென்னைக்குக் குடிநீரை வழங்குகின்ற அந்த ஏரிகளைத் தூர்வார்வது பற்றி எந்தவித முயற்சிகளையும் தமிழக அரசு எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழாமலில்லை.

நீர் மேலாண்மையில் காட்டப்பட்டு வரும் மெத்தனப்போக்கைத் தமிழக அரசு கைவிட வேண்டும் என்றும் மக்கள் குரலெழுப்புகின் றனர். நாளுக்கு நாள் சென்னை மாநகரத்தின் எல்லை விரிவடைந்து போவதற்கு ஏற்றவாறு விநியோகப் பாதைகளும் விஸ்தரிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. எல்லை விஸ்தரிப்புடன் போட்டி போட்டுக் கொண்டு நகரத்துச் சனத்தொகையும் வளர்ந்து கொண்டு வருகிறது. அரசும் அதநாட்சியாளர்களும் தேர்தலை எதிர்கொள்வதிலும், ஆட்சி அரியணையைக் கையகப்படுத்துவதிலும் காட்டும் அக்கறை மக்களில் காட்டுவதில்லை. தேர்தலில் வெற்றி கொள்வதற்காக இறைக்கும் பணத்தின் ஒரு பகுதியை ஏரிகளைத் தூர்வாரி புத்தாக்கம் செய்வதற்குப் பயன்படுத்தினால் என்ன? என்று மக்கள் கேள்வியெழுப்பி இருக்கின்றனர்.

இலங்கையில் நிலத்தடி நீரை நம்பியே தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பவர்கள் வட பகுதியினர். கிணற்று நீர் பாசனத்தையும், ஏரி மற்றும் குளங்களில் தேங்குகின்ற மழை நீரை நம்பி வேளாண்மையை முன்னெடுப்பவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர். எனவே பருவகாலத்தில் பெய்கின்ற மழைநீரைத் தேக்குவதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்து பல நீர்த்தேங்கங்களை உருவாக்கிய நம் முன்னோர்களின் செயற்பாடுகளால் உருவான பல குளங்கள் புனரமைப்பின்றிக் கிடப்பதைக் காணலாம். அவைகள் அனைத்தும் நீர்பாசனத் திணைக்களத்தினால் உரிமை கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே அரசே அவற்றை புனரமைக்க வேண்டும். அவற்றிற்கான நிதியையும் அவர்கள் அந்தப் பணிக்காக ஒதுக்க வேண்டும். ஆனால் அத்தகைய பணிகள் பல முன்னெடுக்கப்படாமல் இருப்பதே நிலத்தடி நீர்மட்டம் இன்னும் தாழ்ந்து போவதற்குக் காரணமாக இருக்கிறது. அத்துடன் அரசியல் பின்னணிகளோடு அழிக்கப்படும் காடுகள். பொறுப்பற்ற மற்றும் இது பற்றிய பூரண விழிப்புணர்வு இல்லாத மக்களினால் முன்னெடுக்கப்படும் ஆழ் துளைக் கிணறுகளின் (குழாய்க் கிணறுகள்) உருவாக்கங்கள். இவைகளும் எமது நாட்டிலும் நன்நீர்த் தட்டுப்பாட்டினைக் கொண்டுவரலாம்.

எனவே நீரை வீணாக்காமல் முன்னெடுக்கக் கூடிய நவீன பாசன முறைமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல விவசாயத் திணைக்களம் முயற்சி எடுக்க வேண்டும். குளாய்க் கிணறுகளைத் தோண்டும் நடவடிக்கைகள் அதற்கான அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இரசாயனத்தை உபயோகிக்கின்ற தொழில் நிறுவனங்களால் வெளியேற்றப்படும் கழிவுகள் சரியான முறையில் முகாமைத்துவப் படுத்தப்படுகிறதா? என்று அதற்குரிய அரச அதிகாரிகள் சோதனையிட்டு அவர்களைத் தண்டிப்பதைவிட அவர்களுக்குச் சரியான அணுகுமுறைகளை எடுத்துச் சொல்லி ஆவன செய்ய வேண்டும்.

எத்தனை நடவடிக்கை எடுத்தாலும் இது பற்றிய மக்களுக்கான விழிப்புணர்வே பலன்தரக் கூடிய விடயம். எனவே சகல மட்டங்களிலும் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்காக நீரைத் தேக்கி வைக்க வேண்டிய பொறுப்பு எம்முடையதென்ற கருத்தை வலியுறுத்த வேண்டும். எனவே இத்தகைய விடயங்களை நாம் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளிலும், குடும்பங்களிலிருந்தும் ஆரம்பிப்பதே சிறந்த வழி. கிணற்றடிகளிலும், நீரக் குழாய்களடியிலும் நின்று விளையாடி நீரை விரையமாக்குகின்ற சிறுவர்களுக்கு நீரின் பெறுமதி பற்றிச் சொல்லிக் கொடுங்கள். நீர்த் தேக்கங்களை மாசு படுத்தக் கூடிய வழிமுறைகளை என்னென்ன என்பதை அத்தகைய தேக்கங்களுக்கு அண்மையில் வசிக்கின்றவர்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களை அத்தகைய செயற்பாடுகளிலிருந்து நீக்கலாம். முயற்சிப்போமா?

தொகுப்பு: குகா

எரியும் பிரச்சினை

# சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படாத திருமணங்கள்



லக்சஷாயினி

திருமணம் சொர்க்கத்திலா நிச்சயிக்கப்படுகிறது? திருமண சேவை நிலையங்கிலேயேதான் நிச்சயமாகின்ற தென்கிறார் விபரமறிந்த ஒருவர்.

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மலையேறிப் போய்விட்டது. இன்று பெண்கள் கல்வித்துறையில் ஆண்களை விட பல உயர் பீடங்களை ஆக்கிரமித்திருக்கின்றனர்.

பெண்கள் இன்று விண்வெளிக்குக்கூடப்போய் வந்தது வரலாறு. இதுஒரு சாராரின்முன்னேற்றத்தை மட்டுமே குறிக்கிறதென்றும் பரவலாக இப்படியே இல்லையே என வாதாடாதீர்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் பெண்கள் எவ்வளவு செல்வச் செழிப்போடு வாழ்ந்தாலும் திருமணம் என்றுவரும்போது அவர்கள் தெரிவு பிறநாட்டவராகத்தானிருக்கிறது. மோகம் அப்படிப் பட்டதாகக் காணப்படுகிறது. பெண்கள்மட்டுமல்ல அவர்களைப் பெற்றவர்களும் அவர்களும் அப்படியான எண்ணங்களுடனேதான் இருக்கி றார்கள்.

இது எதற்காக என்று தெரியவில்லை. உண்மை என்னவாக இருக்கிறதென்றால் வெளிநாட்டுத் திரு மணத்தை எமது சமூகம் ஒரு உயர் அங்கீகாரமாகப் பார்க்கி றது. வெளிநாட்டவர் வரும்போது கொண்டு வந்து செலவு செய்யும் வெளிநாட்டு நாணயத்தைப் பார்த்து இவர்கள் மயங்கிப்போய்விடுகிறார்கள்.

எவ்வளவு சீதனம் கொடுத்தாலும் வெளிநாட்டு மாப்பிள்ளையைத் தேடுவதற்காக பணவிரயமும் அலைச்சலையும் கூட அவர்கள் பெரிதாகக் கணக்கிடு வதில்லை. இப்படிப்பட்டவர்களாலேயே தான் திருமணம் ஒரு வியாபாரமாகப் போய்விட்டது. திருமணப் பொருத்துனர்களோ இதை ஒரு சர்வதேச வியாபாரமாக மாற்றிவிட்டனர். உள்ளூர் மாப்பிள்ளைக்கு ஒரு கட்டணம். வெளிநாட்டு மாப்பிள்ளையாயின் அவரவர் வாழ்கின்ற தேசத்து நாணயத்திலேயே கட்டணத்தை அறவிடுவ தோடு மட்டுமல்லாமல் மாப்பிள்ளை வீட்டார் வாங்குகின்ற சீதனத்துக்கும் அதன் பெறுமதிக்குத் தகுந்தவாறு இத்தனைவிகிதம் என்று ஒரு பட்டியலையே தயாரித்து வைத்திருக்கின்றனர்.

அத்தகைய திருமணப் பொருத்தங்களினூடாக வருகின்ற திருமணங்களெல்லாம் பெரும்பாலும் வெற்றி-கரமாக அமைவது இல்லை. திருமணத்துக்குப் பின்னர் மாப்பிள்ளை யின் ஸ்பொன்சரினூடாகச் செல்லுபவர்கள் சென்று ஓரிரு மாதங்களில் தமது பெற்றோருடன் தொடர்ப-ினை ஏற்படுத்துகின்ற பொழுது ஒருவித சலிப்போடு பேசுவதைப் பார்த்திருக்கிறேன். இவ்வாறு நடைபெறும் திருமணங்களில் சில திருமண பேச்சின்போது மாப்பிள்ளை பற்றிய விபரங்களை அறிய அவகாசமற்ற நிலைமையும் தென்படும். அப்படியான திருமணங்களின்போது தான் பெண்கள் அதிகம் ஏமாற்றப்படுகின்றனர்.

தோசஷம் உள்ள சாதகம் என்றிருக்கின்ற பெண்களுக்கு மாப்பிள்ளை வருவது கஷ்டமான விடயம் என்று நம்பப்படுவதால் அவர்கள் திருமணம் ஒரு இழுபறி நிலையிலேயே இருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் திருமண சேவைகளிலிருந்து பொருத்தம் என்று வருகின்ற சாதகத்தைப் பெரும்பாலும் நிராகரிக்கப் பெற்றோர் விரும்பமாட்டார்கள். அதில் ஏதாவது லாபத்தைத் தேடலாம் என்று சமயம் பார்த்து இருக்கின்ற திருமண புரோக்கர்களும் அத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வர். இப்படியான பொறுப்பற்றவர்களின் செயற் பாட்டால் ஒரு பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படுவதாக அவர்கள் எண்ணுவதில்லை.



வெளிநாட்டுத் திருமணங்களால் வாழ்வைத் தொலைத்த வர்கள் பலருண்டு. தன்னைத் திருமணம் செய்த ஒருவருக்கு ஏற்கனவே திருமணமான விடயம் தெரிந்த பின்பு இவருடன் வாழ இயலாது என்று சொல்லி நாடு திரும்பியவர்கள் பலருண்டு. இதில் பெரும்பாலும் படித்தவர்கள் என்று காணப்படுபவர்கள் எதிர்நீச்சல் போடலாம் என்று அங்கேயே காணப்படும் சட்ட உதவிகளைப் பெற்றுப் பிரிந்து தனித்து வாழ்பவர்களும் உண்டு. இதைவிட இப்படி யான நிலைமைகளில் தங்கள் வாழ்க்கை சிறக்க வேண்டும் என்ற பேராவாவால் நல்ல மாப்பிள்ளையைத் தேடித் திருமணஞ் செய்து வைத்தோம் என்ற திருப்தியில் இருக்க-ின்ற பெற்றோர்க்குத் தனது பிரச்சினைகள் தெரியக் கூடாது என்று சகிப்புடன் வாழ்பவர்கள்தான் ஈற்றில் தற்கொ-லை போன்ற மிகவும் கொடூரமான முடிவுகளை எடுக்கின்றனர்.

> தோசஷம் உள்ள சாதகம் என்றிருக்கின்ற பெண்களுக்கு மாப்பிள்ளை வருவது கஷ்டமான விடயம் என்று நம்பப்படுவதால் அவர்கள் திருமணம் ஒரு இழுபறி நிலையிலேயே இருக்கும். வெளிநாட்டுத் திருமணத்தை எமது சமூகம் ஒரு உயர் அங்கீகாரமாகப் பார்க்கிறது.

வாழ்க்கையை அழகாக வாழ்வதற்காக இந்த மண்ணில் பிறந் நாம் மற்றவர்க-ளின் செயற் பாடுகளையும் வாழ்க் கையையும் பார்த்து எமக்கான சுயமான அறிவை இழந்து வெளிநாட்டு மோகத்திலும் பணத்தின் மேல் கொண்ட ஈர்ப்பி னாலும் எதையும் பெற்றுவிடலாம் என்ற எண்ணத் தில் எல்லாவற்றை யும் இழந்துவிடுவ துடன் எமக்கான வாழ்க்கையை முற்றுமுழுதாகவே தொலைத்துவிட்டு கண்ணீர் விடு வதில் எந்தவிதமான பயனும் இல்லை. திருமண வாழ்க்கை என்பது ஒருவர் மற்றவர் மேல் கொண்ட உண்மையான அன்பையே குறிக்கின்றது.

தனது வாழ்க்கைத்துணை இல்லாநேரத்திலும் கூட அவரின் அன்பும் ஆறுதலான வார்த்தைகளுமே அவர்களின் மற்றும் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கைக்கும் முன்னேற்றத் துக்கும் வழியாகச் செல்லுமே தவிர வெளிநாடோ அல்லது வெளிநாட்டவர்களின் பணமோ எந்தவகையிலும் யாரையும் வழிநடத்தப்போவதில்லை என்பதை பெண்களாகிய நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி எமது செயற்பாடும், அன்பும், நம்பிக்கையுமே எமது வாழ்க்கைத் துணையை அவர் எந்த நாட்டிலிருந்தாலும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்லும். உண்மையான அன்பே திருமணத்தின் அடையாளம் என்பதை முதலில் நாம் புரிந்துகொள்வதுடன் எமக்கு வரனைத்தேடும்போது தமது லாபத்துக்காக வெளிநாட்டு வரனைத்தி னித்து வியாபாரம் செய்யும் பொருத்துனர்களும் விளங் கிக் கொள்ள வைக்கவேண்டும். துணையின் அன்பும் அரவணைப்பும் இருந்தால் எமது நாட்டில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் எந்தத் துறையாக இருந் தாலும் கால்பதித்து சாதிக்க முடியும். அப்போது தான் வெளிநாட்டவர்களுக்கும் வெளிநாட்டுப்பணத்திற்குமான உண்மையான மதிப்பிடம் என்ன என்பதை எம்மால் உணர்த்தமுடியும். ■



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

இன்று நாட்டில் அசம்பாவிதம் பல நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எம்மால் என்ன செய்ய முடியும்? எட்ட நின்று பார்க்கத்தான் முடியும். போருக்குப் பின்னால் எங்கள் கைகளும் கட்டப்பட்டுவிட்டன. அநியாயத்தைக் கண்டாலும் வாய்களை மூடி பேசாமடைந்தைகளாகத்தான் இருக்க முடிகிறது. ஐயகோ..! நான் என்ன செய்வேன், இறைவா! என்னை ஏன் இப்படிப் படைத்துவிட்டாய்?

எனக்குக் கல்வி புகட்டிய ஆசான் நல்லதம்பி அடிக்கடி சொல்லும் ஒரு வாக்கியம். "வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்". நான் பிழை விட்ட சமயங்களில் எல்லாம் இதையே சொல்லிச் சொல்லி என்னை அவர் அடித்திருக்கிறார். அவரின் ஒவ்வொரு அடியையும் நான் என்னைச் செதுக்கிய உளிக்கு விழுந்த அடியாகத்தான் பார்க்கிறேன். அவரின் அடிகள் என்னை உயர்த்தி இருக்கிறது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் முப்பது வருடங்களாக எமக்கு அடி விழுந்திருக்கிறது. நியாயமற்ற, நீதி அற்ற பல கொடும் சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது. அப்போது தமிழரைக் கொல்லாதே. தமிழ் மீது கை வைக்காதே. தமிழருக்க நீதி வேண்டும் என்று எந்த இஸ்லாமிய அரசியல் கட்சிகளும், மத நிறுவனங்களும் அந்தச் சம்பவங்களுக்குஎதிராகத் தெருவில் இறங்கியதாகச் சரித்திரம் இல்லை. போரின் போது, விடுதலைப் புலிகளோடு இணைந்து பல இஸ்லாமிய இளைஞர்கள் தமிழர் விடுதலைக்காகப் போராடியதாக வரலாறு உண்டு.அங்கு அவர்கள் கௌரவமானபதவிகளைவகித்ததோடு மட்டுமல்லாது வீரமரணத்தையும் தழுவியவர்கள்.

ஆனால் மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய அரசியல் கட்சிகளும், மத நிறுவனங்களும் ஒன்றில் அரச சார்பாக இருந்திருக்கின்றனர். இல்லாவிடில் நடு நிலைமையாளராக இருப்பதாகத் தம்மைக் காட்டிக் கொண்டனரே ஒழிய தமிழர் பக்கத்திலான நியாயத்தை எடுத்து இயம்பினர் அல்ல. இஸ்லாமியர்களும் தமிழைப் பேசுகிறார்கள். ஆரம்பத்திலே இந்த நாட்டில், தமிழ் நாட்டில் இஸ்லாமியர்கள் தமிழர்கள் என்று இருப்பதைப்போல இங்கும் இஸ்லாமியர்கள் தமிழர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். சிங்களப் பகுதிகளிலே வாழ்ந்த அவர்கள்'உறவுகள் சிங்களத்தைக் கற்கத் தொடங்கி சிங்கள மொழி மூலம் வேலைவாய்ப்புப் பெறுவதனாலும், தமிழ், சிங்களம் என இருமொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பதனாலும் அவர்களில் பலர் சிங்கள மொழியில் கற்கத் தொடங்கினர். இதுதான் உண்மையான நடைமுறை யாகக் காணப்பட்டது"

அது மட்டு மல்லாது தமிழ் மக்கள் சிங்களத்தை கற்கக் கூடாது என்று தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட சிங்கள விரோதக் கொள்கைகளால் தமிழர்கள் சிங்கள மொழியைக் கற்காமல் விட்ட சந்தர்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டனர் இஸ்லாமியர்கள். போராட்டத்தின்போது தாம் தமிழர்கள் இல்லை எனவும் தாம் முஸ்லிம்கள் எனவும் சொல்லத் தொடங்கினர். முஸ்லிம் இனம் என்றதொன்றைத் தமக்குரிய கவசமாக்கிக் கொண்டு தமிழர்களிலிருந்து அந்நியப்படத் தொடங்கினர். ஆரம்பத்தில் தமிழ் அரசுக் கட்சியில் அங்கம் வகித்த அஷ்ரப் பிரிந்து தனக்கென ஒரு கட்சியாக முஸ்லிம் காங்கிரசை அமைத்து அரசாங்கத்தோடு செயற்படத் தொடங்கினார்.

என்ன கொடுமை மக்காள்? அவர் பிரிந்ததன் விளைவை இன்று முஸ்லிம் சமூகம் அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறது. கூட்டாக இருப்பதுதானே சிறுபான்மை இனத்தவருக்குப் பலம். பிரிந்திருப்பது மேலாதிக்க வெறியர்களுக்கு நன்மையானது. அஷ்ரப் அரசாங்கத்தோடு இணைந்திருந்து தன்னையும், தம்மைச் சார்ந்தவர்களையும் வளர்த்துவிட்டார். தனது இனத்தை பலமுள்ளதாக வளர்க்க அவர் தவறிவிட்டதை பாவம் அந்த இனம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இல்லாதவன் இல்லாதவனோடு தான் சேர்ந்திருப்பதுதான் அவர்களுக்குப் பலம். இல்லாதவன் இருப்பவனோடு சேர்ந்தால் இருப்பவன் இல்லாதவன் முதுகின் மீது ஏறி அமர்ந்திருந்து சவாரிவிட்டுவிடுவான். நலிந்தவன் நலிந்தே போய்விடுவான்.

வாத்தியாராகிய எனக்குத் தெரிந்த ஒரு சிறிய அரசியல் ஞானத்தோடு இதைச் சொல்கிறேன். காலம் போய் விடவில்லை. இன்னும் ஒன்றும் கெட்டு விடவுமில்லை. முஸ்லிம்கள் தமிழைப் பேசி தமிழர்களாக வாழ்ந்து தமிழர்களுடன் கைகோர்த்து நிற்பதுதான் பலமே ஒழிய, சர்வதேசத்தோடு இணைந்து ஒற்றை விரலை உயர்த்திக் காட்டி "உலகம் ஒன்று. கடவுள் ஒன்று" சொல்வது யதார்த்தமாகாது. அப்படியான நடவடிக்கை கடந்த மாதத்தில் நடைபெற்றதைப்போல குண்டுகளை வைத்து நாட்டைக் குழப்ப உதவுமே ஒழிய காரியமாகாது. தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் தனித்து நிற்பார்கள். அவர்களுக்குத் துணை தேவை இல்லை. அவர்களால் தனித்து நின்று வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுடையவர்கள் கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் இலங்கை இராணுவத்தினர் தமக்குத் துணையாகஎல்லைப் பாதுகாப்புப்படையை உருவாக்கினர். அதில் உங்கள் உறவுகள் பலரை இணைத்து அவர்களைப் பகடைக் காய்களாக்கித் தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களைப் பாவித்தனர். அதேபோல தற்போது நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பின்னர் இராணுவத் தரப்பினர் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளை அழைத்து முஸ்லிம் தரப்புத் தீவிரவாதிகளைக் கண்காணிக்க உதவும்படி கேட்டிருந்தனர். ஆனால் அவர்கள் தாம் எப்பொழுதும் மக்கள் காவலர்கள் எனவும் மக்களைப் பாதுகாக்கின்றபணி தம்முடையதெனவும் விளக்கமளித்திருந்தனர்.

இதில்நெஞ்சை நெருடும் விடயம் என்ன வென்றால்? யுத்தத்தின் கடைசி நாளன்று தலைவர் யுத்தத்தில்கொல்லப்பட்டுவிட்டார். என்ற செய்தி ஊடகங்களில் ஒலித்தபோது யாழ்ப்பாணத்து இஸ்லாமிய உறவுகள் என்ன செய்தார்கள்? வெடி கொளுத்தித்தம் சந்தோஷத்தைக்கொண்டாடினார்கள். பால்சோறுஉண்டு மகிழ்ந்தனர். ஆனால் தற்போது இஸ்லாமியர்களை அவர்கள் அடித்துத்துவம்சம்செய்கிறபோது நாம் வெடி கொளுத்தவுமில்லை. பால்சோறு காய்ச்சிப் பகிரவும்இல்லை.

வாணிபர்களாக வந்தவர்கள் நீங்கள் இலங்கைக் கரையோரத்திலேயே காணப்பட்ட தமிழ் கிராமங்களிலிருந்துதானே உங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள். கடந்தகாலத்தில் நீங்கள் உங்களைத் தமிழ் முஸ்லிம்களாகத்தான் அடையாளப்படுத்திக் கொண்டு தமிழர் பகுதிகளிலேயே வாழத் தொடங்கியிருந்தீர்கள். அப்படீயே இருந்திருக்கலாம். ஏனெனில் உங்களுக்கான உறவுகள் தமிழ் நாட்டிலும் இருந்ததனால் உங்களுக்கு ஒரு பாதுகாப்புத் தமிழர்கள் மத்தியில் இருந்திருக்கும், ஏன் உங்கள் மொழியையும், அடையாளத்தையம் மாற்றப் புறப்பட்டீர்கள்? எவ்வளவு அபத்தமான காரியத்தைச் செய்துவிட்டீர்கள் தெரியுமா? தற்போது முழிக்க வேண்டி இருக்கிறதே!

குண்டு வெடிப்புக்குப் பின்னர் பொலிஸாருக்குத் தகவல்களைக் கொடுக்கின்ற நீங்கள் முன்னரே விழித்துக் கொண்டு செயற்பட்டிருப்பீர்களானால் எவ்வளவு மேன்மையான காரியத்தைச் செய்திருப்பீர்கள்? ஏனெனில் குண்டுதாரிகள் உங்களுக்கு நடுவிலேதான் இருந்திருக்கிறார்கள். உங்களுக்கு நடுவே இருந்துதான் வளர்ந்துர்மிருக்கிறார்கள். அவர்கள் வேறுயாருமல்ல. உங்கள் வீட்டுப் பிள்ளைகள்.எனவே நடந்து முடிந்த பயங்கரவாதத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை என்று தயவு செய்து ஊடகச் செய்திகளில் சொல்லாதீர்கள். அது பொறுப்பான விடயமுமல்ல. மக்கள் துணை இல்லாமல் இவர்கள் இவ்வளவு காரியத்தையும் அவர்களால் செய்ய முடியாது. முப்பது வருடங்களாகச் சிங்கள ஏகாதிபத்திய அரசுக்குத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்த உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் தடம் மாறிப்போனது தெரியவில்லையா?

எவ்வளவு பாவமான காரியத்தைச் செய்து விட்டீர்கள்? உங்கள் இனத்துக்கு ஏற்பட்ட இந்த ரணம் ஆற என்ன செய்யப் போகிறீர்களோ தெரியாது! வழியை மாற்றிக் கொள்வதை விட வேறு வழி இருப்பதாக எனக்குப் படவில்லை. ஐயகோ...!

# அந்தப் பேச்சே எடுக்காதவர்கள்

நாம் ஒரு விபரம் கேட்டிருப்போம்: அல்லது ஓர் உதவி கேட்டிருப்போம்.

'அப்புறமா சொல்றேன்;' அடுத்த வாரம் சொல்றேன்:' 'நான் விசாரிச்சுப் பார்க்கிறேன்,; என்கிற பாணியில் இதற்குப் பதில் கிடைக்கிறது' என்று வைத்துக் கொள்வோம்.

சரி என நாமும் எழுந்து வந்து விடுவோம். மறுபடி பார்க்கும் போதும், அடுத்த வாரம் பார்க்கும் போது அல்லது பிறகு எப்போது பார்த்தாலும் அதைப்பற்றி இந்த ஆசாமிகள் பேச்சே எடுப்பதில்லை. இவர்களைத் தாம் நாம் போய்ப் பார்த்தோமோ? இவர்களிடம்தாம் நாம் பேசினோமா? இவர்களிடம்தான் நாம் கேட்டோமா? என்றெல்லாம் சந்தேகம் நமக்கே ஏற்படுகிற அளவுக்கு எதுவுமே நடக்காதது போலவும் கனவில் வந்த சம்பவம் போலவும் இவர்கள் நடந்து கொள்வார்கள்.

அப்புறமாக என்று சொல்லுவதும், அமைதியாக இருப்பதும் நாகரிகமான மறுப்பின் அடையாளங்களே தவிர, வேறல்ல, இதை உணர்ந்துகொள்ளாமல், 'அப்புறமா என்கிறீர்களே?; ஒருவாரம் கழித்து என்கிறீர்களே?;' என்று இவர்களைக் கஸ்ரப்படுத்துவார்கள். கடைசியில் வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். மற்றவர்களை இம்சித்து உதவி பெறுவது என்பது மட்டமான பழக்கம் கேவலமும் கூட,

சொல்லுகிறேன் என்றவர்கள், அமைதியாக இருந்தால் அதற்காக நாம் விட்டுவிடுவதா? அவர்கள் தங்களது பல வேலைகளின் நடுவே நம் விஷயத்தை மறந்திருக்கலாம் அல்லவா? அதற்காக நாமே ஞபகப்படுத்தாமலிருந்து, நமக்குக் கிடைக்கவேண்டிய உதவிகளை இழப்பதா? என்று உங்களில் பலர் கேட்கலாம்.

இது ஒரு நியாயமான கேள்வி, வேலை மிகுதியான உயர்ந்த மனிதர்களையும், ஞாபக மறதிக்காரர்களையும் நாம் மறுபடி அணுகலாம்தான். தவறில்லை. ஆனால் இந்த உரிமையை நாம் எடுத்துக் கொள்ளுமுன் நாம் சில விஷயங்களைப் பின்நோக்கிச் சிந்திக்கவேண்டும். நம்மை அவர்கள் வரவேற்றவிதம், நாம் உதவி கேட்டதும் அவர்கள் முகம்போன போக்கு: அதற்குப் பிறகு அவர்களின் சொற்களில் காணப்பட்ட மாற்றம்: பேச்சில் இருந்ததொனி ஆகிய அனைத்தும் நுணுக்கமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இவையெல்லாம் உண்மையிலேயே நமக்குத் திருப்தியாகப்பட்டால் இரண்டாவது முறையென்ன, நான்கு ஐந்து முறைகூட அணுகலாம்.

முடியாது: நடக்காது என்றெல்லாம் சொல்லி, நம் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்று எண்ணுபவர்களின் பாணிதான் அப்புறம் என்பதும், அந்தப் பேச்சையே மறுபடி எடுக்காத தும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் அவர்களுக்கு நாம் தர்ம சங்கடத்தை உருவாக்கக்கூடாது. பூவை அப்படியே முகர்ந்து பார்த்தால் தான் வாசம். கசக்கி முகர நினைத்தால் எப்பேர்ப்பட்ட பூவும் நாறத்தான் செய்யும்!.

– லேனா தமிழ்வாணன்



# அந்த ஒரு நிமிடம்...

எஸ்.கணபதி

ஜோனுக்கு இது நீண்ட நாள் கனவு. பல தடவைகள் இலங்கைக்கு வந்திருந்தாலும் குடும்பத்துடன் வரவேண்டும் என்பது அவரது ஆசை. நண்பர்களும் அதையே அவரிடம் கேட்பது வழக்கம். இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் அதற்குள் விதம் விதமான வேறுபட்ட காலநிலையையுள்ள இடங்களைச் சில மணித்தியாலங்கில் சென்று அடைந்துவிடலாம். அவர்மனதைக் கவர்ந்த இலங்கை பற்றிய விடயங்களில் அதுவும் ஒன்று. அடுத்ததாக இலங்கைத் தேநீர். மனைவி கதரீனும் பல நாட் கள் கேட்டபடியே இருந்தாள். அவளும் இலங்கைத் தேயிலைக்கு அடிமையானவள். யாராவது விருந்தினர் இலங்கையிலிருந்து வருவதாக அறி வித் தவுடன் கதரீன் அவர்களுக்கு நகைச் சுவையாக "நல்ல தேயிலையுடன் வாருங்கள்" என்று சொல்லுவாள். வியாபார ரீதியில் அவர்களுக்கு இலங்கையில் பல நண்பர்கள் இருந்தார்கள்.

ஜோன் ஒரு செல்வந்தர் மாத்திரமல்ல நல்ல ஒரு இலக்கியவாதியும் நகைச்சவையாளரும் கூட. அவர் இரசனை வேறுபட்டது. இலங்கைக்கு வந்தால் குறைந்தது ஒரு வாரத்திற்குரிய நிகழ்ச்சி அட்டவணையோடு வந்திறங்கிவிடுவார். நண்பர்களை அழைத்துக் கொண்டு தம்புள்ளப் பக்கமிருக்கின்ற நட்சத்திர விடுதிகளை நோக்கிச் சென்று அமைதியாக இருந்து பேசுவது. இசையை இரசிப்பது. இலக்கியம் பேசுவது. அவை பற்றி விவாதிப்பது என்று நாட்கள் கழிந்து விடும். இலங்கை ஒரு அமைதியான நாடு. ஆடம்பரமற்ற மக்கள். கலா இரசனையும் நிறைய உண்டு. என ஜோன் இலங்கைபற்றிய விமர்சனங்களை முன்வைத்து "ஒரு நாள் நிரந்தரமாக இலங்கைக்கு வந்துவிட வேண்டும்" என்று அவர் குறிப்பிடுவது வழக்கம்.

இந்தத் தடவை அவர் தனது வழமையான நிகழ்சி நிரலுக்குட்பட்டதாக இல்லை. மனைவிக்கெனச் சில நாட்கள். மக்களுக்கெனச் சில நாட்கள் எனத் தனது நாட்களை அவர்களுக்காக ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தோடு அவர் காணப்பட்டார். "இந்தப் பயணம் எங்களுக்கானது. எனவே வழமையான உங்கள் விருப்பங்களையும், இரசனைகளையும் எங்களுக்காக மாற்றிக் கொள்ளுங்கள். அப்போதுதான் இந்தப் பணயம் எங்களுக்கானதாக இருக்கும்" என்ற கதரீனின் வேண்டு கோளோடேயே ஜோன் இம்முறை வந்திருக்கிறார்.

அவர்கள் திட்மிட்டபடி ஈஸ்ரர் தினத்துக் காலை உணவோடு அவர்கள் நாடு திரும்ப வேண்டும்.ஏனெனில் லண்டனில் அவர்கள் நண்பர்கள் ஈஸ்ரர் பண்டிகையை ஒட்டி ஒரு இராப்போசன விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஜோன் குடும்பத்தினரோடு அவர்கள் விருந்திலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தோடுதான் ஜோனின் நண்பர்கள் அவரை வழியனுப்பி வைத்தனர்.

ஏப்பிரல் 21 அதி காலை 5 மணிக்கு கைத்தொலை பேசியில் வைத்த எலார்ம் அடித்தது. கதரீன் விழித்துக் கொண்டாள்.



பெட்டி படுக்கைகளை எல்லாம் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டாள். இறுதி நாள் உபயோகித்த அனைவரினதும் உடுப்புகளை எல்லாம் சூட்கேஸ் ஒன்றில் தனியாக அடுக்கி வைத்தாள். தாம் சென்ற பயண வழிகளில் இலங்கைப் பயணத்தை ஞாபகப்படுத்துவதற்காக வாங்கிய சிறிய சிறிய கைவினைப் பொருட்களை எல்லாம் அந்த அழுக்கத் துணிகளுக்கிடையே சொருகிக் கொண்டாள்.

நீண்டதொரு கொட்டாவியுடன் கண்களைக் கசக்கிக் கொண்டு ஜோன் மெல்ல எழுந்து கட்டிலிலே உட்கார்ந்து கொண்டு கதரீனைச் செல்லமாக அழைத்தார். அவள் தோள்களில் தனது கைகளைப் படரவிட்டபடி கண்வெட்டாது பார்த்து அவளை ஒரு முறை இரசித்துக் கொண்டார். அவர்கள் உதடுகள் ஒன்றில் மற்றொன்று புதைந்து கொள்ள....

வாயிற் கதவு தட்டும் ஒலி கேட்டது. கதரீன் ஓடர் செய்தபடி காலை தேநீரோடு ரூம் சேவிஸ் காத்திருந்தான்.

அடுத்த அறையில் தனியாக உறங்கிக் கொண்டிருந்த பிள்ளைகள் மூவரையும் எழுப்பிப் பயணத்துக்குத் தயாராக்க வேண்டும். பணயக் களைப்பு வேறு. தூக்கத்திலிருந்து எழும்ப மறுத்து அடம்பிடிப்பார்கள் என்று எண்ணியபடி அவர்கள் இருந்த அறைக்கதவை தட்டினாள் கதரீன். அறை பூட்டப்பட்டிருக்கவில்லை. மெல்லத் தள்ள அதுவாகத் திறந்து கொண்டது. அனைவரும் படுத்திருந்தபடி "கேம்ஸ்" விளையாடிக் கொண்டிருந்தர்கள். காலை ஒன்பது மணிக்கு முன்னராக விமான நிலையத்துக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் எனச் சொல்லி அவர்களை அறிவுறுத்தினாள் கதரீன். "எங்களுக்கு மிகவும் பசியாக இருக்கிறது. நல்ல உணவு வேண்டும்" என்று அவர்கள் "கோரஸ்" ஆகக் கத்தினர். "இங்கு நல்ல ஈஸ்ரர் பிறேக் பாஸ்ட் கிடைக்கும். காலைக் கடன் களை முடித்துவிட்டுச் சீக்கிரம் வந்துவிடுங்கள். புவே பிறேக். நல்லாகச் சாப்பிடலாம்" என்று சொல்லிவிட்டு கதரீன் தனது அறைக்குத் திரும்பிவிட்டாள்.

காலை 8 மணி. பிள்ளைகள் மூவரும் றெடியாக வந்து பெற்றோர்களுக்காகக் காத்திருந்தனர். ஜோன் இன்னமும் பாத் ரூமில் இருந்தான். "பிள்ளைகள் வந்துவிட்டார்கள்" என கதரீன் சத்தமிட்டாள். "அவர்களை றெஸ்றோறன்லில் கொண்டு போய்விடு . அவர்கள் ஆற அமர இருந்து அனுபவித்துச் சாப்பிடட்டும்" என்று பதில் கொடுத்தான் ஜோன்.

### காலை 8 மணி 0.25 நிமிடங்கள்

பிள்ளைகள் மூவரையும் அழைத்துக் கொண்டு கதரீன் உணவகத்துக்கு வந்துவிட்டாள். காலைச் சாப்பாட்டிற்காகப் பலர் காத்திருந்தனர். அவர்கள் அனைவரும் வெளிநாட்டவர்கள். அன்று ஈஸ்ரர் தினம் வேறு. விசேட தினமென்றபடியால் அந்த நட்சத்திர விடுதியில் இருந்தவர்களோடு பல பேர் வெளியிலிருந்தும் ஈஸ்ரர் காலை உணவை ருசிக்கவென வந்திருந்தனர். அனைவரும் உணவுக்காகக் வரிசையில் காத்திருந்தனர்.

### காலை 8 மணி 0.27 நிமிடங்கள்

மூத்தவன் பசிக்குதென வாய்விட்டுச் சொல்லிவிட்டான். சில நிமிடங்கள் பொறுத்துப்பார்தாள் கதரீன். உணவுக்காக நின்ற விரிசை மிகவும் மெதுவாக நகர்வதாக அவளுக்குப்பட்டது. இந்த உணவு விடுதியின் முகாமையாளரை அழைத்துத் தமது அவசரத்தை அவளுக்கு எடுத்துச் சொன்னாள் கதரீன். அவன் வரிசையில் நின்றவர்களிடம் அனுமதி பெற்று கதரீனுக்கு முன்னுரிமை வாங்கிக் கொடுத்ததும் பிள்ளைகள் மூவருக்கும் விருப்பமானது எது எனக்கேட்டு அதனைப் பரிமாறினாள். அவர்களை ஒரு புறமாகக உட்காரவைத்துவிட்டு ஜோனை அழைத்துவருவதாகச் சொல்லிவிட்டு ஜோனின் அறையை நோக்கிச் செல்லப் புறப்பட்டதும் கடைசிப் பையன் தனக்குரிய சாண்ட் விஜ்ஜை கையில் எடுத்தபடி "நானும் வருகிறேன்" என்று கதரீனின் கையைப் பற்றிக் கொண்டான்.

### காலை 8 மணி 0.29 நிமிடங்கள்

கதரீன் விடுதியின் ஒடுங்குபாதை வழியாக அறையை நோக்கிச் சென்றாள். அவளது கடைசிப் பையனும் அவள் கூடவே இருந்தான். தோளில் பைகளைத் தூக்கியபடி இரு இளைஞர்கள் அவர்களைத் தாண்டிச் சென்றனர்.அவர்கள் உள்ளூர் வாசிகளைப் போலத் தோற்றமளித்ததை கதரீன் அவர்கள் அங்க அடையாளங்களிலிருந்து கண்டு கொண்டாள். அவர்கள் கதரீனைப் பார்த்துச் சிரித்தபடி காதரீனின் கடைசிப் பையனின் முகத்தைத் தட்டியபடி கடந்து சென்றனர். அவர்கள் இயல்பாக இல்லை என்று மட்டும் கதரீனுக்குப் புரிந்தது.

### காலை 8 மணி 0.30 நிமிடங்கள்

காதரீன் ஜோனிருந்த அறைவாசலை நெருங்கி இருக்க மாட்டாள் பலத்த இடியோசை போல கேட்ட சத்தத்தைத் தொடர்ந்து அவளும் அவளது கடைசிப் பையனும் தூக்கி எறியப்பட்டதாக அவள் உணர்ந்து கொண்டபோது அவள் நினைவிழந்து போய்விட்டாள்.

- - - -

மூன்று தினங்களுக்குப் பின் கதரீன் கண் விழித்துக் கொண்டபோது கைகால்களில் போடப்பட்டிருந்த கட்டுகளைத் தொட்டுப் பார்த்தாள். அந்த இடங்களெல்லாம் ரணமாக வலித்துக் கொண்டது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. கணவன் ஜோன் மட்டும் அவளுக்கு முன்பாக நின்று அழுது கொண்டிருந்தான். அவள் படுத்திருந்த வைத்திய சாலை அறைச்சுவரில் மாட்டியிருந்த ரீவி திரையில் குண்டு வெடிப்புச் சம்பந்தமான ஒளிப்படங்கள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. அதில் அவளது மக்கள் இருந்து உணவருந்திய விடுதியில் குண்டு வெடிக்கும் காட்சிகளைத் தொடர்ந்து அந்தக் குண்டு வெடிப்பில் அங்கிருந்த எவரும் தப்பியிருக்கவில்லை என்ற அடிக்குறிப்பும் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

## ஜெருசலேம் யாத்திரை–12
## பயண அனுபவங்கள்



# நாட்டின் பெயர் சொல்லும் ஜாஃபா தோடம்பழம்

மத்திய கிழக்கில் வளரும் மூன்று முக்கிய வகை தோடம்பழ வகைகளில் ஒன்று ஜாஃபா தோடம்பழம். சைப்ரஸ், ஈராக், லெபனான், சிரியா, ஜோர்டான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலும் பயிரிடப்படுகிறது ஜாஃபா தோடம்பழம், ஒரு பிரபலமான விதைகள் இல்லாத தோடம்பழ வகையாகும். 19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஒட்டோமன் ஆட்சிக் காலத்து பாலஸ்தீனிய விவசாயிகளால் உருவாக்கப்பட்டது இஸ்ரவேலின் ஜாஃபா நகரில் பயிரிடப்பட்டதால் இந்தப் பெயர் உருவாகியது. தினமும் தங்கியிருந்த ஹாட்டலில் நிறையச் சாப்பிட முடிந்தது. அதன் சுவையே. தனி . மிகவும் இனிப்பானது. இது தடித்த தோல் கொண்டதால், ஏற்றுமதிக்கு ஏற்றது. ஒரு காலத்தில் ஓஹோவென்று இருந்த பழ உற்பத்தி இப்பொழுது வீழ்ச்சி கண்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும். இலங்கை என்றால் தேயிலை போல், ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் ஜாஃபா தோடம்பழங்கள் இஸ்ரவேல் நாட்டுக்கு தனித்துவ முத்திரை பதித்திருக்கின்றன. இன்றும் ஏற்றுமதி இருந்தாலும், அவர்களின் ஏனைய ஏற்றுமதிகள் பழங்களை மிஞ்சி விட்டன....

### தொன்மை வாய்ந்த பழம்

யூதர்களின் வேதகாமமான ரோறாவிலுள்ள, **Deuteronomy** என்ற நூலில், இஸ்ரவேல் நாடு, 7 இன உணவுப் பொருட்களின் தேசம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். கோதுமை, பார்லி, திராட்சை, அத்திப் பழம், மாதுளம்பழம், ஒலிவ் எண்ணெய், தேன்(பேரீஞ்சு) -இந்த ஏழுந்தான் அவை. கோவில் ஆராதனைகளில் இந்த ஏழுமே இடம்பெறுவதுண்டு. இவற்றின் முதல் அறுவடை ஜெருசலேமின் புனித தேவாலயக் குருக்களுக்கே கொடுக்கப்படுகின்றன. அன்றும் இன்றும் இஸ்ரவேல் விவசாயத்திலும், யூத கலாசாரத்திலும் இவை தொடர்கின்றன. இதில் பேரீஞ்சை தேன் என்றே குறிப்பிடுகிறார்கள். காரணம் மிகவும் இனிப்பான இவற்றிலிருந்து பாகு செய்கிறார்கள். அது தேன் போல இனிக்கின்றது. மாதுளம்பழத்தை போல் பேரீஞ்சையும் பழைய நாணயங்களில் பொறித்திருந்தார்கள். பழைய ஓவியங்களில் இந்தப் பழங்கள் வரையப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். இந்த மரமும், ஈச்சமோலையும் கட்டடப் பணிகளுக்கும், துணி உற்பத்தி மூலப் பொருட்களுக்கும் பயன்பட்டுள்ளன.

பாலஸ்தீனியர்களின் நிலங்களில் இஸ்ரவேல் விவசாயிகள் சட்டத்திற்கு விரோதமாக காணிகளைப் பிடித்து, பேரீஞ்சுப் பண்ணைகளை வைத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பேரீஞ்சில் அதி சிறந்த இனமாகக் கருதப்படும் மெஜூல் இனம் மொரோக்கோவிலிருந்து இந்த மண்ணிற்கு கொண்டுவரப்பட்டு, ஜோர்டான் பள்ளத்தாக்கிலும், இஸ்ரவேலின் தெற்கத்தையப் பிராந்தியங்கள் சிலவற்றிலும் பயிரிடப்படுகின்றது. நாம் பேருந்தில் பயணித்தபோது சாக்கடலுக்கு செல்லும் வழியில்,இருமருங்கிலும் பேரீஞ்சுச் பண்ணைகளைக் காணக்கூடியதாக இருந்தது. இனத்திற்கு இனம் சுவையில் வேறுபடுவது போல இங்கு பேரீஞ்சுப் பழங்களும் விலையில் வேறுபடுகின்றன.


ஏ.ஜே.ஞானேந்திரன்

### 3000 வருடப் பழமையான நகரம்..

இன்றைய நவீன ஜெருசலேமைப் பார்த்து வியந்த அதே சமயம், 3000 வருடத் தொன்மை வாய்ந்தது இதன் சரித்திரம் என்ற உண்மையும் மனதுள் உறைத்தது. 1538இல்தான் இந்த நகரம் சுலைமான் என்பவனால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பழைய நகரத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். யூதர்களின் பிராந்தியம், ஆர்மேனியர்களின் பிராந்தியம், கிறிஸ்தவர்கள் பிராந்தியம், இஸ்லாமியர்கள் பிராந்தியம்–இவைதாம் அந்த நான்கு பிராந்தியங்கள். நீங்கள் ஒவ்வொரு பிராந்தியத்திற்குள்ளும் நுழையும்போது, ஒவ்வொரு வித்தியாசமான சூழலில் இருப்பதை உணர்வீர்கள். நான்கு பிரிவுகளாக இருப்பினும், ஒன்றில் வேறு மதத்தவர்களும் இருக்க வாய்ப்பு இருப்பதை நம்மால் அவதானிக்க முடியும். பைபிளின்படி யேசுக் கிறீஸ்துவை குற்றவாளியாக்கி அப்போதைய மன்னன் பிலாத்து மரண தண்டனை வழங்கினான் அல்லவா? இந்த இடம் இஸ்லாமியர்கள் பிராந்தியத்தில் உள்ளது. இந்தப் பழைய ஜெருசலேமின் தெருக்கள் ஒருவகையான கற்களால்தான் அமைக்கப்பட்டுள்ளன.

ஒருவர் இதை ஒருவகைக் கூழாங் கற்கள் என்று குறிப்பிட்டார். பாதைகள் ஒடுக்கமாகவும், சந்து பொந்துகளில் வளைந்து நெடுத்துச் செல்வதுமாக இருக்கின்றன. இத் தெருக்களில் ஒருவர் இலகுவில் காணாமல் போய்விடலாம். அதிலும் நாம் சென்ற நத்தார் பெருநாள் சமயம் யாத்திரீகர்கள் தொகை அதிகமாக இருந்தமையால் தொலைந்துபோகும் வாய்ப்புகள் அதிகம். எப்பொழுதும் உங்கள் நண்பர்களோடு இணைந்தே நடந்து வாருங்கள் என்று வழிகாட்டி அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருந்தார். பாதைகள் ஏற்ற இறக்கமாக இருக்கின்றன. புராதன ஜெருசலேம் நகரம் ஒரு மலையின் மேல் அமைக்கப்பட்டிருப்பதால், அதற்குள் உள்ள சாலைகள், கடைகள், கட்டடங்கள் பல மட்டங்களில் இருக்கின்றன. சாலைகளின் நடுவில் படிகள் இருக்கின்றன. அவற்றின் இரு பக்கமும் சரிவுப் பாதைகள் இருக்கின்றன. அவற்றில்தான் கடைகளுக்குச் சரக்குக் கொண்டு செல்பவர்கள் கைவண்டிகளில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு அப்படியே சறுக்கிக்கொண்டு போவதையும் நாம் அதிசயத்தோடு பார்த்தபடி நடந்தோம். கீழே விழுந்தால் இந்தக் கற்கள் முழந்தாளை சிராய்த்துவிடும். எனவே நடையில் மிக அவதானம் தேவைப்பட்டது. இந்தக் குறுகலான பாதையில் ஆங்காங்கே கடைகள் பல இருக்கின்றன. ஞாபகச்சின்னங்கள், பழங்கள் போன்றவற்றை இவர்கள் விற்கிறார்கள். உடனே பழத்தைப் பிழிந்து மாதுளம்பழச் சாறோ அல்லது தோடம்பழச் சாறோ விலைக்குத் தரும் கடைகளுக்கும் குறைவில்லை. ஆனால் நமது இஸ்டத்திற்கு நினைத்த இடத்தில் நின்று






நினைத்ததை வாங்கவோ குடிக்கவோ முடியாது. பின்தங்காமல் நண்பர்களோடு நண்பர்களாக மேலே நடவுங்கள் என்பது வழிகாட்டியின் கண்டிப்பான உத்தரவு. மீறினால் நாம் இலங்கையில் உள்ளது போல "காணாமல் போனவர்கள்தான்". . தொலைந்தவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது? புது நாடு, புது மனிதர்கள் , புதிய சூழல், புதிய மொழி வேறு வழியில்லாமல், மேய்ப்பனைப் பின்தொடரும் மந்தைகளின் நிலையில்தான் நாம் இருந்தோம்.

*பயணிப்போம்...*



எஸ்.தர்மதாஸ்
(விரிவுரையாளர்)

# "இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்"



01

எஸ்.தர்மதாஸ்

மனித வாழ்க்கை அழகும் அர்த்தமுடையதுமாக இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். வாழ்க்கையில் அன்பு தழைக்க வேண்டும். அறம் செழிக்க வேண்டும். இயன்றவரை நம்மைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். நம்மீதும் யாரும் ஆதிக்கம் செலுத்த வேண்டாம். நாமும் பிறர்மீது நம்மைத் திணிக்க வேண்டாம். இயற்கையோடும், உயிர்களோடும் நாம் நேசத்தோடு வாழ வேண்டும். நம்மீது செலுத்தப்படும் ஆதிக்கம் நம்மைச் சுருக்குகின்றது, பிளவுபடுத்துகின்றது, நம் இயக்கத்தை அழிக்கின்றது. இப்படி இருப்பது தான், இயங்குவது தான் மனித வாழ்க்கை, மனிதனுக்கான வாழ்க்கை. நெடுங்கால வரலாறு நமக்குள் இவ்வாறான ஒரு உயர்வான மனித வாழ்க்கையைப் பதிவு செய்திருக்கிறது. வாழ்க்கை இப்படி எல்லாக் காலத்திலும் அசைவியக்கமற்று இருப்பதில்லை. நெருக்கடிகள், சிக்கல்கள், ஆதிக்கங்கள், முதலியன வாழ்வின் எல்லைகளையும் சுருக்குகின்றன. உடைமையும், அதிகாரங்களும் வாழ்வுக்கு எல்லை வகுக்கின்றன.

சுயலாப அரசியல் போரானது கோடிக்கணக்கான மக்களின் வாழ்வையும், கனவையும் சூறையாடியிருக்கிறது. தேசங்களின் சுதந்திரத்தையும், தன்னாட்சி உரிமைகளையும் கிழித்து எறிந்திருக்கிறது. வியர்வையையும், குருதியையும் உறிஞ்சும் மிருக வன்முறையை நிலைநாட்டியிருக்கிறது. உலக மையத்தின் பலிபீடங்களாக ஏழை நாடுகளும் உலக நாடுகளும் வெறிச்சிட்டுக் காட்சியளிக்கின்றன. ஏகாதிபத்தியங்களின் இத்தகைய அராஜகச் செயல்களால் பாதிப்புக்குள்ளாகிச் சீர்குலைக்கப்பட்டுச் சீரழிந்து சின்னாபின்னமாகக் காட்சி தருகிறது உலகம். இப் போர் அழித்த அடையாளங்கள், பண்பாடுகள், வாழ்கை முறைகள், கலாசாரங்கள் கொஞ்ச நஞ்சமில்லை.

உலகில் ஏராளமான தனித்தன்மை வாய்ந்த இனங்களும், இனக்குழுக்களும், தேசிய இனங்களும் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை சிற்றரசாகவோ, பேரரசாகவோ தமக்கெனத் தனியான இராச்சியங்களையும், ஆட்சி முறைகளையும் வகுத்து வந்துள்ளன. பெரும்பாலான பேரரசர்கள் தமது அதிகார எல்லைகளை விஸ்தரிப்பதற்காக வெவ்வேறு இன ஆட்சிகளின் மீது அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். ஆட்சி அதிகார விரிவாக்கத்தின் உச்சமே ஒரு கட்டத்தில் மேலைத்தேய காலனி ஆதிக்கம் உலகெங்கும் பரவியது. தமது சுரண்டல்களுக்காகவும், நிர்வாக வசதிக்காகவும், காலனி நாடுகளின் மக்கள் தமக்கெதிராக மேற்கிளம்பாமல் இருக்கும் வகையிலும், தமது கட்டுப்பாடுகளை அவர்கள் மீது காத்திரமாக வைத்திருப்பதற்காகவும், தனி இராச்சியங்கள் பலவற்றை ஒன்றாக்கியும், பறிக்கும் கைக்கொண்டனர். இதன் விளைவுகள் இன்னும் பல நாடுகளில் வெளிக்கிளம்புகின்றன. ஆபிரிக்காவின் பலநாடுகளில் இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கும் வன்முறை யுத்தங்கள் ஆகட்டும், மத்திய கிழக்கின் பாலஸ்தீனப் போராட்டம் ஆகட்டும், தூர கிழக்கின் கொரிய சிக்கல்கள் ஆகட்டும், இந்திய – பாகிஸ்தான் முரண்பாடாகட்டும், இலங்கையில் தமிழ்த்தேசிய இனப் போராட்டமாகட்டும், அனைத்தும் அந்தந்த நாடுகளில் அல்லது பிராந்தியங்களில் தமது நலன்களைப் பேணும் உள் நோக்குடன் காலனியவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் உருவாக்கி விட்டுச்சென்ற விம்பங்களே.



இலங்கையின் இன முரண்பாட்டின் தொடக்கத்தைப் பொதுவாகக் காலனித்துவ ஆரம்பத்துடனும், குறிப்பாகப் பிரித்தானியா இலங்கையின் மூன்று இராச்சியங்களையும் ஒன்றிணைத்ததுடனான பின்னணியில் இருந்து நோக்கமுடியும். இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டுப் பல நூற்றாண்டுகள் கழித்தே சிங்கள மொழியின் தோற்றம் காணப்படுகின்றது. ஆனால் இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்தப்படும் பொழுது அங்கு சைவத்தமிழ்க் கலாசாரமும், வாழ்கைமுறையுமே காணப்பட்டது. இந்த வகையில் இலங்கையின் ஆதிக்குடிகள் என்ற வகையிலும் இலங்கையின் அனைத்துவிதமான வளர்சியிலும் தமிழ் மக்களின் பங்களிப்பு அளவிடற்கரியது என்ற வகையிலும், இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இலங்கை மீதான ஆதிபத்தியமும், உரிமையும் இயல்பானதே. ஆனால் பிரித்தானிய காலனித்துவம் தமிழ் மக்களின் அனுமதியின்றி இராச்சியங்களை ஒன்றிணைத்ததுடன் வெளியேறும் பெழுது வாக்குரிமை அடிப்படையிலான பிரதிநிதித்துவ ஆட்சி முறையினை அறிமுகம் செய்வதன் மூலம் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ் மக்களை சிங்கள ஆதிக்கத்தின் கீழான குடிமக்களாக்கியுள்ளது. மிக நீண்ட நெடிய மொழி, மதம், பண்பாட்டுக் கலாசாரத் தன்மைகளைக் கொண்ட ஆதிக் குடிகளான தமிழர் வரலாற்றுக் காரணங்களால் புதிய அடையாளங்களைப் பெற்றுப் பெரும்பான்மையாகிவிட்ட இன்னொரு இனத்தின் மேலாண்மையின் கீழ் வாழ்வதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது நியாயமானது. காலனியம் சிங்களப் பெரும்பான்மையை ஆழ்பவர்களாகவும் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தை ஆளப்படுபவர்களாகவும் ஆக்கிவிட்டிருக்கிறது. இதனால் வெள்ளைக்காரர்களிடம் தீர்வு கோரி ஆரம்பித்த இப் போராட்டம் அவர்கள் வெளியேறிய பின் சிங்கள அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக கடந்த அறுபது ஆண்டுகளாகப் பல்வேறு கட்டங்களைத் தாண்டி தொடர்ந்தவண்ணமுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் இலங்கையின் அரசியற் சக்திகள் இன முரண்பாட்டை எவ்வாறு நோக்கின? கடந்த கால் நூற்றாண்டாகச் சர்வதேசச் சமூகம் எவ்வகையில் முரண்பாடுகளை நோக்குகின்றது? இலங்கைத் தமிழ் இன முரண்பாட்டிற்குத் தீர்வென்ன? என்ற எண்ணற்ற கேள்விகள் விடையின்றி இந்நாட்டில் வியாபித்து நிற்கின்றது.

இத்தகைய இனத்துவ முரண்பாட்டை வெளிப்படுத்தி நிற்பதில் கலை வெளிப்பாடுகளிற்கு அதிக பங்குண்டு. கலை மனித வாழ்வின் கனவு, கலாசாரம், அர்த்தங்கள், நுண்மைகள், அறங்கள், மாறுபட்ட சாத்தியங்கள் சார்ந்து இயங்கும் ஒரு தனி உலகம். இதன் அடிப்படைகள் சார்ந்த சில புரிதல்கள் இவ்வுலகிற்குள் பிரவேசிக்க உதவும். இவ் அடிப்படைகளில் இருந்து கலை வெளிப்பாடுகள் விலகும் பட்சத்தில் அது மனித இருப்பின் மையங்களைக் கேள்விக்குள்ளாக்கிவிடும். குறிப்பாக வெளிப்பாட்டுக் கலைகளில் பல்வேறு துறைகளோடு பல பரிமாணங்க ளைத் தன்னகத்தே கொண்டது. இவ்வெளிப்பாட்டுக் கலைகள் மனிதனால் உற்பத்தி செய்யப்பட இப்படைப்புக்கள் பின் சமூகத்தினை மீள ஒழுங்குபடுத்துவதாக அல்லது உற்பத்தி செய்வதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக கி.பி.5ஆம் நூற்றாண்டில் மஹாநாமதேரோவால் தொகுக்கப்பட்ட இலங்கையின் பூர்வ சரித்திரம் எனச் சொல்லப்படும் மஹாவம்சமே இன்றைய இலங்கை யின் இனப்பிரச்சனைகள் அனைத்திற்கு மான மூலவேராக, ஒரு சர்ச்சைக்குரிய நூலாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு இலக்கியப் படைப்புக்களிலும் சரி, சிற்ப, ஓவிய வெளிப்பாடுகளிலும் சரி, நாடக, நடன, இணை வெளிப்பாடுகளிலும் சரி இலங்கையின் இனத்துவ முரண்பாட்டிற்குத் தூபமிடுகின்ற அல்லது முரண்பாட்டின் பிடியிலிருந்து வெளிக் கிளம்புகின்ற கலை வெளிப்பாடுகளை அதிலும் குறிப்பாக இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரான காலப்பகுதியில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட இன முரண்பாடு சம்பந்தமாக வெளிப்படுகின்ற அரசியல் கேலிச் சித்திரங்கள் அடியாக "இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்" எனும் தலைப்பினூடு இவ் ஆய்வினைச் செய்ய விளைந்துள்ளேன். இதில் அரசியல் கேலிச்சித்திரத்தினை மையப்படுத்தியதானது ஏனைய வெளிப்பாட்டுக் கலைகளின் மூலம் இவ் ஆய்வின் எல்லைகள் மேலும் விரிந்து செல்லக்கூடும் என்ற காரணத்தினால் அவைகளைத் தவிர்த்துள்ளேன். இவ் ஆய்வு முரண்பாட்டின் தாக்கங்களும், இதன்பால் எழுந்த கேலிச்சித்திரப் படைப்பின் வெளிப்பாடும், பெறுமானமும் என்பவற்றை முன்னிறுத்தி அறிஞர்கள், வரலாற்றாசிரியர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள் வெளிப்படுத்தியுள்ள ஆதாரங்களினூடும், நேர்காணலினூ டும் எனது வாதங்கவளையும் கொண்டு இவ் ஆய்வினை மேற்கொண்டுள்ளேன். இதில் பல ஓவியத் தரவுகள் கிடைக்காமையினாலும், போரினால் அழிவடைந்தும், அழிக்கப்பட்டும், புலம்பெயர்ந்தும், போன காரணங்களினால் சில தரவுகள் விடுபட்டுப் போயும் உள்ளன. எனினும் இன முரண்பாட்டின் மையத்திலிருந்து முகிழ்ந்த காட்டூன் ஓவியங்களை முழுந்தளவிற்கு இதில் தொகுத்துள்ளேன்.

போருடன் இணைந்த வாழ்வு ஈழத்தமிழினத்திற்கு நன்கு பரீட்சிய மானது. அதன் விளைவுகளை, வேதனைகளை ஈழத்தமிழினம் நன்கு அறிந்துள்ளது. தவிரவும் உலகெங்கிலும் நடைபெற்ற கொடூரப் போரின் விளைவுகள், இனமுரண்பாட்டின் கொடூரங்கள், அதற்காக கொடுத்த விலைகள் அளப்பரியது. பண்பாட்டு மையங்களின், மனித இருப்பை, சுயத்தை, கலாசாரத்தினை, அறிவை என அனைத்தையும் இப்போரும், இனவன்முறையும் உருத் தெரியாமல் சிதிலமாக்கியுள்ளது. இதன் பால் எழுந்த இதன் கொடூரத்தை வர்ணித்த, இப்போருக்கும் இனவன்செயல்களுக்கும் எதிர்ப்பிரசாரமாக அமைந்த காட்டூன் ஓவியத்திணை வாதப்பிரதி வாதங்களை முன்னிறுத்தி "இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்"எனும் இவ் ஆய்வு அமைகிறது. (தொடரும்...)



# இசை ஞாயிறு

காவலூர் இ.விஜேந்திரன்


த.றொபேட்


ஸ்ரீ.மதுராங்கி


அ.அமிர்தசிந்துஜன்


சி.மதுஷா


ரஜீவன்


மு.துஸ்யந்தன்


மு.அனுசித்திரா

ஈழத்தமிழருக்கென இசைவான இசைப் பாரம்பரியத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற அதீத முயற்சியின் பலனாக ஈழத்தின் தமிழிசை என்ற இசைவிருந்து படைக்கப்பட்டுள்ளது. தமிழ் மண்சார்ந்து சிந்தித்து அதற்கு அழகிய செயல்வடிவம் கொடுத்துள்ளார் இயலிசையாளர் றொபேட் அவர்கள். எம்மவர்களின் கலை கலாசார, பண்பாட்டு வடிவங்களைப் பேணி அவற்றைப் பயில்வதுடன் பயிற்றுவிக்க வேண்டும். அது சார்ந்த கருத்தாடல்களில் ஈடுபட்டு ஆரோக்கியமான கலைச்செழுமையில் தொடர்ந்தியங்க வேண்டுமென்ற பெருவிருப்புடன் பணியாற்றி வருபவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அருட்சேகரன் அவர்கள்.

இவர் தன் இளவல்களுடன் ஈழத்தின் தமிழ் இசையை அரங்கப்படையல் செய்தமை இசையாளர்களுக்கு மட்டுமன்றி அரங்கில் இருந்த அனைவருக்கும் அது அருமந்தாக அமைந்தது என்றால் மிகையாகாது. ஈழத்தின் இசைவரலாற்றில் முக்கிய தடம் பதிந்துள்ள இந் நிகழ்வானது குரலோசை - நுண்கலைகளின் தாயகம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வாய்க்குள் வரமறுக்கும் கவிவரிகளுக்கு கச்சிதமாக இசையமைத்து மிக லாவகமாகப் பாடுவதற்கு இசைஞானமும் நிறைந்த பயிற்சியும் தேவை. இவற்றுடன் தமிழ் இசை மீதான அலாதிப் பிரியமும் காரணம் என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் மங்கள விளக்கு, தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது ஈழத்தின் தமிழிசை அரங்கேற்ற நிகழ்வு. இந்நிகழ்வுக்கு கிரீடம் வைத்தது போல் தமிழ்த்தாயின் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டது. தமிழ்த்தாயின் பாதங்களில் அமர்ந்து இசை அர்ச்சனையை அரங்கேற்றியமை நிகழ்வுக்கு மேலும் சிறப்பையும் அழகையும் ஆனந்தத்தையும் கொடுத்தது. இசைச்சரங்களின் சக்திமிக்க கோர்வையால் இசைமாலை என்ற ஈழத்தின் தமிழிசை மா மாலையால் அரங்கை ஆட்கொண்டமை அரங்காண்டவர்களின் அதீத திறமைக்குச் சான்றாகின்றது.

தான் வரித்துக் கொண்ட துறைமீது தனக்கிருந்த ஆளுமையை செம்மைப்படுத்திச் செயற்படுத்த தன் இளவல்கள் ஒன்பது பேருடன் இசையாட்சி புரிந்தார் றொபேட் அவர்கள். எட்டு மணித்தியாலங்களாக இடம்பெற்ற இசைச்சமர் இசைஞாயிறாக அமைந்தமை, இவர் இசைமீது கொண்ட மோகமும் இசை இவரை ஆட்கொண்டமையும் காரணம் என்றால் அது மிகையாகாது.

ஈழத்துக் கவிராயர்கள் 30 பேரின் 100 பாடல்களின் அரங்காற்றுகை நிகழ்வில் 90 பாடல்களிற்கான இசையை வடிவமைத்தவர் தவநாதன் றொபேட் அவர்கள். 26 துணை இசைக் கலைஞர்களுடன் 10 இசையாளர்கள் ஈழத்தின் தமிழிசையை அர்ச்சனை செய்தனர். 100 பாடல்களும் 21 இசை அரங்குகளாக அரங்கு கண்டமை பெரும் சிறப்பு என்றே கூறவேண்டும்.

முதலாவது இசையரங்கில் இனிதான தமிழ் பாடவே ... என்று தொடங்கும் பாடல் ஆதிதாளத்தில் பகுதாரி இராகத்தில் அமைந்தது. மிக அற்புதமாக சொற்கள் தெறிக்க இசையூற்றைத் தட்டிவிட்டவர் றொபேட் அவர்கள். இசையால் கட்டுண்டு அரங்கில் அமர்ந்திருந்தோர் இசை அமிர்தப் பெருக்கில் இன்புற்றுத் திளைக்கத் தொடங்கினர்.

## ஈழத்தின் தமிழிசை ஓர் நோக்கு

சங்கப்புலவர் பூதந்தேவனார், அகத்தியர் அடிகள், யோக சுவாமிகள், அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், பொன்னாலை சிவகுருநாதன், ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர், வீரமணி ஐயர், நீ. மரியசேவியர் அடிகள், கல்லடி வேலுப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் என நீண்டுசெல்லும் கவிராயர்களின் கவி வரிகளே இருபத்தொரு இசையரங்குகளையும் ஆட்கொண்டது. இருபத்தோராவது இசையரங்கில் 99 மற்றும் 100 வது பாடலும் மங்கள இசையும் இடம்பெற்று அரங்கேற்ற இசைச்சமர் முடிவுக்கு வந்தது.

அரங்கேற்ற நிகழ்வை மேலும் சிறப்பிக்கும் வகையில் இரு நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ்த்தாயின் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டமையும் சிறப்புமலர் வெளியீடும் ஆகும். தமிழ்த் தாய்க்கென தனி அழகைக்கொடுத்து 6 அடி உயரமான சிற்பம் அமைக்கப்பட்டது. பரிதாசன முறையில் அமர்ந்திருக்கின்ற தமிழ்த்தாயின் வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் ஏடும் காட்டப்பட்டுள்ளது. தலையில் கிரீடம் மற்றும் ஆபரணங்கள் அணியப்பட்ட நிலையில் வடிவமைக்கப்பட்டது. தமிழ்த்தாய்க்கென புதிய உருவையும் அழகிய வடிவில் அன்பு, சாந்தம், ஞானம் போன்ற உணர்வுகள் வெளிப்படும் வகையிலும் செதுக்கப்பட்டுள்ளது.

சோழாஸ் சிற்பாலயக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட இச்சிற்பம் இலங்கையிலுள்ள மிக உயர்ந்த உயர்வான சிற்பமாக நோக்கப்படுகின்றது. தற்போது தமிழ்த்தாயின் சிலை குரலோசை - நுண்கலைகளின் தாயகம் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நான் அறிந்த வகையில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையிலும் வடக்கு மாகாண சபையிலும் சிறிய அளவு களில் தமிழ்த்தாய்க்கு சிலை வைத்துள்ளனர்.

அரங்கேற்ற விழா சிறப்பு மலர் தமிழ்த் தாயின் அட்டைப்படத்துடன் 64 பக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்டது. துறைசார்ந்தவர்களின் வாழ்த்துரைகள் குரலிசையாளர்கள் மற்றும் துணை இசைக்கலைஞர்களின் அறிமுக அனுபவக் குறிப்புடன் 100 பாடல்களின் ஆரம்ப வரிகளும் இயல் அழகு, இசை அழகு மற்றும் தாளம், இராகம் என்பன குறிப்பிட்டு நூல் சிறப்பாக தொகுக்கப்பட்டிருந்தது. இம்மலர் அரங்கில் இருந்த அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் 100 பாடல்களையும் முழுமையாக உள்ளடக்கி வெளியிட்டிருக்கலாம் என்ற கருத்தை றொபேட்டிடம் முன்வைத்த போது மிக விரைவில் 100 பாடல்களின் தொகுப்பாக சுரக்குறிப்புக்களுடன் இந்நூல் வெளிவரவுள்ளதாகவும் அதற்கான பாணிகளில் தான் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.


100 பாடல்களில் 14 பாடல்கள் அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவருடையது. 08 பாடல்கள் யோக சுவாமிகளுடையது. எம்.கே.ஏரம்பமூர்த்தியின் 04 பாடல்கள் என குறிப்பிட்ட சிலரின் பாடல்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றைக் குறைத்து வேறு கவிராயர்களின் பாடல்களையும் உள்ளீர்த்திருந்தால் இத்தொகுப்பு இன்னும் சிறப்படைந்திருக்கும் என்பது நூலை அவதானித்த போது அறிய முடிகின்றது.

நிறுவனம் சார்ந்த அல்லது அரச அனுசரணையில் நடாத்தக்கூடிய நிகழ்வை தனிமனிதனாக நின்று நிறைவேற்றியமை சாதனைப்பதிவாகியுள்ளது. இவ்வாறான பிரமாண்ட படைப்பை வெளிக்கொணர்வதில் சில சங்கடங்களை எதிர்கொண்டதாகவும் அதனை சவாலாக ஏற்று மிகச் சிறப்பாக இந்நிகழ்வை வெளிப்படுத்தி வெற்றி பெற்றதாக றொபேட் குறிப்பிடுகிறார். தமிழ் இசை தொடர்பாக இரண்டு வருடங்களாக பயிற்சி வழங்கப்பட்டது. இக்காலத்தில் எமது செயற்பாட்டை பலர் பல்வேறு விதமாக விமர்சித்தனர். இது இவ்வாறு இருக்க துறைசார்ந்தவர்கள் நேரடியான எதிர்ப்பை வெளிக்காட்டாது. ஆதரவு தராது செயற்பட்டமை சில நேரங்களில் சங்கடமாக இருந்ததென தன் ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்டார்.

தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற பாரதியின் வரிகளிற்கு செயல்வடிவம் கொடுத்துள்ள றொபேட் அவர்கள் துறை சார்ந்து இன்னும் பல ஈழத்தமிழ் கலை வடிவங்களுக்கு உயர்வான உயிர்கொடுத்து அழகான செயல்வடிவம் கொடுக்கவேண்டும் என்பது துறைசார்ந்தவர்களின் விருப்பம் மட்டுமன்றி காலத்தின் தேவையும் கூட எம் இனத்தின் தேவை அறிந்து தன் இளவல்களுடன் இசையாட்சிபுரிந்த றொபேட் அவர்களை மீண்டும் ஒருமுறை பாராட்டுவது அவருக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் நாம் செலுத்தும் நன்றியாகும்.


சங்கீதவாணி


ப.சாரங்கன்


க.சுடரோன்

ஐ.பீ.எல் ஒரு மீள்பார்வை

ஏ.ஜே.ஞானேந்திரன்

# அடங்கிய அதிரடி ஆட்டங்கள்




இன்றைய நாட்களில், "அவசர உணவு களை"(மாக்டொனால்ட்ஸ் , பேகர் கிங் போன்ற உணவுகளை) பலரும் விரும்பி உண்ணத் தலைப்பட்டிருப்பது போல, கிரிக்கெட் விளையாட்டிலும் டெஸ்ட் போட்டிகளின் பார்வையாளர்கள் அருகி, ஒரு நாள் ஆட்டங்களில் மோகம் தலைக்கேறியவர்கள் அதிகரிக்கும் நிலையே உருவாகி இருக்கின்றது. இந்தியாவில் "ஐபிஎல்" என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்தியன் பிரிமியர் லீக் தொடரை ஆரம்பித்து , வருடாவருடம் இடம்பெறும் இந்த அதிரடி ஆட்டத் தொடர் உலகப் புகழ்பெற்றதாகி இருக்கின்றது. இந்திய கழகங்கள் எட்டு இதில் மோதுகின்றன. ஏலத்தில் உலக நாட்டு கிரிக்கெட் வீரர்களை விலைக்கு வாங்கி, உள் நாட்டு வீரர்களையும் கலந்து அணிகளை உருவாக்கி. ரி20 ஆட்டங்கள் நடாத்தப்படுகின்றன. பிரபல்யமான வீரர்கள் பெருந்தொகைப் பணம் கொடுத்தே வாங்கப்படுகிறார்கள். உதாரணத்திற்கு 2,656,250 டொலர் தொகைக்கு அணித் தலைவராக பங்களூர் றோயல் சாலஞ்சேர்ஸ் கழகத்தினால் விராத் கோலி வாங்கப்பட்டுள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம்.எஸ். தோனியின் விலை ரூ.2,343,750. மும்பாய் இந்தியன் அணித் தலைவராக செயற்பட்ட றோகித் ஷர்மா வாங்கிய பணம் ரூ.2,343,750. டெல்ஹி காப்பிட்டல் கழகம் ரிஷாந் பான்டுக்கு கொடுத்த பணம் ரூ.2,343,750. ராஜஸ்தான் றோயல் கழகத்திற்காக விளையாடிய இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் வாங்கிய பணம் ரூ1,953,130. ஊதியத்தைப் பொறுத்த மட்டில், இந்த ஆண்டு முதல் ஐந்து நிலையில் இருப்பவர்கள் இவர்கள்!

### 2008இல் ஆரம்பம்

மார்ச் 27இல் நைற் ரைடேர்ஸ் பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் ஆரம்பித்த மோதல் சென்ற ஞாயிறுவரை -அதாவது மே 5 வரை தொடர்ந்தது. இறுதி மோதலில் பங்குபற்றிய அணிகள் மும்பாய் இந்தியன் அணி, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. 2008இல் இந்த 20 ஓவர் அதிரடி ஆட்டத் தொடர் முதற்தடவையாக இடம்பெற்ற போது ராஜஸ்தான் றோயல் அணிதான் சாம்பியனாகியது. இந்த வருடம் இறுதி மோதலுக்கு தெரிவாகிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 2010, 2011, 2018 ஆகிய ஆண்டுகளில் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. ஆனால் இந்த வருடம் இறுதி மோதலில் விளையாடி . நான்காவது தடவையாக கிண்ணத்தை தனதாக்கும் வாய்ப்பை சென்னையிடமிருந்து மும்பாய் பறித்துக் கொண்டு விட்டது.. ஏற்கனவே 2013, 2015, 2017 ஆகிய ஆண்டுகளில் சாம்பியனாகிய மும்பாய் இந்திய அணிக்கு இது நாலாவது வாய்ப்பு!

### பஞ்சமில்லாத வாணவேடிக்கைகள்

வழக்கம் போலவே இந்த வருடமும் மைதானத்தில் "வாணவேடிக்கைகளுக்கு" பஞ்சம் இருக்கவில்லை. ஆட்டத்தின் போக்கை மாற்றும் இரு அதிரடி ஆட்டக்காரர்களை மறக்க முடியாது. கல்கத்தா நைற் ரைடேர்ஸ் அணிக்காக விளையாடிய, மேற்கு இந்திய அணி வீரர் அன்டரே ரஸலை எவரால் மறக்க முடியும்? "உன்னால் முடியும் தம்பி" என்று உரக்கச் சொல்லி , ஓங்கி விளாசுபவர் இந்த ரஸல். இவர் களத்தில் குதித்தால் சிக்ஸர் மழை பொழியும். இந்தச் சுற்றுப் போட்டியில் மொத்தம் 52 சிக்ஸர்கள் அடித்து முதலிடத்தில் நிற்கிறார் இவர். கிண்ணத்தை மும்பாய் இந்தியன் அணி வென்றதற்கு, பாரிய பங்களிப்பை செய்தவர்களில் முன்னிற்பவர் பன்முக ஆட்டக்காரரான கார்த்திக் பாண்டியா. குறுகிய காலத்தில் இந்திய அணியில் ஒரு பலம் வாய்ந்த விளையாட்டு வீரராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள இவர் இக்கட்டான சமயங்களில் களத்தில் குதித்து. அணியைப் பத்திரமாக கரை சேர்த்து விடும் அதிரடி ஆட்டக்காரர். இந்த அணி சாம்பியனாகியமைக்கு இன்னொரு தூணாக இருந்தவர் பந்து வீச்சாளரான பும்ரா. இவர் பந்து வீசும்போது, ஓட்டங்கள் எதிரணியினரால் சிரமப்பட்டே சம்பாதிக்கப் படும் என்பதோடு, திடீரென விக்கட்டுகளை வீழ்த்துவதும் இவர் தனிச் சிறப்பு.



### நெருக்கப்பட்ட குரல்வளைகள்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் சீரான தோனியின் துடுப்பாட்டமும், தாஹீரின் (தெ.ஆபிரிக்கா) சுழல் பந்து வீச்சுமே சிறப்பம்சங்கள். கடைசி இரு ஆட்டங்களில் தோனி சோபிக்காதது குறை தான். ஆனால் தாஹீரின் தொடர்ச்சியான நெருக்குதல்கள், எதிரணித் துடுப்பாட்டக்காரர்களின் குரல் வளைகளை நெருக்கத் தவறவில்லை. மொத்தமாக 26 விக்கட்டுகளை வீழ்த்தி, இந்தச் சுற்றுப் போட்டியில் முதலிடத்தைப் பிடிப்பவர் இவரேதான்! டேவிட் வார்னர் அதிக பட்ச ஓட்டங்களாக 692 ஓட்டங்கள் எடுத்து உச்சத்தில் இருக்கிறார். அடுத்து 593 ஓட்டங்கள் அடியெடுத்து இரண்டாவது இடத்தைப் பிடிப்பவர் கே.எல்.ராகுல். மூன்றாவது இடம் 529 ஓட்டங்கள் எடுத்த குயின்ரன் டி கொக்கிற்கு கிடைக்கின்றது. மிக அதிகமாகப் பணம் கொடுத்து வாங்கப்பட்ட இங்கிலாந்தின் பன்முக ஆட்டக்காரரான பென் ஸ்டோக்ஸின் ஆட்டம் இந்த வருடம் சோபிக்கவில்லை. பந்து வீச்சிலோ, துடுப்பாட்டத்திலோ இவர் பங்களிப்பு குறிப்பிடும் படியாக இல்லை." வாங்கிக் கட்டும்" ரகமாக ரசிகர்களுக்கு இருந்து வந்த நம் நாட்டு மலிங்கா வீசிய , இச்சுற்றுப்போட்டியின் இறுதி ஓவர், இவர் தலையை தப்ப வைத்திருக்கின்றது. வில்லனாக இருந்தவர் நாயகனாக , தோளில் தூக்கி வைத்து கொண்டாடப்பட்டிருக்கிறார்.

### மதிப்புக்குரிய ஒரு ஓட்டம்

"வெற்றியை நிர்ணயிப்பது ஒரு ஓட்டம்" என்று படு திரில்லான இறுதி மோதல் விருந்து ரசிகர்களுக்கு கிடைத்திருப்பது கொண்டாட்டந்தான். கடைசி ஓவரில் வீசப்பட்ட கடைசிப் பந்து வெற்றி தோல்வியை மட்டுமல்ல, வெற்றிக் கிண்ணம் யாருக்கு என்பதையுமல்லவா தீர்மானித்திருக்கின்றது. ஹைதராபாத்தில் நடந்த 12வது ஐபிஎல் ., தொடரின் இறுதிப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுகள் மொத்தமும் இரண்டே இரண்டு நிமிடங்களில் விற்றுத் தீர்ந்துள்ளன. இம்முறை இந்திய ரூ.1500, ரூ.2000, ரூ.2500 மற்றும் ரூ.5000 விலைகளுக்கான டிக்கெட் விற்பனை மட்டுமே "ஆன் லைன்" மூலம் விற்பனை செய்யப்பட்டது. இறுதி மோதலில், கோப்பையை வென்ற மும்பாய் இந்தியன் அணிக்கு ரூ. 20 கோடி (இந்திய பணக் கணக்கில்) பரிசாக வழங்கப்பட்டது. இதில் 50 சதவீத தொகை அணி நிர்வாகத்துக்கும் மீதமுள்ள 50 சதவீத தொகை வீரர்களுக்கு பிரித்து வழங்கப் படும். இரண்டாவது இடம் பிடித்த சென்னை அணிக்கு ரூ. 12.5 கோடி பரிசாக வழங்கப்பட்டது. மூன்றாவது இடம் பிடித்த டெல்லி அணிக்கும், நான்காவது இடம் ஹைதராபாத் அணிக்கும் ரூ. 10.5 கோடி மற்றும் ரூ. 8.5 கோடியும் வழங்கப்பட்டது. கோடி கோடியாகப் பணம் புரளும் ஒரு கிரிக்கெட் தொடர் இது என்பதில் சந்தேகமே இல்லை. இன்றைய விளையாட்டு வீரர்கள்- அது டென்னிஸாக இருந்தாலென்ன, காற்பந்தாட்டமாக இருந்தாலென்ன-பணத்தில் புரள்கிறார்கள் என்பதை எவருமே மறுப்பதற்கில்லை. ■



# அங்கதன் பதில்கள்





■ மத அடிப்படைவாதம் எப்போது உருவாகின்றது?

● ஆன்மீகவாதிகள் அறநியல் வாதிகளாகும் போது

கி.மைதிலி, அளவெட்டி.

■ உயிர்த்த ஞாயிறு நிகழ்வுகள் இப்படியாகிவிட்டதே!

● ஆமாம் மனிதம் மரித்த நாளாகிவிட்டது துயரம்!

எம்.சுதன், சங்கானை.

■ நாட்டில் அவசரகால நிலைமை அவசரமாக பிரகடனம் செய்தமை குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

● நாட்டில் அவசரமாக தீர்க்கவேண்டிய பிரச்சினைகளை அலட்சியம் செய்துகடப்பில் போட்டமையே அவசரகால நிலை பிரகடனம் அவசியமானதற்கு காரணம்.

செ.நிசாந்தன், ஆனைக்கோட்டை.

■ நமது தமிழ் அரசியல் வாதிகள் என்னசெய்துகொண் டிருக்கிறார்கள்?

● மாற்றுக் கட்சி அரசியல்வாதிகளின் அறிக்கைகளை வாசிப்பதும் அதற்கான பதிலை யோசிப்பதும் மற்ற நேரங்களில் வெறுமனவே சுவாசிப்பதுமாக இருக்கிறார்கள்.

எ.காயத்திரி, கலட்டி.

■ தமிழ் சின்னத்திரை கதாபாத்திரங்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

● எல்லாரும் ஆரவல்லி, சூரவல்லி, அலங்கார வல்லி கதையில் வரும் வில்லிகளாக இருக்கிறார்கள்.

வ.தாரணி, நல்லூர்.

■ மதப்பற்று நல்லதா? கெட்டதா?

● எதிலும் பற்றற்ற தன்மையைக் கொண்டவனே உண்மையான மதவாதி.

ம.கல்யாணி, ஏழாலை.

■ பொதுபலசேனா – சிவசேனா இரண்டு அமைப்புக்களை யும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



● மதம் படித்து மதம் பிடித்தவர்களின் மதவாத அமைப்புக்கள்.

வை.துவாரகன், வவுனியா.

■ ஈழத்தமிழர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

● கடந்தகால அனுபவங்களில் இருந்து பலம் காத்துக்கொள்ளாது சமகால நாற்காலிக் கனவுகளை லயித்திருக் கும் நிலைமை களில் வழிகாட்டலில் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

வெ.துலக்க்ஷன், மன்னார்.

■ தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கான தீர்வுத்திட்டம் வருமாறு?



● ஒருவரையொருவர் தீர்த்துக்கட்ட திட்டமிட்டு செயற்படும் அரசியல் வாதிகளால் எந்தத் தீர்வுத் திட்டமும் வருமா, விடையல்லா வினாதான்.

சு.கனகராஜ், திருகோணமலை.

■ வேட்பாளர் – வாக்காளர் இருவரதும் கடமைகள் என்ன?

● வாக்குறுதி அளிப்பது வேட்பாளரின் கடமை. அதை நம்பி வாக்களிப்பது வாக்காளரின் கடமை. இதுதான் நவீன ஜனநாயகத் தத்துவம்.

தே.மணியம், வட்டுக்கோட்டை.

■ அடுத்த ஆண்டு தேர்தல் திருவிழாக் கள் அதிகமாமே!

● ஆமாம். வேட்பாளர் தம் பத்தர்கள் எல்லாம் வாக்காளர் தெய்வங் களை வணங்கித் துதிக்கும் காலம்.

ஐ.சுந்தரி மட்டக்களப்பு,



■ அடுத்த வருசம் தண்ணிப் பஞ்சம் வரும் போல கிடக்கு...

● வராது தேர்தல் கருமேகம் சூழத் தொடங்கி விட்டது. பெருங்குடி மக்களின் பஞ்சத்தை அரசியல் வாதிகள் கட்டாயம் தீர்த்து வைப்பார்கள்.

எல். பிரியங்கா, துன்னாலை மேற்கு.

■ அடுத்த நாட்டின் தலைவராக மக்கள் யாரைத் தேர்ந் தெடுப்பார்கள்?

● இனவெறி, மதவெறி, மொழி வெறி யாவும் தலைக்கேறிய ஒருவரைத் தவிர வேறு யாரை?

செ.அந்தோனி, பாசையூர்.

■ முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து ஒரு தசப்த காலமாகி விட்டதே?

● ஆம், நமது தமிழ் தலைவர்களுக்கு அது இன்னமும் தமது அரசியல் பசியை தீர்த்துக் கொள்ள பயன்படும் சுவாலாக இருப்பதுதான் மிகப்பெரிய அவலம்.

பு.வேலுப்பிள்ளை, மாங்குளம்.

■ திருமணங்கள் சொர்க்கத்திலா நிச்சயிக்கப்படுகின்றது?

● அது அந்தக்காலம்... இப்போது முகப் புத்தகத்தில் (Face Book) நிச்சயிக்கப்படுகின்றது.

சி.சஞ்சிகா, தின்னவேலி.

■ தற்போது தமிழ்த்திரை இசையின் தரம் எப்படி உள்ளது?

● திரை இசையில் இனிமை இரைச்சலாகி விட்டது.

த.அபிநயா, வவுனியா.

■ அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது; என ஔவையார் பாடியது சரியா?

● ஔவை இப்போது இருந்தால் அரிது அரிது மானிடராக வாழ்தல் அரிது என்றுதான் பாடியிருப்பார்.

க.கிசோர், சாவகச்சேரி.



■ யாழ். நகரம் எப்படியுள்ளது?

● வாகனதாரிகள் பறக்கிறார்கள், பாதசாரிகள் இறக்கிறார்கள்... நகரம் விபத்துக்களின் விளை நிலமாகி வருகிறது.

பெ.றேய், கந்தர்மடம்.

■ ஆன்மீக வளர்ச்சி எப்படி உள்ளது?

● ஆண்டவன் அருள்பெற அன்னதானம் கொடுத்து அடியவர்களை அன்போடு அழைக்க வேண்டிய நிலையில் உள்ளது.

ந.வதனி, கொய்யாத்தோட்டம்.

■ வரப்போகும் தேர்தல்களில் ஏதாவது மாறுதல் வருமா?

● மக்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் தரும் மாறுதல் வருமா என்பதுசந்தேகம் தான். வரும் ஆனா வராதுஎன்ற நிலை தான்.

எ.சுரேஸ், பூந்தோட்டம்.

■ நமது நாட்டின் இன்றைய நிலைவரம் எப்படி இருக்கிறது?

● கலவரம் நிறைந்ததாக இருக்கிறது. இது இந்த நாட்டிற்கு வரமா? சாபமா? தெரியவில்லை.

ம.நோயல், திருகோணமலை.

■ மக்கள் மத்தியில் இன்றைய வாழ்க்கை சலிப்பைத் தருவதாக உள்ளதே!?

● இருக்காதா? பள்ளிவாசல் பக்கம் போகவும் பயம், பள்ளிக்கூடப்பக்கம் போகவும் பயமென்றால்... 'ஆண்டவா; இது என்ன சோதனை'.

ச.கஸ்த்தூரி, நல்லூர்.



■ மதவாதிகள் எதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்?

● புதிய புதிய குண்டு வெடிப்புக்களுக்கான கண்டுபிடிப்புக்களை பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்...!

கி.மிதுலாயினி, யாழ்ப்பாணம்.

■ நாம் காலத்தை கவனமாக பயன் படுத்துகிறோமா?



● முன்பு தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் தொலைத்துக் கொண்டிருந் தோம் – இப்போது தொலைபேசிக்குள் தொலைத்துக் கொண்டிருக் கின்றோம்.

உ.அபர்னா, உடுப்பிட்டி,

■ மானுடம் பயனுற வாழ என்ன செய்ய வேண்டும்?

● நிச்சயமாக ஆன்மீக வாதியாகவோ அரசியல் வாதியாகவோ மாறக்கூடாது. மனிதனாக வாழ்ந்தால் போதுமே போதுமானது.

தே. ஆனந்தம் அல்லைப்பிட்டி.

**அங்கதனிடம்** பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


தூமான கேள்விகளை அனுப்புவோருக்குப் 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.


பெயர் :.................................................

முகவரி :...............................................

:.................................................

தொலைபேசி இல. .....................................










தீபம்
இது உங்களுக்கான
உங்களின் பத்திரிகை !

# சிறி பாண்டியன் சுவையூற்று



வற்றாப்பளை கண்ணகி அம்மன்
வருடாந்த உற்சவவிழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.



பல்சுவை உணவுகளையும் சுவைத்து மகிழ்ந்திட
இங்கே வருகை தாருங்கள்

1ஆம் வீதி, கனகபுரம், கிளிநொச்சி.

---

## கிளிநொச்சி பனை தென்னை
## வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

உங்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு எமது தயாரிப்புக்கள்

வற்றாப்பளை
கண்ணகி அம்மன்
வருடாந்த உற்சவவிழா
சிறப்புற
வாழ்த்துகின்றோம்.





நீண்டகால வாழ்வுக்கும் நீரிழிவு நோய்க்கும் சிறந்த அருமருந்தான
வெல்லக்கட்டி தயாரிப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகளும்
எமது உற்பத்திப் பொருட்களை விலக்கழிவுடன் எமது தலைமைக் காரியாலயமான
ஏ9 வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி என்னும் முகவரியிலும்
மற்றும் கண்டாவளை பகுதியில் அமைந்துள்ள வெளிக்கண்டல் வெல்ல உற்பத்தி
தொழிற்சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
தொ.பே : 021 228 3635, 021 492 4218

---

# சுதன்

## பல்பொருள் விற்பனை நிலையம்

**Suthan Hardware & Multi Trade Centre**

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தொ.பே : 077 463 1579

வற்றாப்பளை கண்ணகி அம்மன்
வருடாந்த உற்சவவிழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.



அனைத்து வகையான கட்டிடப் பொருட்களையும்,
மற்றும் அனைத்து வகையான
உபகரணங்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்

---



வற்றாப்பளை கண்ணகி அம்மன்
வருடாந்த உற்சவவிழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

# செந்தமிழ்க்குமரன்
# பல்பொருள் வாணிபம்

**SENTHAMILKUMARAN MULTI SHOP**

அனைத்து வகையான பலசரக்குப் பொருட்களையும்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்

முல்லைத்தீவு வீதி
தண்ணீரூற்று,
முள்ளியவளை

Tel : 077 288 1874

இந்தப் பத்திரிகை இல. 10, வில்லவம் தெரு, கொழும்புத்துறை
முகவரியிலுள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால்
19.05.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.